விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 08 திங்கட்கிழமை (21.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# மகிந்தவும் சகாக்களும் கள்ளம் மிகுந்தவர்கள்



## சாராயத்தில் ஆதரவாளர்களை சேர்க்கின்றனர்; கடுமையாக சாடுகிறார் சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு) கடந்த 17ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடந்த மகிந்த ஆதரவு அணியினரின் கூட்டத்தில் ஆதரவாளர்களை பெருமளவில் காண்பிப்பதற்காக சாராயப்போத்தல்களை வழங்கியும் சாப்பாடுகளைக் கொடுத்து பஸ்களில் ஏற்றியும் ஆட்களை வலிந்து சேர்த்து மகிந்த தரப்பினர் கள்ளத்தனம் புரிந்ததாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மேற்படி கூட்டத்தில் பங்கேற்ற சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை கட்சித்தலைமை மேற்கொள்ளும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## நண்பர்களுடன் குளித்த இளைஞன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோரைமோட்டை ஆற்றுப் பகுதியில் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் தவறி நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

புனரமைப்பு பணிகளுக்காக நீர் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதியில் குளிப்பதற்காக சக நண்பர்களுடன் மலையாளபுரம் பகுதியைச்சேர்ந்த பிரஸ்தாப இளைஞன் சென்றுள்ளார்.

குளித்துக்கொண்டிருந்த வேளை குறித்த இளைஞன் நீரினால் அடித்து செல் லப்படடதாகவும், அதன் பின்னர் குறித்த இளைஞனை தேடும் நடவடிக்கை இடம்பெற்ற போதிலும் குறித்த இளைஞன் சடலமாகவே மீட்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இளைஞரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக் 24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ வீரர்களை சர்வதேசம் விசாரணை செய்ய விடமாட்டோம்

### உள்ளக ரீதியில் விசாரிப்போம் என்கிறார் சம்பிக்க




(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தில் இருக்கும் வரையில், எந்தவொரு சூழ்நிலையிலும், இராணுவ வீரர்களை சர்வதேச சமூகம் விசாரணை செய்ய அனுமதிக்காது என்று அந்தக்கட்சியின்தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் நேற்று முன்தினம் நடந்த ஜாதிக ஹெல உறுமயவின் மக்கள் மன்றம் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் இன்னமும் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் முற் 24ஆம் பக்கம் பார்க்க....

## 'கோத்தபாயவே கொலைகாரன்'



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை கொலைகாரன் என முன்னாள் அமைச்சர் 24ஆம் பக்கம் பார்க்க....

## படை அதிகாரிகள் பலரை முகமாலை சமரில் இழந்தோம்

### வெற்றியின் பின்னடைவை தெரிவிக்கிறார் சரத்

(கொழும்பு)

2006ஆம் ஆண்டு முகமாலையில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் 150ற்கும் மேற்பட்ட படை அதிகாரிகளை இராணுவம் இழந்ததாக தெரிவித்த பீல்ட் மார்ஷலும் அமைச்சருமான சரத் பொன்சேகா, யுத்தத் 24ஆம் பக்கம் பார்க்க....



## பல்கலை. வெளிவாரி பட்டப்படிப்புக்களை 4 வருடத்துக்குள் நிறைவு செய்யுங்கள்

### புதிய பாடத்திட்டம் அறிமுகமாகவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளவர்கள் எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் பட்டப்படிப்புக்களை நிறைவு செய்து கொள்ள வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்றையதினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதிகலையரங்கில் நடைபெற்றது அதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 24ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## கூட்டு எதிரணியின் கூட்டத்தில் பங்கேற்ற கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை

### சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில்கூட்டு எதிர்கட்சியினர் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியின் யாப்புக்கு அமைய நடவடிக்கை எடுக்க அக்கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சரு 24ஆம் பக்கம் பார்க்க....



## (சா/த) பரீட்சை

### பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்க முடியும்


(கொழும்பு)

2015 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண. தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வுக்கு உட்படுத்த எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக 24ஆம் பக்கம் பார்க்க....

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இந்து மதகுரு ஒருவர் காயம்

## வாகனங்களுக்கும் சேதம்





(கோப்பாய்)

கோப்பாய் வீதி உரும்பிராய் சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இந்து மதகுரு ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் வீதி வழியாக உரும்பிராய் பயணித்துக்கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிளில் ஒன்று கோப்பாய் வீதியில் இருந்து பிரிந்து செல்லும் ஒழுங்கை ஒன்றுக்குள் திரும்பிய வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

ஒரு மோட்டார் சைக்கிளில் பெண் ஒருவரும் மற்றைய மோட்டார் சைக்கிளில் இந்து மதகுரு ஒருவரும் பயணித்த நிலையில் விபத்து சம்பவித்துள்ளது. குறித்த பெண்ணுக்கு காயங்கள் ஏற்படாத போதும் இந்து மத குரு சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இதே வேளை விபத்தில் சிக்கிய இரண்டு மோட்டார் சைக்கிளும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளதுடன் வீதி சமிக்ஞை புலகை ஒன்றும் சேதமடைந்துள்ளது. (செ-87)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

**சற்குணானந்தன்**


கல்வி கைலாசநாதன் உலகினிலே
ஆசிரியராய் அதிபராய் கோட்டக் கல்வி
அதிகாரியாய் வலிகாமம் வலயத்தின்
பிரதிக்கல்விப் பணிப்பாளராய்
வட மாகாண உதவிக் கல்விப்
பணிப்பாளராய்
சேவையாற்றி ஓய்வுபெற்ற
மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்.
மகத்தான உம்பணி
மக்களுக்காய் தொடரட்டும்...

(பணிநிலை ஓய்வு – 10.03.2016)

(3925)

தி. தவரத்தினம் - ஆசிரியர்
யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

## கண்ணீர் அஞ்சலி



**சந்தியாப்பிள்ளை சேவியர் வில்பிரட்**
(பாலசிங்கம்)

(அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய அருட்பணிச் சபை செயலாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.02.1950 | 20.03.2016 |

"உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

அன்னாரின் இழப்பையிட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய பங்கு மக்கள்
அல்லைப்பிட்டி

## மரண அறிவித்தல்

### திருமதி மனுவல் சாராள் பாக்கியம்

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த திருமதி மனுவல் சாராள் பாக்கியம் 20.03.2016 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் காலஞ்சென்ற எஸ்பீரியல் (முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர்) திருமதி பிலோமினா தேவதாஸ், சேவியர், அலன்றோஸ், சில்வெஸ்ரர், திருமதி லற்றீசியா மரியதாஸ், திருமதி றீசா மரியநாயகம் ஆகியோரின் தாயாருமாவார்.

இவரின் அடக்க ஆராதனை 56, சென். செபஸ்ரியன் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் 22.03.2016, செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற்று, அடக்கத்திற்காக பண்ணையிலுள்ள கிறிஸ்துநாதர் ஆலய கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை சபையார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பாஷையூர்,
யாழ்ப்பாணம். (3955)

தகவல் :-
மாறன் மரியநாயகம்
(பேரன்)

# மரண அறிவித்தல்

## திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம் 18.03.2016 வெள்ளிக்கிழமை 96ஆம் அகவையில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலம்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி பொன்னுப்பிள்ளை (சிங்கப்பூர்), சுப்பிரமணியம் (மாவிட்டபுரம்), தெய்வானைப்பிள்ளை(மாவிட்டபுரம்), திருமதி தங்கம் (மாவிட்டபுரம்), சங்கரப்பிள்ளை (சாவகச்சேரி), சின்னத்துரை(துரை-மாவிட்டபுரம்), திருமதி செல்லம்மா(முழங்காவில்), பரமகுரு (சின்னமணி-சாவகச்சேரி); கந்தசாமி(பயினா-மாவிட்டபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாவை.சேனாதிராசா (தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி, பாராளுமன்ற உறுப்பினர்), செல்வரத்தினம்(இளைப்பாறிய எழுதுவினைஞர், இ.போ.ச வட பிராந்திய அலுவலகம்), காலம் சென்ற இராசரத்தினம்(மாவிட்டபுரம்), தங்கராசா (ஜேர்மனி), செல்வமணி (மாவிட்டபுரம்),செல்வராணி(சுவிஸ்), இராஜேஸ்வரி(ரஞ்சி-சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத்தாயும் பவானி (மாவிட்டபுரம்), விஜயகுமாரி (மாவிட்டபுரம்), இன்பதேவி (ஜேர்மனி), சிவகுமார் (இளைப்பாறிய கிராம அலுவலர்), யோகேஸ்வரன்(சுவிஸ்), ஜெயரட்ணம் (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும்

கலைஅமுதன்(லண்டன்), ஆராஅமுதன், தாரகா, கௌசல்யா, விஜிர்தா, திருமாவளவன், கமலமோகன், அமுதினி, மயூரன், சிவஜனனி, பகீரதி(பிரதா), காலம் சென்ற பிரியா(ஜேர்மனி), அருள்விழி, இளமாறன்(சுவிஸ்), பிரசாந்தி, ரதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் காருண்யா, அபிநயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் லீலா பேக்கரி லேன், சண்டிலிப்பாயிலுள்ள அவரின் இளைய மகளான ரஞ்சியின் இல்லத்தில் 23.03.2016 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :-மாவை.சோ. சேனாதிராசா
மற்றும் குடும்பத்தினர்

(C-4079)

0094-0777373377
0094-212228776

# பழிவாங்கலை மாத்திரம் அரசு சரியாகச் செய்கிறது

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு


(கொழும்பு)

**அரசாங்கம் நிர்வாகத்தை சரியாகச் செய்யாது, பழிவாங்கலை மாத்திரம் சரியாக செய்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**

அப்புத்தளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது அபிவிருத்தியைக் காணமுடியவில்லை,



மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. புதிய அரசாங்கம் வாக்குறுதிகளை தாறுமாறாக மீறி வருகிறது என கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த அரச தரப்பினர் நாட்டை துரிதமாக அபிவிருத்தி செய்வதாக கூறியே ஆட்சிக்கு வந்தனர். ஆனால் வேகமாக பழிவாங்கி வருகின்றனர். இதை மட்டும் நன்றாக செய்கின்றனர் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்கள் கஷ்டத்தில் விழுந்துள்ளனர், சாப்பிட முடியாதுள்ளனர், இந்த அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால் நாட்டுக்கு என்ன நடக்குமோ தெரியாது. என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அவசியம் - துமிந்த அவசியமில்லை-மகிந்த

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட எவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையோ விமர்சிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும்கொழும்பு ஹைட் பார்க்கில் கூட்டு எதிர்க்கட்சி நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த பிரதிநிதிகள் குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பை கட்சியின் மத்திய செயற்குழுவிடம் ஒப்படைக்க உள்ளதாக கட்சியின் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக மத்திய செயற்குழு சமனான முறையில் முடிவு ஒன்றை எடுக்கும் எனவும் ஒழுக்காற்று விசாரணை அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார். (இ-5)

## 5 ஆண்டுகள் நிறைவடையும் வரை அரசை மாற்ற எவராலும் முடியாது

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

எவ்வாறான கோசங்களை முன்வைத்தபோதும் எதிர்வரும் 5 ஆண்டுகள் நிறைவடையும் வரை அரசாங்கத்தை மாற்றுவதற்கு எவராலும் முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் அம்பாறை பாலமுனை விளையாட்டரங்கில் இடம்பெற்ற 19 ஆவது முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் என்பன காரணமாக கூட்டங்கள் நடத்துவதற்கும் ஊர்வலங்களை மேற்கொள்வதற்கும் அனைவருக்கும் சுதந்திரம் உள்ளதாகவும், அதனை வழிநடத்தும் தலைவர்கள் வெள்ளை வான்களை அனுப்பி ஆட்களை காணாமல் செய்தது போன்று செய்வது தற்போதைய அரசின் கொள்கையல்ல எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எவ்வாறான கோசங்களை முன்வைத்தபோதும் எதிர்வரும் 5 ஆண்டுகள் நிறைவடையும் வரை அரசாங்கத்தை மாற்றுவதற்கு எவராலும் முடியாதெனத் தெரிவித்த ஜனாதிபதி. தோல்வியடைந்த அரசியல் சக்திகள் மேலும் தோல்விகளைத் தழுவி அரசியலில் இருந்து ஒதுங்கும் விதமாக எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் இந்நாட்டுக்குத் தேவையான சமூக, பொருளாதார மாற்றத்தை மேற்கொள்வதற்கு பாடுபடுவதாகவும் தெரிவித்தார். (இ-5)

## அரசு குறித்த விமர்சனங்கள் நியாயமற்றவை

அரசாங்கம் தொடர்பிலான விமர்சனங்கள் நியாயமற்றது என இராஜாங்க அமைச்சர் சஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள வாரஇறுதி பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் மாதமளவில் சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்கப்பெறும். இந்த உதவிகளை உரிய முறையில் பயன்டுத்த அரசாங்கம்நடவடிக்கை எடுக்கும்

எனவே, எந்தவிதமான சந்தேகமும் இன்றி அரசாங்கம் அபிவிருத்தி இலக்குகளை எட்டும். அரசாங்கத்தை விமர்சனம் செய்வதில் எவ்வித பயனும் கிடையாது.

அடிப்படையின்றி அரசாங்கத்தை விமர்சனம் செய்வதனால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மூன்றரைக் கிலோ கஞ்சா பறிமுதல்





(கரணவாய்)

இந்தியாவில் இருந்து சிறிய படகு ஒன்றில் கடல் மார்க்க மாக கடத்திவரப்பட்ட மூன்றரை கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் அதனை எடுத்துவந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவரையும் கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு பருத்தித்துறை கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான முறையில் சிறிய படகு ஒன்று வருவதை அவதானித்த கடற்படையினர் அதனைச் சோதனை செய்தபோது மூன்று பார்சல்களில் தண்ணீர் உட்புகாதவாறு பொதி செய்யப்பட்ட நிலையில் இருந்த கஞ்சாப் பொதியினைக் கைப்பற்றியதுடன் படகில் இருந்த தமிழ்நாடு நாகபட்டினத்தைச் சேர்ந்த 28, 32 வயதுடைய இருவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்களை பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் போவதாக தெரிவித்த கடற்படையினர் சிறிய மோட்டர் பொருத்தப்பட்ட இவ்வாறான சிறிய படகு பருத்தித்துறைப் பகுதியில் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் கூறினார். (இ-60)

## அமைச்சர் சம்பிக்கவுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்கரணவக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் வார இறுதிப் பத்திரிகை யொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சம்பிக்க ரணவக்கவினால் மேற்கொள்ளப்பட்ட விபத்து தொடர்பில் நான்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் சட்டத்தை மதிக்காது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் ஆணைக் குழுவினை நியமிக்கும் அரசியல் அமைப் புப் பேரவையின் உறுப்பினராக கடமையாற்றுதல் போன்ற காரணிகளின் அடிப்படை யில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் படவுள்ளதாகத் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் விற்பனை; இந்தியர்கள் 12 பேர் மட்டக்களப்பில் கைது


கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்து, ஆயுர்வேத மருந்துப் பொருட்களை விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து பெண்கள் உட்பட 12 இந்திய பிரஜைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியிலுள்ள தனியார் தங்குமிட விடுதியொன்றில் தங்கியிருந்து மருந்து பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்த இவர்கள் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.


கர்நாடக மாநிலம் மைசூர் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்கள் இந்தியத் தயாரிப்பான ஆயுர்வேத மருந்துப் பொருட்களை விற்பனைக்காக வைதிருந்தார்கள் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா விசாவில் இலங்கைக்குள் பிரவேசித்து குடிவரவு - குடியகல்வு சட்டங்களை மீறும்வகையில் சட்டவிரோதமான முறையில் வியாபாரத்தில் இவர்கள் ஈடுபட்டதாக பொலிஸார் கூறுகின்றனர்.

கைதானவர்களிடமிருந்து ஆயுர்வேத மருந்துப் பொருட்களும் வேறு சில பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்கள் விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (செ-12)




# டி வில்லியர்ஸ், மோரிஸ் அசத்தல் தென்னாபிரிக்கா தீர்க்கமான வெற்றி



டி வில்லியர்ஸின் அதிரடியான துடுப்பாட்டமும் மோரிஸின் அசத்தலான பந்து வீச்சும் கைகொடுக்க தென்னாபிரிக்க அணி 37 ஓட்டங்களால் ஆப்கானிஸ்தானை வெற்றி கொண்டது.

உலக இருபது-20 போட்டியின் சுப்பர் 10 சுற்றின் 20ஆவது போட்டி மும்பையின் வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் தென்னாபிரிக்கா அணி, ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொண்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

கடந்த ஆட்டத்தில் அசத்திய தொடக்க வீரர் ஹசிம் அம்லா இப்போட்டியில் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

எனினும் டி ஹொக் (44), டு பிளசிஸ் (41), டி வில்லியர்ஸ் (64) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்களை எடுத்தது.

அதிரடியாக ஆடிய டி வில்லியர்ஸ் 29 பந்துகளில் 4 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக 64 ஓட்டங்கள் எடுத்தார்.

210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணிககு, ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மொஹமட் ஷெசாட அதிரடி ஆர்ம்பம் வழங்கினார்.

தென்னாபிரிக்காவின் வேக பந்துவீச்சை நாலாபுறமும் பறக்க விட்ட இவரின் துடுப்பாட்டத்தால் எளிதாக வெற்றி பெற்று விடலாம் என்று நினைத்த தென்னாபிரிக்க அணியினருக்கு பதற்றம் தொற்றிக் கொண்டது.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மொஹமட் ஷெசாட் 19 பந்துக ளில் 3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்க லாக 44 ஓட்டங்கள் எடுத்து மோரிஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.


அதன்பிறகு களமிறங்கிய வீரர்களும் தங்கள் பங்குக்கு அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தனர். தென்னாபிரிக்காவின் பந்துவீச்சை ஆப்கானிஸ்தான் வர்ர்கள் எதிர்கொண்டு ஓட்டம் குவித்த விதம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இருந்தபோதிலும் போதிய அனுபவமில்லாத ஆப்கானிஸ்தானால் வெற்றி இலக்கை அடைய முடியவில்லை.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் ஆப்கானிஸ்தான் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.


இதனால் தென்னாபிரிக்கா 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மோரிஸ் 4, ரபாடா, அபோட், தாஹீர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்களை கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் மோரிஸ் தேர்வானார்.



# சாமுவேல் பத்ரி, பிளட்சர் ஜொலிப்பு மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி



சாமுவேல் பத்ரியின் லெக் ஸ்பின் பந்து வீச்சும் (3/12) அன்ரே பிளட்சரின் ஆட்டமிழக்காத 84 ஓட்டங்களும் இணை சேர இலங்கை அணிக்கு எதிரான பெங்களூரு போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது.

உலக இருபது-20 போட்டியின் சுப்பர் 10 சுற்றின் 21ஆவது போட்டி பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

டில்ஷானும், சண்டிமலும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். நடுவரின் தவறான முடிவால் டில்ஷான் 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சண்டிமல் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

தொடர்ந்து வந்த வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இல்ங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 122 ஓட்டங்கள் எடுத்தது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் பெரேரா அதிகப்பட்சமாக 40 ஓட்டங்கள் எடுத்தார். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் லெக் ஸ்பின்னர் பத்ரி 4 ஓவர்கள் வீசி 12 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பலமான மேற்கிந்தியத் தீவுகள் அணி 123 ஓட்டங்களை எளிதாக விரட்டி பிடிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் இலங்கை இன்னிங்ஸின் கடைசி கட்டத்தில் களத தடுப்பு செய்யாத கிறிஸ் ஹெயிலை ஆரம்ப வீரராக களமிறக்க நடுவர்கள் அனுமதிக்கவில்லை. இதனை அடுத்து பிளட்சரும், சார்ள்சும தொடக்க ஆட்டகார்ரர்களாக களமிறங்கினர்

சார்ள்ஸ் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆனால் பிளட்சர் தூண் போல் நின்று சிக்ஸரும், பவுண்டரியும் அடித்து அணியை வெற்றிக்கு அழைத்து சென்றார்.

அன்ரோ ரசல் தனது பங்குக்கு 8 பந்தில் 20 ஓட்டங்கள் அடித்தார். மேற்கிந்தியத் தீவுகள் 18.3 ஓவரில் 127 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் 64 பந்துகளில் 84 ஓட்டங்கள் (6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்) குவித்த மேற்கிந்தியத் தீவு களின் பிளட்சர் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.




# கண்ணீர் அஞ்சலி

## அமரர் இந்திராணி ஹரிந்திரன்



திரு.செல்வரத்தினம் ஹரிந்திரன் அவர்களின் அன்புத் துணைவியார் அமரர் இந்திராணி ஹரிந்திரன் மறைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ ரங்கநாதன் ரேடர்ஸ்**
**இராஜேந்திரா ஸ்ரோஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்**

(3961)

# 5 அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐந்து அமைச்சர்கள் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு மற்றும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப் படவுள்ளதாக ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க சிங்கள பத்திரிகையொன்றுக்கு செவ்வியளித்துள்ளார்.

அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக குற் றச்சாட்டுக்கள் குறித்த சகல தகவல்களும் திரட்டப்பட்டுள்ளன. இந்த தகவல்களுடன் எதிர் வரும் நாட்களில் இலஞ்சஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழு மற்றும் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆகியற்றுக்குச் சென்று முறைப்பாடு செய்யப் படும்.

கடந்த காலங்களைப் போன்றே 2015ஆம் ஆண்டின் பின்னரும் மக்களின் பணத்தை கொள்ளையிடும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் ஊழல் மோசடிகளுக்காக குரல்கொடுத்த சிலரும் இந்தப் பட்டியலில் உள்ளடங்கு கின்றனர்.

ஊழல்மோசடிகளுக்கு எதிரான குரல் அமைப்பு ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊழல் மோசடிகள் பற்றிய விபரங்களை திரட்டியுள்ளது.

சில தரப்பினர் கடந்தகால ஊழல் மோசடியாளர்களுடன் இணைந்து மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்காலத்தில் அனைத்து நபர்களும் சட்டத்தின் முன் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

---


## உளமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் மயூரகிரிக் குருக்கள்

20.03.2016 யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் B.A. பட்டம் பெற்றுக்கொண்ட நீர்வேலியைச் சேர்ந்த சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள்- மயூரகிரிக் குருக்கள் அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெறச் சிறப்புடன் வாழ்த்துகின்றோம்.



கந்தரோடை, சுன்னாகம்.

வாழ்த்துவோர்:
கோபாலசர்மா குடும்பத்தினர்
செந்தூரன் குடும்பத்தினர்
கோ.ரகுவரன்

(3953)


---


## முத்தமிழ் சங்க கலைமன்றம்

### கலைஞர்கள் ஒருங்கிணைப்பு தொடர்பானது

(பதிவு இல - GA2814)

எமது சங்கமானது கடந்த ஒரு வருட காலமாக வட மாகாணத்தில் தமிழ் கலைத் துறையை வளர்ப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. எனவே கீழ்வரும் கலைத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் "தேசத்தின் நட்சத்திரங்கள்" போட்டியில் பங்குபற்றி பல இலட்சம் பெறுமதியான பணப் பரிசில்களை வெல்லும் எமது நாட்டின் நட்சத்திரத் தரத்தை பெறப் போகும் உங்களுக்கான களத்தை ஏற்படுத்தியுள்ளோம். எனவே எங்களால் குறிப்பிடப்படும் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி பதிவினை மேற்கொள்ளவும்.

பாடகர், அறிவிப்பாளர், பட்டிமன்ற பேச்சாளர், சமய சொற்பொழிவாளர், நடன கலைஞர், ஓவியக் கலைஞர், கவிஞர், நடிகர், நகைச்சுவை கலைஞர், வாத்தியக் கலைஞர்

ஏ-9 வீதி,
மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு:
முத்தமிழ் சங்க கலைமன்ற நிர்வாகம்
தொலைபேசி:-021 568 8932
077 980 7734

(3933)


---

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி காசிநாதன்



யாழ்ப்பாணம் இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அன்னலட்சுமி காசிநாதன் அவர்கள் 19.03.2016 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரபிள்ளை நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற காசிநாதன் அவர்களின் அன்பு மனைவியும் ரதி, ரஜனி, பாமதி, கலைநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் தனபாலன், லோகேஸ்வரன் (Baby), சற்குருநாதன், அறிவழகன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நல்லையா, அருந்தவமலர், சுசீலாதேவி, ஞானகலாராணி, காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் சர்வானந்தா ஆகியோரின் சகோதரியும் கமலம், காலஞ்சென்ற சுப்பிரமணியசிவம், தர்மலிங்கம், திருமகள், சாந்தி ஆகியோரின் மைத்துனியும் ரேகா, மாதுரி, நிஷாந்த், நித்யா, ஏரகன், திவ்வியன், சுதாகரன், கோபிநாத், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஷ்ருதி, அர்ஜுன், அஷ்வின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.03.2016) காலை 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரையும் நாளை (22.03.2016) காலை 9 மணி முதல் 2.30 மணிவரையும் ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஈமக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-4076)

---

## இராசி பலன்

21.03.2016
(பங்குனி 08, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.45 மணிவரை
மகம் பிற்பகல் 3.07 மணிவரை
சுபநேரம் 12.17-1.47மணிவரை
இராகுகாலம் 7.47-9.17 மணிவரை
பங்குனித்திங்கள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | | | |
| சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம்- திருவோணம் | | |
| | | | குரு ராகு சந். |
| | சனி செவ் | | |

**மீனம்** அலுவலகப் பணிகள் துரிதமாகும், ஆரோக்கியம் சீராகும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**மேடம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம்.

**இடபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் வந்து சேரும் நாள், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உங்களின் செயற்பாடுகளில் மற்றவர்கள் குறைகண்டு கூறலாம்.

**சிம்மம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்** உறவினர்களும் நண்பர்களும் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுப நலன் கருதிய செலவுகள் இடம்பெறலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம் பெறலாம், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

## பௌத்த- இந்து விக்கிரகங்கள்

# பாகுபாடு செய்யமுடியாத வகையில் எமது கலை வரலாறு அமைந்துள்ளது

### பேராசிரியர் கிருஷ்ணராஜா தெரிவிப்பு



புத்தர் சிலைகள் காட்சிப் படுத்தப்படுவது சிலருக்கு மனவருத்தத்தை ஏற்படுத் தலாம். ஆனால் பௌத்த இந்து விக்கிரகங்கள் என பாகுபாடு செய்ய முடியாத வகையில் எமது கலை வர லாறு அமைந்துள்ளது என வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் செ. கிருஷ்ண ராஜா தெரிவித்துள்ளார்.

மத்திய கலாசார நிதியத் தின் யாழ் மாவட்டத்துக்கான புதிய செயற்றிட்ட அலுவலக திறப்புவிழா நிகழ்வின் ஆர ம்பநிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை யாழ். பல்கலைக்க ழக கைலாசபதி கலையரங் கில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.அவர் மேலும் உரை யாற்றுகையில்,

வடக்கில் தொல்லியல் துறையானது முக்கியமான கட்டத்தை அடைந்து பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த கால உள்நாட்டு போரின் போதும் தொல்லியல் ஆய்வு களை தொடர்ச்சியாக மேற் கொண்டு வந்துள்ளோம். அப்போது சொந்தப் பண த்தை செலவளித்து தொல் லியல் துறையை வளர்த் தெடுத்தோம்.

இலங்கைப் பண்பாடா னது தென்னிலங்கையிலும் வட இலங்கையிலும் பன்மை பண்பாட்டு தன்மையினை பெற்றுவந்தது என வெளிப் படுத்தக்கூடிய தொல்லியல் சான்றுகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்துள்ளன.

இலங்கைத்தீவினுடைய பண்பாட்டு வளர்ச்சியில் பௌத்த மதமும் இந்து மத மும் ஒன்று கலந்து பண் பாட்டை வளர்ந்திருந்தது என்பதனை எல்லோரும் அறிவர். பௌத்த மதகுருமார் கள் தமிழ் இலக்கணங் களை எழுதியுள்ளார்கள், அதே போன்று இந்து குருமார்கள் பௌத்த கோட்பாடுகள் தொட ர்பாக விக்கிரகங்களை செய் துள்ளார்கள். பொலநறுவை யில் இவற்றையெல்லாம் நாம் சந்திக்கிறோம். ஏனெ னில் பொலநறுவை பண்பாடு ஒரு பன்மை பண்பாட்டு வெளிப் பாடு என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கமுடியாது .

புத்தர் சிலைகள் காட்சிப்ப டுத்தப்பட்டதையிட்டு சிலரு க்கு சில மனவருத்தங்கள் இருப்பதாக நான் அறிகி றேன். ஆனால் நிலைமை அதுவல்ல. பல்லவர் காலத் தில் ஏராளமான பௌத்த சிற்பங்கள் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் உருவாக்கப் பட்டன. சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பௌத்த சிற்பங்கள் ஏராளமாக இலங் கையில் கிடைத்துள்ளன.

ஆகவே இவ்வாறான கலப்பு பண்பாட்டிலே பௌத்த இந்து விக்கிரகங்கள் என பாகுபாடு செய்து பார்க்க முடி யாத வகையில் எமது கலை வரலாறு அமைந்துள்ளது.

அந்தவகையில் தமிழ் பௌத்த பண்பாடு ஒன்று தென் ஆசியாவில் தென் மோடியில் வளர்ச்சி பெற்று வந்ததென்பதை நாங்கள் மறுப்பதற்கில்லை. ஆகவே தான் இன்றைய தொடக்கம் ஒரு பன்மை பண்பாட்டு வளர்ச்சிக்கு யாழ் பல்கலைக் கழகத்தை நோக்க வைத்து ள்ளது என்பதனை குறிப்பிட வேண்டும்.

தொடக்கத்தில் எமது சொந்த பணத்தை செலவிட்ட நாங்கள் தற்போது மத்திய கலாசாரத்தின் நிதியத்தின் உதவி பெற்று தொல்லியல் மேலாய்வு அகழ்வாய்வுக ளையும் பண்பாட்டு நிறுவ னங்களையும் பாதுகாக்கப் போகிறோம் என்பதில் மகி ழ்ச்சி அடைகிறோம்.

மத்திய கலாசார நிதி நிறுவனத்துடனும் தொல் லியல் திணைக்களத்துட னும் இணைந்து எதிர்காலத் தில் எமது பண்பாட்டு வளர்சி க்காக நடவடிக்கைகளை வகுத்து தொழிற்படுவோம் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-9)




## இ.போ.ச.பேருந்து குழுவினர் மீது

# யாழ்.சாலைக்கு மாணவர்கள் தொடர்ச்சியாக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் பேருந்தினை மறித்தும் அவர் களை பேருந்து குழுவினர் பேருந்தில் ஏற்றாது செல்வ தாக யாழ். சாலைக்கு மாண வர்கள் தொடர்ச்சியாக முறை ப்பாடு செய்து வருகின்ற னர்.

மாணவர்கள் எமது நாட் டின் எதிர்காலம். எனவே அவர்களது கல்வி மீது நமது அரசாங்கம் அக்கறைகொண்டு அவர்களுக்கு போக்குவரத் தில் மொத்த பெறுமதித் தொகை யில் பத்து வீதத்தினை அவர் களிடம் அறவிட்டு அவர்களு க்கு பருவகால சீட்டு வழங்கி மீதி 90 வீதத்தினை அரசா ங்கம் தாம் செலுத்துகிறது.

அத்துடன் ஒவ்வொரு பெற் றோரும் தமது பிள்ளைகள் கல்வி கற்று நல்ல நிலைக்கு வரவேண்டுமென்ற எதிர்பார் ப்பில் தமது சொந்த சுக துக்க ங்களை ஒதுக்கி பிள்ளைக ளுக்காக தமது வாழ்வினை தியாகம் செய்கின்றனர்.

அந்த வகையில் ஒரு தாயானவள் அதிகாலையில் எழுந்து தனது உடல் இய லாமை எதனையும் கருத்திற் கொள்ளாது பிள்ளைகளின் கல்வியினை மட்டுமே கரு த்திற்கொண்டு அப்பிள்ளை க்கு காலை, மதிய உணவு தயாரித்து பிள்ளை பாட சாலை செல்லும் நேரத்தை மையப்படுத்தி அந்நேரத்திற் குள் பிள்ளைகளை பாட சாலை செல்வதற்கு தயார்ப டுத்தி பெற்றோர் பேருந்திற் காக அப்பிள்ளையுடன் வீதி யில் காத்திருக்கும் வேளை யில் எமது பேருந்து குழு வினர்களாகிய தாங்கள் பாட சாலை சீருடையில் நிற்கும் அப்பிள்ளையினை பேருந் தில் ஏற்றாது செல்லும் தரு ணத்தில் அப்பிள்ளையின தும் அப்பிள்ளையின் பெற் றோரினதும் மனக்குமு றலை யாராவது சிந்தித் துப் பார்க்கின்றீர்களா! அந் தப் பிள்ளையினை உங்கள் பிள்ளையாக நினைக்கின்றீர் களா! சற்று அவ்வாறு சிந் தித்துப் பாருங்கள். உங்க ளுக்கு அந்தத் தாக்கம் புரியும்.

எனவே யாழ்.சாலையில் கடமையாற்றும் அனைத்து பேருந்து குழுவினர்களும் பாட சாலை செல்லும் மாணவர் கள் பாடசாலை சீருடையில் பேருந்தை மறிக்கும்போது அவர்களை ஏற்றிச் செல்லு தல் வேண்டும்.

இது தொடர்பாக இனிவ ரும் காலங்களில் எந்தவித அறிவுறுத்தலும் தங்களுக்கு வழங்கப்படமாட்டாது. இனி வரும் காலங்களில் எமது வீதிப்பரிசோதனை அணியி னர் இவ்வாறான முறைப் பாடுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பேருந்து குழுவினர்களுக்கு எதிராக சபை விதிமுறைப்படி கடும் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என இ.போ.ச. யாழ். சாலைமுகாமையாளர் செ.குல பால செல்வம் அறிவுறுத்தியு ள்ளார். (இ

## மஹா இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- மண்கு ம்பான் வெள்ளைப்புற்றடி திருவருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோவில் அதி சுந்தர நூதன ஸப்த தள, ஸப்த கலச மஹா இராஜகோபுர மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நாளை மறுதினம் 23 ஆம் திகதி முற்பகல் 9.17 மணிமுதல் 11.08 மணிவரை யுள்ள சுபவேளையில் நடை பெறும். (இ

## நூற்றாண்டு விழா

(கரணவாய்)

அல்வாய் மெதடிஸ் திருச் சபையின் நூற்றாண்டு விழா வும் நன்றி செலுத்தும் வழி பாடும் புதிதாக அமைக்கப் பட்ட ஆழ்வார்ப்பிள்ளை ஞாப கார்த்த மண்டபத் திறப்பு விழா வும் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு அல்வாய் திருச்சபையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்விற்கு வடக்கு, கிழக்கு மாவட்ட அவைத்தலை வர் எஸ்.எஸ். ரெரன்ஸ் பிர தம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-60)

## பிரச்சினைகள் நிர்வாக ரீதியாக தீர்க்கப்படாததால்

# நோயாளர்களுக்கே பாதிப்பு அதிகம்

## யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதானா வைத் தியசாலையில் நடைபெறும் சம்பவங்கள் நிர்வாக ரீதி யாக தீர்க்கப்படாமல் பொலிஸ நிலையம் கொண்டு செல்லப் படுவதனால் வைத்தியசா லைப் பணிகள் தடைப்படுவ தாகவும், இதனால் நோயாள ர்களே பாதிக்கப்படுவதாக வும் யாழ்.போதனா வைத் தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி ஜேர்மன் நார்ட்டினை சேர்ந்த வெளிநாட்டவர் ஒருவர் கண் விடுதிக்கு நோயாளர் ஒரு வரை பார்வையிடுவதற்காக சென்றுள்ளார். அவர் இவ் வாறு செல்லும் போது நோயா ளர்களை பார்வையிடும் நேரத்துக்கு செல்லவில்லை. இதன் போது குறித்த விடு தியில் நின்ற தாதிய உத்தி யோகத்தர் ஒருவர் இந்த நேரத்தில் நோயாளர்களை பார்வையிட முடியாது என கூறியுள்ளார்.

இதனால் இருவருக்குமி டையில் வாய்த்தகராறு இடம் பெற்று அது பொலிஸ் நிலை யம் வரை சென்று தாதியர் கைதாகி பிணையிலும் விடு விக்கப்பட்டிருந்தார். இச்சம் பவத்தினால் தாதியர்கள் கடந்த இரு நாட்களாக பணிப் புறக்கணிப்பிலும் ஈடுபட்டிருந் தனர். இது தொடர்பில் பணிப் பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர் பில் அன்றைய தினமே என் னிடம் குறித்த வெளி நாட்ட வர் பேசியிருந்தார். அவ்வாறு பேசும் போது இதனை நிர் வாக ரீதியாக அணுகி நட வடிக்கை எடுக்க முடியும் எனவும் கூறியிருந்தேன். எனினும் குறித்த வெளி நாட்ட வர் தான் ஜேர்மன் தூதர கத்திற்கு அறிவிக்க வேண் டும் எனவும்தாதியரைஉளளே தள்ளப்போவதாகவும் கூறி யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் போவ தாகவும் கூறினார். எனினும் வெளிநாட்டவர் ஏன் இவ் வாறு செயற்பட்டார் என்பது சந்தேகத்திற்குஇடமாகஉள்ளது.

சிலவேளை குறித்த வெளி நாட்டவர், தனது நாட்டில் நட்ட ஈடு பெற்றுக்கொள் ளவும் இவ்வாறு செய்திருக்க லாம். ஆகையால் இது தொட ர்பில் விசாரிக்கப்பட வேண் டும். பொலிஸாரும் இது தொட ர்பில் என்னிடம் முன்னர் பேசியிருந்த நிலையில், நான் வைத்தியசாலையில் இல்லாத நிலையில் எமது பணியாளர் ஒருவரை பொலி ஸார்அழைத்து சென்றுள்ளனர்.

இதனால் தாதியர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ்க ரிப்பினால் நோயாளர்கள் பாதிப்பினை எதிர்நோக்கி வருகின்றனர். இது தவிர 24 மணிநேர சேவையில் ஈடுப டும் தாதியர்களும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள் ளனர். இதனால் நான் பொறுப் பேற்ற பின்னர் நோயாளர் களை பார்வையிடுபவர்க ளுக்கு சில சலுகைகளை ஏற்படுத்தியிருந்தேன்.

இது தவிர அவர்களுக் கான வசதிகளும் எம்மால் செய்து கொடுக்கப்பட்டிருந் தன, இந்த நிலையில் தற் போது இடம்பெற்றுள்ள சம்ப வத்தால் அவற்றை இரத்து செய்யும் நிலைக்கு எமது நிர்வாகம் சென்றுள்ளது. ஊழியர்களும் எமக்கு அழு த்தம் கொடுத்து வருகின் றனர் என்றார் பணிப்பா ளர். (இ-4)

## சங்காபிஷேகம்

வட அல்வை அருள்மிகு குச்சம் ஞான வைரவர் தேவஸ் தான மணவாளக் கோலத் திருவிழா சங்காஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை நடை பெறும். (இ

## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மணல் ஏற் றும் வாகன உரிமையாளர் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் அல்வாய்வேவிலந்தை ஸ்ரீமுத் துமாரியம்மன் ஆலய திரு மண மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு நடை பெறும்.

இக்கூட்டத்தில் 4G (1) விசா ரணை அறிக்கையின் காண் புகள் சமர்ப்பித்தலும் அது தொடர்பில் உரிய தீர்மானம் எடுத்தலும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும். அங் கத்தவர்கள் தவறாது சமுகம ளிக்கவும். (இ

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டு இந்துக் கல் லூரி, சித்தன்கேணி பாட சாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வள்ளியம்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:41செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5659 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BBA<br>தொ.இ: G/4712 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 14 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ: B/5660 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 63 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/4722 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 75 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lபிரின்ஸ் PR<br>தொ.இ: B/5661 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 24 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4724 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 21செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/5663 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 46 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 46<br>தகைமை/தொழில்:BSc ITலண்டன் NOT PR<br>தொ.இ: G/4735 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# அழைப்பிதழ்

நாயன்மார்களால் திருமுறைப்பாடல் பாடப்பெற்ற
ஸ்ரீ கௌரிஅம்பாள் உடனுறை திருக்கேதீச்சரப் பெருமான்
அருள்பாலிக்கும் திருக்கேதீச்சரத் திருத்தலத்தில்
இந்திய அரசின் நிதியுதவியுடன் நிகழ்ந்துவரும்
ஆலயத்தின் உட்பிரகார மண்டபத்திருப்பணியில் கருங்கல் பொருத்தும் வேலைகள்
**நிகழும் மன்மத வருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை (23-03-2016)**
**பங்குனி உத்தர நன்னாளில்**
**அமிர்தசித்தயோகமும் பௌர்ணமித் திதியும் உத்தர நட்சத்திரமும் கூடிய**
**காலை 11:00 மணிமுதல் 12:00 மணிவரையுள்ள சுபவேளையில்**
இறைவழிபாட்டுடன் ஆரம்பிக்கப்படத் திருவருள் கைகூடியுள்ளது.
இப்புனித வேலைகளை
வடமாகாண முதலமைச்சர் மாண்புமிகு நீதியரசர், சத்தியவித்தகர்
**சி. வி. விக்னேஸ்வரன்** அவர்களும்
யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவராலயத்தின் துணை உயர்ஸ்தானிகர்
**உயர்திரு. A. நடராஜன்** அவர்களும்
ஆரம்பித்து வைப்பார்கள்.

**சிறப்பு அதிதிகள் :**
**திரு. வே. சிவஞானசோதி**
செயலாளர் - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு

**திரு. எம். வை. எஸ். தேசப்பிரிய**
மாவட்டச் செயலாளர் - மன்னார் மாவட்டம்

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு
எம்பெருமான் திருவருளைப் பெறும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| மா. தவயோகராஜா<br>தலைவர்<br>ஆலய அறங்காவலர் சபை | கந்தையா நீலகண்டன்<br>தலைவர்<br>திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை | எஸ். இராகவன்<br>அ. திருநாவுக்கரசு<br>இணைச் செயலாளர்கள்<br>திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை |

மன்மத வருடம் பங்குனித்திங்கள் 04ம் நாள்

thejah @ 072 7011 777

# ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்

## அகில உலக கிருஷ்ண பக்திக்கழகம், யாழ்ப்பாணம்

(ஸ்தாபக ஆச்சாரியார் தெய்வதிரு அ.ச.பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா)
இல.203, கந்தையா உபாத்தியாயர் வீதி, உடுவில், சுன்னாகம்,



அன்பார்ந்த பக்தர்களே!

ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு அநேக மங்களங்களைக் கூறி தங்களுக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

உடுவில் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம் அமைய வேண்டி மூன்றரை வருடங்கள் முயற்சியின் பயனாக ஆலயத்திற்கு தேவையான உப கட்டடங்கள் யாவும் யாழ். கலைஞர்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஆலய கட்டுமானப்பணி தொடர்ந்து கொண்டிருக்கும் அதே வேளையில் இப்பொழுது கட்டப்பட்டுள்ள ஆலயத்திற்கான பிரசாத மண்டபத்தில் கர்ப்பகிரஹம் அமைக்கப்பட்டு ஸ்ரீஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மகா பிரபு, நித்தியானந்த பிரபு (கலியுக அவதாரங்கள்) இருவரையும் ஆவாஹணம் செய்து யாழ். மண்ணில் கிருஷ்ண பக்தி கிடைப்பதற்கு நல்ல தருணம் கைகூடியுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் விழாக்களில் பங்கு பற்றி பகவானின் கருணையை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

## விழாக்களின் விபரம்

*24.03.2016 வியாழக்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை*
பகவான் ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மகாபிரபு, நித்தியானந்த பிரபு இருவரதும் நகர் உலா ஹரி நாம சங்கீர்த்தனத்துடன் கருட வாகனத்தில் நகர் பவனி வருதல்

## உலா வரும் வழி :

கந்தையா உபாத்தியாயர் வீதி → Dr.சுப்பிரமணியம் வீதி → கே.கே.எஸ்.வீதி → அம்பலவாணர் வீதி → டச்சு வீதி

*26.03.2016 சனிக்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை*

## ஆலய முன்றலில், மேடை நிகழ்ச்சிகள்

ஹரி நாம கீர்த்தனம் - சுவிஸ் தமிழ் ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகம் - Zurich

பிரதம விருந்தினர் வரவேற்பு, மங்கள விளக்கேற்றல், உரை பக்தி

வேதாந்த பீடம், ஸ்ரீல பிரபுபாதா நூலகம், அலுவலகம் என்பன திறந்து வைக்கும் வைபவம்

**பிரதமவிருந்தினர்**
கௌரவ நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வடக்கு மாகாணம் மற்றும்
அருள் திரு தீனபந்து தாஸா – பிருந்தாவனம், இந்தியா
அருள் திரு மார்க்கண்டேய ரிஷி தாஸா – மலேசியா

**நடனம் :** ஸ்ரீகிருஷ்ணரின் கதம்பம்
ஹரே கிருஷ்ண இசை நாட்டியக் கல்லூரி, கொழும்பு
**இந்திய கலைஞர்களின் பங்கேற்பில்...**
**நடனம்**
பரம ஆனந்தம் – நூபூர் நடனாலயம், பெங்களூர்.
கதக் நடன தம்பதிகள் ஹரி + சேத்தனா
**நாடகம் :** மறுபிறவி
நடிப்பு, நெறியாள்கை, கலைஞர் T.V
இராமானுஜர் தொடர்... தனுஷ்
மற்றும் கலைஞர்கள் - சென்னை

(சி-4085)

### செட்டிகுளம் பிரதேச சபையின்

# எல்லை நிர்ணயத்தில் தவறுகள் மீண்டும் எல்லை மீள் நிர்ணயம்



(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பிரதேசசபை எல்லை மீள்நிர்ணயம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி மீண்டும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையின் எல்லை நிர்ணயத்தில் தவறுகள் உள்ளதாக எல்லை நிர்ணய குழுவிற்கு சுட்டிக்காட்டப் பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் எல்லை நிர்ணய குழுவை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ளூ ராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர் பில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப் புக்களிடம் கருத்துக்களை பெற்றுக்கொள் ளும் விசேட கூட்டம் எல்லை மீள் நிர்ணய குழுவினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட ஆண்டியா புளியங்குளம் வட்டாரத்தில் இரு சமூகத்தை சார்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தநிலையில் ஒரு பிரதிநிதித்துவமும் பாவற்குளம் படிவம் 2 மற்றும் சூடுவெந்த புலவை உள்ளடக்கிய வட்டாரத்தில் சுமார் மூவாயிரத்து 500 மக்கள் வாழும் நிலையில் இரட்டை பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டுள்ள மையால் ஆண்டியா புளியங்குளத்திற்கு இரட்டை பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண் டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பிரதேச சபைக்கு உட் பட்ட பிரதேசத்தில் வேறு பல முரண்பாடு களும் காணப்பட்டமையால் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி மீள் எல்லை நிர்ணயம் தொடர்பாக குழுவை கூட்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வவுனியா நகரில் இரட்டை பிரதிநிதித்துவம் தேவையற்றது எனவும் அது மூன்றுமுறிப்பு பிரதேசத்திற்கு வழங்கப்படவேண்டும் எனவும், சூசைப் பிள்ளையார்குளம் கிராமம் வவுனியா நகருடன் இணைந்துள்ளமையால் இதனை இறம்பைக்குளம் வட்டாரத்திலிருந்து நீக்கி வவுனியா நகருடன் இணைக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜா.லி.லிங்கநாதன், இ.இந்திரராசா, தர்ம பால செனவிரட்ன, ஜெயதிலக, அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார, வவுனியா நகரசபை முன்னாள் உபநகரபிதா எஸ்.சந்திரகுலசிங்கம, உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர் கள், பிரதேச செயலாளர்கள், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள், எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250-281)

## பங்குனி உத்தர பொங்கல் விழா

சரித்திரப் பிரசித்தி பெற்ற கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா நாளை மறு தினம் புதன்கிழமை இரவு பகல் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய அடியார்களின் நலன் கருதி அனைத்து இடங்களில் இருந்தும் போக்குவர த்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பாது காப்பு ஒழுங்குகளும் ஏற்பாடு செய்யப்பட் டுள் ளது என அவர்கள் அறிவித்துள்ளனர். (2-15)

## 20 மில்லியன் செலவில் பொதுச்சந்தைக்கு கட்டடம்

கிளிநொச்சி பொதுச் சந்தையின் வெற் றிலைக் கடைத் தொகுதிக்கான நிரந்தர கட்ட டம் நெல்சிப் திட்டத்தின் ஊடாக 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணம் செய்யப்படவுள் ளதாக பிராந்திய உள்ளூர் ஆட்சி உதவி ஆணை யாளர் எஸ். பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொதுச் சந்தையின் மரக்கறி மற்றும் மீன் கடைகளுக்கான கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. எனினும் ஏனைய வியாபார நிலையங்களுக்கான கட்டடத் தொகுதி இதுவரை நிர்மாணிக்கப்படவில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளாக குறித்த கடைத் தொகுதிகள் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்தன. இந்த நிலையில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் வெற்றிலைக் கடைத் தொகுதி அமைக்கப்ப டவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-31)




# பராமரிப்பின்றிக் காணப்படும் மங்களேஸ்வரா சனசமூக நிலையம்



முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வற்றாப்பளைப் பகுதியில் அமைந்துள்ள மங்களேஸ்வரா சனசமூக நிலையம் பராமரிப்பின்றி காணப் படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டு கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி சனசமூக நிலையத்தில் நாளாந் தம் தேசிய மற்றும் பிரதேச பத்திரிகைகளை வாசிப்பதற்கான வாசகர்கள் வருகின்றனர்.

அவ்வாறு வருபவர்கள் வீதியை விட்டு இச் சனசமூக நிலையத்தினுள் வருவது சிரமமாக வுள்ளதாகவும், ஏனெனில் கடந்த காலங் களில் பெய்த மழை காரணமாக வீதியின் அருகோரம் சேதமடைந்துள்ளமையே கார ணம் என சுட்டிக் காட்டுகின்றனர். இதனைச் சீர் செய்வதற்கென பல மாதங்களுக்கு முன் னர் பொருட்கள் கொண்டு வந்து பறிக்கப்பட்ட போதும் இதுவரை வேலைகள் எதுவும் முன் னெடுக்கப்படவில்லை .

இதேவேளை சனசமூக நிலையத்தின் பெயர் பலகையும் சேதமடைந்து உள்ளதுடன் அதன் சுற்றுச் சூழலும் துப்புரவு இன்றி காணப் படுவதாக பொதுமக்கள் ,வாசகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடவடிக்கை எடுத்து சனசமூக நிலையம் சீராக இயங்குவதற்கு ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை மு/வற்றாப்பளை மகா வித் தியாலயத்தின் நூலகத்திற்கு கடந்த ஆண்டு தேசிய விருது கிடைக்கப் பெற்றமை குறிப் பிடத்தக்கது. (2-310)

# அரைமரதன் ஓட்டப்போட்டி, மெய்வல்லுநர் பயிற்சி முகாம்

### தொடர்பான கலந்துரையாடல் 24 ஆம் திகதி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் மாகாண மட்ட அரை மரதன் ஓட்டப் போட்டி மற்றும் மாகாண மட்ட மெய்வல்லுநர் பயிற்சி முகாம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது,

2015 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட பாடசாலைகளின் அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

இப் போட்டி தொடர்பான ஒழுங் கமைப்புக்கள் தொடர்பாக கலந்துரை யாடுவதற்கும் மற்றும் மாகாண மட்ட மெய்வல்லுநர் பயிற்சி முகாம் கட்டம்-1 நடத்துவதற்குரிய ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் வலயக் கல்வி உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி பாடசேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

அத்துடன் மாகாண மட்ட மெய்வல்லுநர் பயிற்சி முகாம் கட்டம்-1 பங்கேற்பதற்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களையும் இக் கலந்துரை யாடலில் தவறாது கலந்து கொள்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அவர் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். (2-15)



புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் , மாந்தை மேற்கு பிரதேச சபையின் பிரதான அலுவலக கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது.

குறித்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி.தி.புண்ணியலிங்கம் , மாந்தை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் .ச.ஜெனிங்ஸ், மாந்தை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சு.வரப்பிரகாசம், முன்னாள் உப தவிசாளர் சீ.சௌந்தரநாயகம், அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி நியூட்டன் அடிகளார், ஆட்காட்டி வெளி பங்குத்தந்தை டெஸ்மன் ஆஞ்சலோ அடிகளார், மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

# மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனால் சங்கிலி அறுப்பு

வவுனியா, ஏ-9 வீதி, சாந்தசோலைச் சந்தியில் வீதியால் பயணித்த கர்ப்பிணி பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இளை ஞனால் அறுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பொலி ஸார் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, பறநாட்டாங்கல் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் தாய், சேய் சுகாதார நிலையத்திற்கு மருந்துச் சேவை கருதி சென்றுவிட்டு ஏ-9 வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த போது சாந்தசோலை சந்திக்கு அண்மையில் வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இளைஞரால் அவர் அணிந்திருந்த ஒன்றரைப்புவண் சங்கிலி அறுத்துச்செல்லப்பட்டது. இதனால்குறித்த பெண் ணின் கழுத்திலும் சிறு காயம் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-250)

# வைத்தியர்கள் தொடர்ந்தும் நியமிக்கப்படாமையால் ஓமந்தை, வவுனியா வைத்தியசாலைகளுக்கு செல்கின்றோம்

## பாழடைந்த கட்டடமாக மாறுகின்றது நொச்சிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையம்

(குருமன்காடு)

வவுனியா மாளிகை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நொச்சிக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காத நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வவுனியாவில் இருந்து சுமார் 8 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இக் கிராமம் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் சீரான போக்குவரத்து வசதிகள் இன்றி சிறிய ரக வான் ஒன்றிலேயே போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

இதேவேளை மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ள இக் கிராமம், மக்கள் உட்பட்ட சுமார் 6 கிராமங்களுக்கான பிரதான வீதியால் அன்றாடம் போக்குவரத்து செய்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் அப்பகுதி மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் வைத்தியர்கள் சமுகமளிக்காத காரணத்தால் அது பாழடைந்த கட்டடமாக மாறி வருவதுடன் பொதுமக்களின் மருத்துவ தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையிலுள்ளது.

வாரத்தில் ஒருமுறையாவது வைத்தியரின் வருகையை எதிர்பார்த்திருக்கும் இக் கிராம மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ள நிலையில் வைத்தியர்கள் தொடர்ந்தும் நியமிக்கப்படாமையால், ஓமந்தை மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்கே சிகிச்சைக்காக செல்ல வேண்டியுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் மத்திய சுகாதார அமைச்சும் இணைந்து இவ் வைத்திய நிலையத்திற்கு வாரத்தில் இரு தடவையாவது வைத்தியர் வருகை தருவதற்கான ஒழுங்குகளை செய்து தர வேண்டுமென அக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)




## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் தின விசேட பேருந்து சேவைகள்

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் பூஜை வழிபாட்டினை முன்னிட்டு அடியவர்கள் சிரமமின்றி வழிபாட்டிற்கு செல்வதற்காக எதிர் வரும் 23 ஆம் திகதி யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகளின் வருகைக்கு ஏற்ப விசேட பேருந்துகள் சேவையாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.இ.போ.ச.(வட) சாலை முகாமையாளர் செ.குணபால செல்வம் அறிவித்துள்ளார்.

அத்துடன் கிராமப்புறங்களில் இருந்து புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் செல்லும் அடியவர்கள் தாம் ஒரு குழுவாக ஒன்றிணைந்து இ.போ.ச. சாலைகளில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களது இடத்திற்கு எமது பேருந்தினை அனுப்பி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் சென்று மீண்டும் அவர்களது உரிய இடத்தில் சேர்க்கப்படுவார்கள்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள விரும்பிவோர்,

யாழ். சாலை: 021 222 2207, 077 105 8150, பருத்தித்துறை சாலை: 021 226 3266, 077 105 8130, காரைநகர் சாலை: 021 320 7593, 077 105 8120, கிளிநொச்சி சாலை: 021 228 3737, 077 105 8170, மன்னார் சாலை: 023 222 2281, 077 105 8140, வவுனியா சாலை: 024 222 3449, 077 105 8160, முல்லைத்தீவு சாலை: 021 229 0139, 077 105 8190 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

## ஓய்வூதிய நம்பிக்கை நிதியப் பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச ஓய்வூதிய நம்பிக்கை நிதியப் பொதுக்கூட்டம் அண்மையில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இவ்வருடத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றதுடன் ஓய்வூதியர்கள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச உதவித் திட்டப்பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், ஓய்வூதியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-254)

## வலியால் துடித்த சிறுவன்; வேடிக்கை பார்த்த மக்கள்

பாடசாலை முடிந்து துவிச்சக்கரவண்டியில் வீடுநோக்கி பயணித்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் ஆடொன்றுடன் மோதுண்டு இடதுகை முறிவடைந்த நிலையில் வீதியோரமாக வலிதாங்க முடியாமல் துடித்துக் கொண்டிருந்தான்.

அச்சிறுவனை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்து செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பொதுமக்களில் சிலர், பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் கடந்த 18 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் முல்லைத்தீவு பூதன்வயல் குமுழமுனை வீதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை முடிவடைந்து மேற்படி வீதியால் பயணித்துக்கொண்டிருந்த அ.அனோஜிகன் (வயது-12) என்ற சிறுவன் திடீரென குறுக்காகப் பாய்ந்த ஆடொன்றுடன் மோதுண்டு வீதியோரமாகத் தூக்கி வீசப்பட்டதில் இடதுகை முறிவடைந்த நிலையில் வலியால் துடித்துக் கொண்டிருந்தான்.

அவ்வேளையில் அங்கு கூடிய பொது மக்களில் சிலர் அச்சிறுவனை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவோ அல்லது அவசர தொலைபேசி இலக்கங்களுடன் அழைப்பை ஏற்படுத்தவோ முன்வராமல் அச்சிறுவனை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றுள்ளனர்.

இதில் ஒரு சீருடை அணிந்த பொலிஸாரும் அடங்குவார்.

இதேவேளை தெய்வாதீனமாக அவ் வழியாக பயணித்த முள்ளியவளையைச் சேர்ந்த மூவர் சம்பவத்தை கண்ணுற்று உடனடியாக வடக்கு மாகாண அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையான 021 222 4444, 021 222 5555 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டதன் பயனாக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை காவு வண்டி அவ்விடத்திற்கு விரைந்து பிரஸ்தாப சிறுவனை ஏற்றிச்சென்றது.

இதேவேளை அழைப்பை ஏற்படுத்தி சில நிமிடங்களில் குறித்த நோயாளர் காவு வண்டி அவ் விடத்திற்கு விரைந்தமை குறிப்பிடத்தக்கது. (2-310)



கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்: கிளிநொச்சி -1 செய்தியாளர்)

## ஹரிஸ்ணவி படுகொலை

## சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா - விபுலானந்தா வித்தியாலய மாணவி ஹரிஸ்ணவியின் படுகொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின் குமார் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச்சேர்ந்த 35 வயதுடைய பாலசிங்கம் ஜனதன் என்ற நபரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் கடந்த 18 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சந்தேக நபரின் இரத்த மாதிரியை மரபணு பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளதாக பொலிஸார் மன்றில் அறிவித்தனர்.

அதேவேளை மாணவி ஹரிஸ்ணவியின் கொலை தொடர்பில் அவ்சர மரண விசாரணையை நடத்திய அதிகாரி எஸ்.கிஷோர், நீதிமன்றத்தில் வழங்கிய அறிக்கையின் படி மாணவி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் விசாரணைகளில் மேலும் பல தகவல்கள் திரட்டப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணையின் போது சந்தேக நபரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (2-281)

## உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணய கூட்டத்தில் பாராளு.உறுப்பினர் பங்கேற்கவில்லை

## பொது அமைப்புக்கள் அதிருப்தி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்ட பல்வேறு குழறுபடிகளை தீர்ப்பதற்காக எல்லை நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட கருத்துக்கூறும் இறுதி சந்தர்ப்பத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவறவிட்டுள்ளதாக மாவட்டத்தின் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இவ் விடயம் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் என்பன வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு எழுத்து மூலமாக பல தடவை சுட்டிக்காட்டியதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் எல்லை நிர்ணயக்குழுவின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களிடம் கருத்தறிந்து இறுதித் தீர்மானம் எடுக்கும் இறுதி சந்தர்ப்பத்திற்கான வாய்ப்பு அளித்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கான அழைப்பு கடிதங்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு மாவட்ட செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கூட்டத்திற்கு வருகை தராத நிலையில், மாகாணசபை உறுப்பினர்களான எம். தியாகராசா, எம்.பி. நடராசாவும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

கூட்டத்தில் வடக்கு மாகாணசபை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாணசபை உறுப்பினர்களான ஏ.ஜயதிலக, தர்மபால செனவிரத்தின, ஆர். இந்திரராஜா, ஜி.ரி. லிங்கநாதன், வவுனியா வரியிறுப்பாளர் சங்க பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், நில அளவை திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலாளர், பொதுஅமைப்பின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (2-250)




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19 ஆவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் அம்பாறை -பாலமுனையில் இடம்பெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

# க.பொ.த.சாதாரண தர பெறுபேறுகள் -2015

**யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**ஆங்கில மொழி மூலம்**

**9ஏ**

க.அபிராமி, அ.அபிலாஷா, ம.மிலேனி கிருஷாந்தி, கோ.தீபனா, க.வைஷ்ணவி.

**தமிழ்மொழி மூலம்**

ச.சங்கவி, க.அபர்ணா, போ.கோபி ஷாலினி, அ.கேசவி, க.கர்சிகா, நே.கிஷாந்திகா, ஸ்ரீ.பிரசன்யா, ச.சாரங்கா, செ.ஹம்சிகா, ர.யசிந்தா, க.ஜிவித்தனா, து.நூர்மிலா, க.சங்கவி, வி.தர்சனா, க.வர்த்தினி, வி.விமலினி, ச.அபினஜா, ஸ்ரீ.நிரூபிகா, ச.தினுஜா,

**ஆங்கில மொழி மூலம்**

**8ஏபி**

இ.ஹம்சிகா, பு.கஜனி, யு.கமீலியா, ப.கஸ்தூரி, தே.மதுரங்கி, க.தேவந்தி, சி.தேவசாயினி, தே.துவாரகா, ர.யதுஷா, ஐ.தாருகா,

**தமிழ் மொழி மூலம்**

ஞா.மதுசா, சி.வேணுகா, அ.ஜொஸ்லின் ஜனு, பீ.லூட்ஸ்லாரா, ஞா.அபிஷாயினி, ஜெ.ஷமீனா, சி.சாதுரிகா, ம.தேன்நிலா, கு.கஜேந்தினி, ரா.தக்ஷாயினி, சு.ஆர்த்திகா, சி.தயாளி, ப.ஜீவலக்ஷி, பா.சாதனா, ஜ.அஜந்தா, ஸ்ரீ.சந்தியா, அ.சுவேந்திரா.

**ஆங்கில மொழி மூலம்**

**8ஏசி**

சி.அபிராமி, பா.கஜானி, கலதாங்கினி, இ.பவித்திரா, கு.சகானா, ஸ்ரீ.சதுர்த்திகா, சி.சிவப்பிரியா, க.தர்சிகா.

**தமிழ்மொழி மூலம்**

மா.ஷாரு, க.வருண்ஜா, த.அனோஜா, ம.ஆதித்தியா, சீ.ஜீவிதா, த.ஈழநிலா, பா.ரிஷ்மீலெஸ்லீ, ச.அபிராமி, ஜெ.அபிராமி, ஸ்.தர்மிகா, ஸ்ரீ.லாவண்யா, செ.துவேதிகர, வீ.அக்ஷயா, த.மிதுஷ்டா,

**ஆங்கில மொழி மூலம்**

**8ஏஎஸ்**

க.சுரபிகா.

**தமிழ்மொழி மூலம்**

அ.அனற் அபிஷா, ஆ.அருந்தா.

**தமிழ்மொழிமூலம்**

**7ஏ2பி**

செ.தமிழினி, தி.அபிராமி, சௌ.தர்சிகா, வி.ஜெனோஷா, பு.கஜலக்ஷ்மி, ஜெ. சபினஜா, சி.துளசினி, ஜெதுஷாயினி, சி.யதுர்ஷனா, கு.கஜானா, த.சுபானா, பு.துஷானி, உ.விவேகா.

**7ஏபிசி**

சி.ஜெரோமி, ஸ்ரீ.குகாஜினி, ஜெ.சாரங்கி, இ.லதாங்கி, த.தர்மிகா, சி.லக்ஷியா, செ.சிந்துஜா, தே.வினுஷா, கு.விதுர்ஷனா,

**7ஏபிஎஸ்**

இ.யூடினி,

**ஆங்கிலமொழி மூலம்**

**7ஏ2பி**

இ.அஞ்சனா, வி.தனுஷா, சி.திருவிழி,

**7ஏபிசி**

வி.கோபிகா, சி.சுவாங்கி, கி.தேனுகா

**7ஏபிஎஸ்**

சி.சுஜிதா.

**யாழ்.இந்துக் கல்லூரி**

**ஆங்கிலமொழிமூலம்**

**9ஏ**

ரி.நீலலோஜன், என்.நிரஞ்சன், எஸ்.செந்தூரா, என்.சுஜீவன், எஸ்.கீதசபா, ஆர்.அட்சயன், எல்.கிசாந்

**தமிழ்மொழிமூலம் (9ஏ)**

என்.பிருந்தாபன், புகழோன், கோபிநாத், ஏ.அன்புச் செல்வன், எஸ்.கிருதிகன், எம்.பரத்ராஜ், எம்.தனோராஜ், கே.கஜபவன்.

**யாழ்.ஹாட்லிக் கல்லூரி**

**9ஏ**

கே.அனுசன், பி.கஜன், பி.தயாபரன், ஆர்.விதுர்சனன், வை.நிரோஜன், எஸ்.நிருசாந், ரி.அபினேஷ், எஸ்.டசிகரன், ஜே.ஹரிகரன், ஜி.ஸ்ரீபாரத்வியசர்மா, பி.பகிசான், ஜே.நிலவன்

**8ஏ**

எஸ்.அசோக்குமார், ரி.கோணேசன், ஜே.மிதுர்சன், எஸ்.சஞ்ஜித், எம்.அனோஜன், ஆர்.ஐங்கரன், என்.ரசாந்தன், கே.அனுசாந், வி.யதுசான், எஸ்.யதுர்சன், கே.கலைவர்ணன், என்.கரன்ராஜ், எஸ்.கோபிதன், ரி.மனோஜ்பிரபா, எஸ்.சிவதர்சன், கே.உசாந்தன், ஜே.அனிருத்தனன், ஏ.சுமன்ராஜ், ஆர்.சாருசன்

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

ஜெ.சாம்பவி-9ஏ, ப.தாரகா- 9ஏ,

**தமிழ் மொழி மூலம்**

பா.பரணிதா -9ஏ, பி.தமிழினி - 9ஏ, ந.கம்ஷாயினி-8ஏசி, கை.கிஷாந்தினி-8ஏசி, சி.கோவின்யா-8ஏசி, ப.ஜீவிதா-8ஏஎஸ், சி.மதுஷா-8ஏஎஸ், வி. கௌஷிகா-7ஏ2பி, தி.தமிழினி-7ஏ2பி, பா.ஆர்த்தனா - 7ஏபிசி, சோ.மனஸ்வினி-7ஏபிசி, செ.நிசாந்தி-7ஏபிசி, அ.பரணிதா-7ஏபிசி, சி.சுகந்தினி-7ஏபிசி, பா.அஜந்தா-7ஏபிஎஸ், இ.தர்சனா-7ஏபிஎஸ், அ.நர்மதா - 7ஏபிஎஸ், இ.சாய்மீரா -7 ஏபிஎஸ், க.தாட்சாயினி-7ஏசிஎஸ்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

எஸ்.துவாரகி- 9ஏ, ஆர்.வர்ஷிகா- 9ஏ, ஏ.மதுசன்-8ஏசி, ஜே. நிதர்ஷன்- 8ஏசி, ஆர்.வித்யபிரகாஷ்-8ஏபி, வை.மாதுரி-8ஏசி, யு.சாம்பவி-8ஏபி, வி.கௌஷிகன்-7ஏபிசி, ஜே.லதுர்சனன்-7ஏபிஎஸ், வி.பிரிந்தன்-7ஏபி, ஆர்.எஸ்.மரீன்ராஜ்-7ஏபிசி, எஸ்.பிரகாஸ்-7ஏ2பி, எம்.சங்கீர்த்தனன்- 7ஏபிஸ், வி.சசிதரன்-7ஏ2பி, வி.நிரோசிகா-7ஏபிசி, எச். எல்.ரி. பிரணவி- 7ஏ2பி, கே. யதுர்சிகா-7ஏபிஎஸ், ஆர்.அஜந்தா-7ஏபிசி, எம்.கீதப்பிரியா- 7ஏபிசி, எஸ். பிரவீனா-7ஏ2பி, ஆர்.துளசிகா-7ஏ2பி, யு.குருபரன்- 7ஏபிஎஸ், கே. தனுராஜ்-6ஏ2பிஎஸ், எஸ். கஜானன்-6ஏ3பி, ஈ.மதியாளனன்-6ஏ2 பிசி, ஜே.கோபிராஜ்-6ஏ2பிசி, கே.விதுசன்-6ஏபிசிஎஸ், எஸ்.கஜானா- 6ஏபி2சி, ஜே.நிலக்சனா-6ஏ2பிசி, கே.தாட்சாயினி-6ஏ3பி, கே. தான்மிலிசாய்-6ஏ 2பி, எல். மதுமிலா- 6ஏ3பி, எஸ்.தாட்சா-6ஏ2பிசி, வி.பிரணவன்-6ஏ2பிஎஸ், கே. திலக்ஷனா- 6ஏ3பி, ஆர்.ஆதித்தன்- 5ஏ3பிசி, கே.கஜானன்-5ஏ2பிசிஎஸ், வை. துளசியன்-5ஏ3பிஎஸ், வை. சியாமளவாசுதேவ-5ஏ2பி2சி, ஆர். ஸ்ரீராஜதீபன்-5ஏ3பிஎஸ்., ரி.ரதீபன்-5ஏ3 பிசி, ஏ.வினோஜன்-5ஏ3பிஎஸ், கே.தங்கேஸ்வரி- 5ஏ2பி2சி, ஏ.மதியங்கா- 5ஏபி2சிஎஸ், எஸ். சர்வாணி-5ஏ3பிஎஸ், எஸ்.டவீனா- 5ஏ 3 பிசி, ஆர்.பிரிந்தா- 5ஏ2பிசி

**ஸ்கந்தவரோதயா கல்லூரி**

வி.தனுஜன்-9ஏ, அ.நிருஷா- 8ஏபி, யோ.தாட்சன்-8ஏசி, கு.கீர்த்தனா-8ஏசி, கு.டிலக்ஷன்-7ஏ2பி, ச.அஜந்தன்-6ஏ2பிசி, கி.நிருத்திகா- 6ஏ2பிசி, வி.மதுஷா- 6ஏபி2சி, ர.சோபிதா-5ஏ3பிஎஸ், த.திவ்யா - 4ஏபி3சிஎஸ், ம.நிவேதா-3ஏ4பி2சி, ப.துவாரகா-3ஏ2பி3சிஎஸ், க.சன்ஜிதன்-3ஏ2பி2சிஎஸ்.

**யா/மகாஜனாக் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

கி. வினோஜன் - 8ஏபி,

**தமிழ் மொழி மூலம்**

ச.லிங்கேஸ்வரன்-8ஏபி, ஐ. சிவாம்சன்-8ஏசி, பி.தாரணி-7ஏ2பி, வி.சேசகி -7ஏ2பி, சு.திலக்சனா- 7ஏபிசி, சி.ஜெயதரன்-7ஏபிசி, த.சஜீவன் -7ஏபிசி, உ. கபியங்கா- 6ஏ 3பி, தெ.கிரிஜெந்தி-6ஏ2பிஎஸ், சி. சுஜீவன் - 6ஏபிசிஎஸ், க.லோகிதாஸ் - 6ஏபிசிஎஸ், து. கேசிகா - 5ஏ3பிசி, சி. சங்கவி - 5ஏ3பிஎஸ், ஞா. கஜிந்தன் - 5ஏ2பிசிஎஸ், ச. சனார்த்தனா- 5ஏ2பிசிஎஸ், செ.டிலோஜன்-5ஏபி2சிஎஸ், ந.யஸ்மிலா-4ஏ4பிசி, கு.பிரதீஸ்-4ஏ4பிசி, ரா.பகிர்ராஜ் - 4ஏ4பிஎஸ், அ. தர்சிகா- 4ஏ4பிஎஸ், சி.யேனுகா-4ஏ3பி2சி, அ.கஜந்தினி- 4ஏ3பி2சி, ர.தேனுகா-4ஏ3பிசி எஸ், ப. யுவராஜ்-4ஏ 3பிசி, ம.சுஜீபன்- 4ஏ3பிசிஎஸ், வ.மகிழினி-4ஏ2பி3சி, ர.லோகிகா-4ஏ2பி2சிஎஸ், ஸ்ரீ.திசானன்-4ஏ2பிசி2எஸ்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் எகிப்தில் 13 பொலிஸார் பலி!

(கெய்ரோ)

எகிப்து நாட்டின் சினாய் தீபகற்பப் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் மோட்டார் வெடி குண்டு தாக்குதலில் 13 பொலிஸார் உயிரிழுந்தனர்.

ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் சில பகுதிகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்போது லிபியாவையும் கடந்து எகிப்து நாட்டுக்குள் தடம்பதிக்க தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், எகிப்தின் சினாய தீபகற்பத்தில் உள்ள ஆரிக் நகரில் பொலிஸ் சோதனைச்சாவடி மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் மோட்டார் நேற்றுக்காலை ரக குண்டுகளை வீசி நடத்திய தாக்குதலில் 13 பொலிஸார் உயிரிழந்ததாக எகிபது ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்க வந்த அம்புலன்ஸ் வாகனங்களின் மீதும் தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். (இ-5)

## க.பொ.த(சா/த) பெறுபேறுகளில் 12 இடத்திற்குள் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இல்லை

க.பொ.த. சாதாரணதரத் தேர்வு பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ள நிலையில், இந்தத் தேர்வில முதல் 12 இடங்களுக்குள், தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எவரும் இடம்பெறவில்லை.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த க.பொ.த. சாதாரணதரத் தேர்வு பெறுபேறு நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்ட நிலையில், முதல் 12 இடங்களைப் பிடித்த மாணவர்களின் பெயர் விபரங்களை தேரவுத்திணைக்களம் வெளியிட்டது.

இதன்படி, முதல் 12 இடங்களைப் பிடித்த மாணவர்களில், ஒன்பது பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

முதலாவது இடத்தை கொழும்பு விசாகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சத்சரணி ஹெட்டியாராச்சி என்ற மாணவி பிடித்துள்ளார்.

கொழும்பு நாலந்தா கல்லூரி மாணவர் சமல் புன்சர இரண்டாமிடத்தையும், கொழும்பு தேவி பாலிகா வித்தியாலய மாணவி மலீனா இரத்நாயக்கவும், கண்டி மகாமய பாலிகா வித்தியாலய மாணவி இந்தீவரி உமயங்க குமாரி இரத்நாயக்கவும் மூன்றாமிடத்தை பிடித்துள்ளனர். (இ-5)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் விஞ்ஞான தினமானது இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களால் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கமும் கலந்து சிறப்பித்திருந்தார்.

# குள்ளநரிக் கூட்டத்திற்கு சோரம் போகாது கட்சியை பாதுகாப்பதற்கு முன்வாருங்கள்

## மு.கா. தலைவர் ஹக்கீம் அழைப்பு



கட்சியுடன் முரண்பட்டுள்ள அனைவரும் இதற்கு வெளியே உள்ள குள்ளநரி குறுநில மன்னர்களின் அரசியலுக்கு சோரம் போகாமல், இங்கு வந்து நாடகமாடுவதற்கு மேடையில் அமராமல் கட்சியைப் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன் என நேற்று முன்தினம் பாலமுனையில் நடைபெற்ற மு.காவின் 19ஆவது தேசிய மாநாட்டில் சிறப்புரையாற்றிய அக்கட்சியின் தலைவர் நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது மறைந்த தலைவரின் பாசையில் தேசிய மாநாட்டைச் சொல்வதாக இருந்தால் கட்சி ஆதரவாளர்களின் பெருநாள் என்று சொல்லலாம்.

இந்தப் பெருநாளை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு எங்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய பாலமுனை மத்திய குழுவுக்கும், ஏனைய அயல் கிராமத்து கட்சியின் போராளிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாங்கள் பல சவால்களை எதிர் கொண்டிருந்தோம். இந்த மாநாட்டில் கூட அறிக்கைகள் மூலமாக சில சவால்களை எதிர்கொண்டோம். அதனையிட்டு அலட்டிக் கொள்ளாமல் மிகவும் அமைதியாக இந்த மாநாட்டை நாங்கள் நடத்தியுள்ளோம்.

இந்த நாட்டிற்குப் பின்னர் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படும் எனறு பல எதிர் கூறுதல்களைச் சொன்னாலும், இந்தப் பெருமக்கள் சனத்திரளுக்கு முன்னால் இந்த இயக்கத்தின் மரச்சின்னத்தை, அதன் உறுதியை அழிப்பதற்கு யாரும இடங்கொடுக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் பறைசாற்ற விரும்புகின்றோம்.

கட்சி பற்றிய விமர்சனங்களை கட்சிக்குள்ளேயே செய்வதற்கு வாய்ப்புக்கள் இருந்தும் பத்திரிகைகளின் ஊடாக கட்சியை விமர்சிப்பவர்களுக்கு மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். நேற்று முன்தினம் கட்சியைச் சேர்ந்த இருவரை கட்சியிலிருந்து இடைநிறுத்தியிருக்கின்றேன்.

இன்னும் ஒரு சிலரை இடைநிறுத்துவதற்கான தீர்மானத்தை எடுக்கத் தீர்மானித்திருக்கின்றேன். இந்தக் கட்சியை கட்டுக்கோப்பான இயக்கமாக வளர்த்தாக வேண்டும். இதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த நாட்டின் அரசியல் தலைமைகளுக்கு முன்னால மிகப் பெரிய மாநாட்டை நடத்தி இந்த சமூகத்தின் உண்மையான அபிலாசைகளை எடுத்துரைப்பதற்கு இருக்கின்ற அந்த வாய்ப்பை யாராவது தடுக்க முனைந்தால் அதனால் அவர்களுக்கு எந்த நன்மைகளும் இருக்கமாட்டாது.

எங்களுக்குள்என்ன முரண்பாடுகள் இருந்தாலும் அதனை கட்சிக்குள் பேசி தீர்த்துக் கொள்ளலாம். கட்சிக்குள் ஜனநாயக ரீதியாக கதைப்பதற்குரிய வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டு பத்திரிகை வாயிலாக அறிக்கையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கூலிக்கு எழுதுகின்றவர்களை வைத்துக் கொண்டு இக்கட்சியையும், தலைமையையும் விமர்சித்துக் கொண்டிருககின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸின் தலைமை அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே இருப்பதனால் அம்பாறை மாவட்டத்திற்குரிய அமைச்சர் பதவி பறி போய் உள்ளதென்று கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கட்சியின் தலைமை எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரை அலங்கரிக்கின்ற அரசியல் கொள்கையைத்தான் எமது மறைந்த தலைவர் காட்டியுள்ளார்.

எனக்குவழங்கியதலைமை என்பது அம்பாறை மாவட்ட மக்கள் வழங்கிய மகுடமாகும். சாய்ந்தமருது மண்ணிலே என்னுடைய தலையிலே சூடப்பட்டுள்ள இந்த மகுடத்தை இன்னும் நான் தாங்கிக் கொண்டிருக்கின்றேன் என்றால் அதற்கு இந்த மாவட்டப் போராளிகள்தான் காரணமாக இருக்கின்றார்கள. அவர்களுக்காக இக்கட்சியை தியாகத்துடன் முன்னெடுககும் போராட்டம் தொடரும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே நேரம், கட்சியுடன் முரண்பட்டுள்ள அனைவரும இதற்கு வெளியே உள்ள குள்ளநரி குறுநில மன்னர்களின் அரசியலுக்கு சோரம் போகாமல், இங்கு வந்து நாடகமாடுவதற்கு மேடையில் அமராமல் கட்சியைப் பாதுகாப்பதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

நாங்கள் நிறைய சவால்களை எதிர்கொண்டிருக்கின்றோம். புதிய அரசியல் யாப்பு, தேர்தல் சீர்திருத்தம் என்று பல விடயங்கள் உள்ளன. இந்த ஆட்சியின் பங்காளர்கள் என்ற வகையிலும், நாங்கள் உருவாக்கிய ஜனாதிபதி, பிரதமர் என்ற தைரியத்தோடு இவற்றிக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

முன்பெல்லாம் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற அடிப்படையிலே நாங்கள் இருக்க வேண்டிய நிர்ப்பந்தங்களை ஆக்கியவர்கள் இன்று மேடையில் வந்து வெறும் நாடகமாடுவதற்கு சேட்டுக்களையும் அணிந்து கொண்டு மேடையில் அமரும் அசிங்கம் கண்டு மிகவும் வேதனைப்படுகின்றேன். இந்த நாடகம் இன்றோடு முடிவுக்கு வர வேண்டும். இவர்களின் முகத்திரை கிழிககப்பட வேண்டும்.

இவர்கள் இந்த இயக்கத்தை பலவீனப்படுத்தும் முயற்சியை கைவிட்டு பதவி இருந்ததால்தான் இந்தக் கட்சியில் நாங்கள் ஒட்டிக் கொண்டிருந்தோம்பதவிகளுக்காகவே வக்காளத்து வாங்கினோம் என்ற கேவலமான நிலைக்குப் போகாமல், தங்கள் தவறுகளை உணர்ந்து இதனைப் பலப்படுத்துவதற்கு வந்து சேர்ந்து செயற்படுமாறு கேட்கின்றேன்.

மேற்படி மு.கா. வின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஈ.பி.டி.பி செயலாளர் பாராளுமன்ற உறுபபினர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர்கள் மனோகணேசன், தகாம்பரம், சரத் பொன்சேகா, தயாகமகே, இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன், பிரதியமைச்சர்கள் பைசால் காசிம், எச்.எம்.எம்.ஹரிஸ், அனோமா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஐ. மன்சூர், அலிசாஹிர் மௌலானா, எஸ்.சுமந்திரன், எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் நசீர் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், ஈரான், ஈராக், பாலஸ்தீன், எகிப்து, லிபியா, பாகிஸ்தான், குவைத், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், பங்களாதேஷ், மலேஷியா நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், மலேசிய ஆளுங் கட்சியின் பிரதிநிதிகள் உட்பட பலர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வெள்ளை மாளிகைக்குள் மீண்டும் செல்லமாட்டேன்

## மிச்சேல் ஒபாமா அறிவிப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வின் பதவிக் காலம் இந்த ஆண்டுடன் முடிவடையும் நிலையில், மீண்டும் வெள்ளை மாளிகைக்குள் செல்ல மாட்டேன் என்று மிச்சேல் ஒபாமா அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தொடர்ந்து இரண்டு தடவைக்கு (மொத்தம் 8 ஆண்டுகள்) மேல் இருக்க முடியாது என்பது விதியாகும். இரண்டாவது தடவையாக பதவியேற்ற ஜனாதிபதி ஒபாமாவின் இந்த ஆண்டுடன் ஓய்வு பெறுவதால் வெள்ளை மாளிகையிலிருந்தும் வெளியேற வேண்டும்.

கடந்த எட்டு ஆண்டுகளாக ஒபாமாவின் மனைவி மிச்சேல் ஒபாமா, முதல் பெண்மணியாக பல்வேறு சமூக நலப்பணித் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளார். குறிப்பாக, குழந்தைகள் நலன் மீது அதீத ஆர்வம்காட்டி வருகிறார்.


பில் கிளின்டனின் மனைவி ஹிலாரி கிளின்டன் வழியில், மிச்சேல் ஒபாமாவும் அரசியலில் ஈடுபடுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. ஒபாமா போலவே, இலினொய்ஸ் மாநிலத்திலிருந்து செனட்டர் பதவிக்கு முதலில் போட்டியிடுவார். தொடர்ந்து ஜனாதிபதி வேட்பாளராகவும் களம் காண்பார் என்ற பேச்சும் எழுந்தது.

இந்நிலையில், விழா ஒன்றில் பங்கேற்ற மிச்சேல், தான் மீண்டும் வெள்ளை மாளிகை செல்ல விரும்பவில்லை என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

கட்சி சார்ந்த அரசியல் இல்லாமல் அனைவருக்கும் பொதுவாக இருந்து சமூகப் பணி ஆற்ற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். குழந்தைகள் நலன் சார்ந்த பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணியாற்றப் போவதாகவும் கூறியுள்ளார்.

மேலும், எட்டாண்டுகளாக தனது குழந்தைகள் வெள்ளை மாளிகை வாழ்க்கையில் மிகவும் தனிமைப்பட்டு விட்டனர். இனி அவர்களுடன் அதிக நேரம் செலவிட வேண்டும் என்றார். (இ-5)

# பேஸ்புக் தடையை நீக்க கோரிக்கை



(பீஜிங்)

உலகிலேயே அதிகளவில் இணையத்தை பயன்படுத்துவதில் சீனா (667 மில்லியன்) முதலிடத்தில் உள்ளது. எனினும், அங்கு பேஸ்புக், டுவிட்டர் ஆகிய வலைத்தளங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இணையம் பற்றி அதிகம் விவாதிக்கும் சீன வளர்ச்சி பேரவையின் ஆண்டுக் கூட்டம் பீஜிங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக பேஸ்புக் ஜனாதிபதி மார்க் சக்கர்பெர்க் சீனா வந்துள்ளார். அப்போது பேஸ்புக்கிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு சீனாவில் தற்போது ஆளுங்கட்சியாக இருக்கும் கம்யூனிஸ்டு கட்சியின் நிலைக்குழ தலைவர் லியூ யுன்சானை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

இணையம்என்பது எல்லா நாட்டு மக்களுக்கும் பொதுவானது. எதிர்காலத்தை பகிர்ந்து கொள்ளும் உரிமையை எல்லா மக்களுக்கும் வழங்க வேண்டிய பொறுப்பு சர்வதேச நாடுகளுக்கு உண்டு. சீனாவின் சித்தாந் தங்களுக்கு ஏற்ப இணையத்தை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும், தற்போது பேஸ்புக் நவீன தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் உள்ளதால் சீன இணைய நறுவனங்களுடன் இணைந்து செயற்பட விரைவில் வழி பிறக்கும் என லியூ நம்பிக்கை தெரிவித்தார்.

பேஸ்புக் அதிபர் மார்க் சக்கர் பர்க்கின் மனைவி சீன வம்சாவளியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நேபாளத்தில் இளவரசர் ஹரி






(காத்மண்டு)

இங்கிலாந்து இளவரசர் ஹரி முதல் முறையாக நேபாளத்தில் 5 நாட்கள் அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக தோகாவில் இருந்து கத்தார் ஏர்வேஸ் விமானம் மூலம் இளவரசர் ஹரி மற்றும் 30 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் பிற்பகல் காத்மண்டு வந்து சேர்ந்தனர். இளவரசர் ஹரியை மத்திய விவகாரங்கள் மற்றும் உள்நாட்டு அபிவிருத்தித்துறை இணை அமைச்சர் குந்தி குமாரி ஷகி வரவேற்றார். வரவேற்பு நிகழ்சசியின்போது, நேபாள நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தினார். (இ-5)


# ஐ.ம.சு.கூட்டமைப்பில் தே.சு.மு.இணையாது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு விடுக்கப்படும் கோரிக்கை எதனையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியினது அரசியல் உயர்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளது என்று அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கடந்த பொதுத்தேர்தலின்போதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உடன்படிக்கை மீறப்பட்டு விட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)



கிளிநொச்சி- ஆனந்தபுரம்- றெயில் றோட்

# அருள்மிகு ஸ்ரீ ஜெய துர்க்கை அம்மன் திருக்கோவில்

புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா-2016

**கர்மாரம்பம்**
19.03.2016
வெள்ளிக்கிழமை பின்னிரவு
அதிகாலை 6.00 மணிக்கு

திருச்சிற்றம்பலம்
தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே
திருச்சிற்றம்பலம்

**கும்பாபிஷேகம்**
23.03.2016
புதன்கிழமை
காலை 9.20 - 10.14 மணிவரை

**அம்பிகை மெய்யடியார்களே!**

சைவமும் தமிழும் திகழ்ந்த தானியமும் மூர்த்தி தலம், தீர்த்தம், விருட்சம் ஒருங்கே இணைந்த புண்ணிய பூமியாகிய ஈழநாட்டின் சிரசென விளங்கும் கிளிநொச்சியில் இயற்கை வனப்பும் எழிலும் பல ஆசார சீலர்களும் வாழ்ந்த **பல ஆலயங்கள்** சிறப்புற மிளிர்வதாலும் தெய்வீகத்தன்மை மிளிரும் ஆனந்தபுரம் என்னும் திவ்விய பதியில் கோவில் கொண்டு அருளாட்சி நல்கும் எங்கள் ஸ்ரீஜெயதுர்க்கை அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் சுப மங்கலகரமான மன்மத வருடம் பங்குனித் திங்கள் பத்தாம் நாள் 23.03.2016 புதன்கிழமை பூரணைத் திதியும் , உத்தர நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் , **குருவோரையும்** சுவடிய காலை 9.20 மணி முதல் 10.14 மணிவரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கைகூடியுள்ளது. எனவே அம்பிகையின் மெய்யடியார்கள் கும்பாபிஷேகத்துக்கு முன்பும், பின்பும் நடைபெறும் சிவாகம கிரியைகளில் கலந்தும் திருத்தொண்டு புரிந்தும் அம்பிகை அருள் பெறுவீர்களாக.

## சிவாகம கிரியா கால விபரம்

பங்குனித் திங்கள் 6 ஆம் நாள் (19.03.2016) வெள்ளிக்கிழமை

பின்னிரவு அதிகாலை 6 மணியுடன் சுவடிய பூச நட்சத்திரத்தில் கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு புண்ணியாக வாசனம், அனுக்ஞை, திரவியசுத்தி, திரவியவிபாகம், கணபதி ஹோமம் நவக்கிரக் ஹோமம் மாலை 4 மணிமுதல் கிராம சாந்தி, கணபதி தாளம், பிரவேசபலி, விபூதிப் பிரசாதம் வழங்கல்

பங்குனித் திங்கள் 7 ஆம் நாள் (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணிமுதல் விநாயகர் வழிபாடு , புண்ணியாக வாசனம், ரக்ஷோக்ன ஹோமம், திசாஹோமம்,

மாலை 5 மணி முதல் சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், சம்கிதா ஹோமம், விபூதிப் பிரசாதம் வழங்கல்

பங்குனித் திங்கள் 8 ஆம் நாள் (21.03.2016) திங்கட்கிழமை

காலை 8 மணிமுதல் விநாயகர் வழிபாடு, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், கங்காபூஜை, சூரியசங்கிரகணம் பிற்பகல் 2 மணி முதல் விநாயகர் வழிபாடு , அங்குரார்ப்பணம், ரட்ஷாபந்தனம், நித்திய துவயஸ்தம்ப துவயரோஹணம், கடஸ்தாபனம், கலாகர்சணம், சனஹோமம், யாத்திராதானம், அக்னிமுக தரிசனத்தில் பிரதான கும்பம், யாகசாலைப் பிரவேசம், மாலை 6 மணிமுதல் 7 மணி வரையுள்ள கன்னி லக்கினத்தில் தூபிஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தாபனம் , யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஸ்டபந்தனம், விபூதிப்பிரசாதம் வழங்கல்.

பங்குனித் திங்கள் 9 ஆம் நாள் (22.03.2016) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் விநாயகர் வழிபாடு, நித்திய துவஜஸ்தம்ப பூஜை, யாகதரிசனம், விஷேட சாந்தி, விஷேட யாகபூஜை, ஹோமம் திரிசதி ஹோமம், பூர்ணாகுதிகள், தீபாராதனை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், விபூதிப் பிரசாதம் வழங்கல், மாலை 4 மணிமுதல் விநாயகர் வழிபாடு நித்திய துவயஸ்தம்ப பூஜை, யாகதரிசனம், பஞ்சகவ்ய பஞ்சாமிர்த பூஜை, விம்பசுத்தி, நியாசாதிகள், விஷேட யாக பூஜை, ஹோமம், தேவீகட்கமாலா ஹோமம், சகஸ்ர நாம ஹோமம், ஸ்பர்ஷாகுதி, பூர்ணாகுதி, வேதஸ் தோத் திர திருமுறை பாராயணம், விபூதிப் பிரசாதம் வழங்கல்.

பங்குனித் திங்கள் 10 ஆம் நாள் (23.03.2016) புதன்கிழமை

அதிகாலை 6 மணிமுதல் விநாயகர் வழிபாடு, நித்திய துவயஸ்தம்ப பூஜை, யாகதரிசனம், விஷேட தீபாராதனை, மஹா பூர்ணாகுதி, வேதஸ்தோத்திர பாராயணம், நிறுத்த கீத சிகண்டிதாள வார்த்திய சமர்ப்பணம், அனர்ந்த கோடி நமஸ்காரம், அந்தர்பலி, பகிர்பலி,சர்வமங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பம் வீதிப் பிரதட்சணம் காலை 9.20 மணிமுதல் 10.14 மணிவரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம் அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமானுக்கும் துர்க்கை அம்மனுக்கும் முருகப் பெருமானுக்கும் வைரவப் பெருமானுக்கும் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா மஹா சுபிர் நிவேதனம் , தேவர்கள் வழிபாட்டிற்கு திருக்கதவம் காப்பிடுதல் , யாக உட்வாசனம், எஜமான் அபிஷேகம், திருமுறை ஓதி திருக்கதவம் திறத்தல் , தசமங்கள தரிசனம், மஹாபிஷேகம், ஆசியுரை, மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

**22.03.2016 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும்.**

## குருமார் விபரம்

### கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு

சிவாகம கிரியா பூஷணம் சிவநேயச் செல்வர்- அருட்கலாநிதி
சிவஸ்ரீ அமிர்த.சிவலோகநாதக் குருக்கள் (ஜெயம் ஐயா)
(புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பிரதம குருவும்,
மேற்படி ஆலய பிரதம குருவும்.- நோர்வே.)

### சர்வபோதகாச்சாரியார்

சக்தி உபாசகர், சாதக இளவரசு, கும்பாபிஷேக கிரியா கிரம விசாரதர்
சிவஸ்ரீ சுந்தர. ஸ்ரீரங்கநாதக் குருக்கள்
(வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயம்)

### கும்பாபிஷேக நெறியாளரும் சமய போதகாச்சாரியாரும்

தத்துவக் கலாநிதி
சிவஸ்ரீ அமிர்த.ஸ்ரீகாந்தக் குருக்கள்
(ஸ்ரீவித்தியா பீடம்-கிளிநொச்சி)

### சர்வசாதகாச்சாரியார்

"சங்கீத சாதகன்"
சிவ ஸ்ரீ இ. கணேஸ்வரன் ஐயா
(முத்துமாரி அம்பாள் ஆலயம்- குரும்பசிட்டி)

### ஏனைய குருமார்

விநாயக பூஜா துரந்தர்
**சிவஸ்ரீ சி.உருத்திரமூர்த்தி குருக்கள்- மல்லாவி**
சிவ பூஜா துரந்தர்
**சிவஸ்ரீ சி.திருஞானசம்பந்தக் குருக்கள்- குமுழமுனை**
கிரியாமணி
**சிவஸ்ரீ பா.கேசவக் குருக்கள்**
(லிங்க விநாயகர் தேவஸ்தானம் இருபாலை)
கிரியா பூஷணம்
**சிவஸ்ரீ சி. லிங்கேஸ்வரக் குருக்கள் - முத்தையன்கட்டு**
சக்தி உபாசகர்
**சிவஸ்ரீ கெ. விசாகரட்தினக் குருக்கள்**
(கலட்டி எச்சாட்டி மஹா மாரியம்மன் தேவஸ்தானம்)

### உபசாதகாச்சாரியார்

சிவத்திரு க.குகன் ஐயா -கரவெட்டி
சிவத்திரு க.சசிகரன் ஐயா- பொலிகண்டி

### உதவி அர்ச்சகர்கள்

சிவத்திரு அ.அகிலன் ஐயா- தும்பளை
சிவத்திரு ப.மிதுனன் ஐயா- தும்பளை
சிவத்திரு ச.றஞ்சன் ஐயா- முள்ளியவளை
சிவத்தீரு இ.நிதன் ஐயா- கிளிநொச்சி
சிவத்திரு இ.தவறூபன் ஐயா- கெருடாவில்
சிவத்திரு சிவபாதம் ஐயா- கரணவாய்

### முகூர்த்த நிர்ணயம்

சோதிடர்
பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்
(ஈவினைப்பிள்ளையார் ஆலயம்- புன்னாலைக்கட்டுவன்)

### ஆசிவழங்குவோர்

சிவஸ்ரீ அமிர்த.ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்
(புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன குருமுதல்வர்)
பிரம்மச்சாரியா ஜாக்ரத சைதன்ய வதிவிட ஆச்சாரியார்
(சின்மயா மிஷன்- வடமாகாணம்)

| மங்கல வாத்தியம் | சிற்பாசாரியார் | கதவு வேலை | வர்ண வேலை | ஒளி.ஒலி அமைப்பு | பூ, பூமாலை அலங்காரம் |
|---|---|---|---|---|---|
| இ.இராசதுரை குழுவினர் கணேசபுரம். | திரு.த.வீரசிங்கம் அராலி. | திரு.அ.கருணாகரன் உடுப்பிட்டி. | திரு.து.துஸ்யந்தன் நெல்லியடி. | திரு.வே.கேசவன் வட்டக்கச்சி. | திரு.செல்வம் திருவையாறு. |

ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன்
திருக்கோவில்,
றெயில் றோட், ஆனந்தபுரம், கிளிநொச்சி.

அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தருவதோடு பால், தயிர், இளநீர், பூ, பூமாலை ஆகிய சிவத்திரவியங்களையும் வழங்கி அம்பாளை தரிசித்து மண்டலாபிஷேகத்திலும் சங்காபிஷேகத்திலும் கலந்து அம்பிகையின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.


அன்னையின் பணியில் உள்ள
ஆலய பிரதம குரு,
ஆலய பரிபாலன சபை, அம்பிகை அடியார்கள்.

**ஸ்ரீ ஜெய துர்க்கையம்மனைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்**

# நஞ்சாகும் நன்னீர் வளம்

குடிநீர்த்தாகத்தில் தவிக்கும் எம்குடாநாடு, அதனகத்தே கொண்ட நர் வளங்களைக் கொண்டு அதன் மக்களுக்கு உரிய அளவில் நீரை வழங்க முடியாது தவிக்கின்றது. இந் நீர் வளத்தை மட்டும் கொண்டு அதீத சனத்தொகை வளர்ச்சி, நாகரிக மாற்றங்களை எதிர் கொண்டு மக்களின் எதிர்கால நீர்த்தேவையைப்பூர்த்தி செய்ய நிச்சயமாக இயலாது. அத்துடன் காணப்படும் இந்நீர் வளங்களும் உரிய முகாமைத்துவம் இன்றி மாசாக்கத்துக்குட்பட்டு பயன்பாட்டிற்கு ஏற்றதல்லாத தன்மையைக் கொண்டுள்ளன.







குடாநாடானது Nitrate மற்றும் அதனுடன் சேர்ந்த விவசாய இரசாயன தொற்றல்களை விடவும் மனிதனால் ஏற்படுத்தப்படும் மோசமான பல தொற்றல்கள் மற்றும் இயற்கையாக ஏற்பட்டு வரும் மாசாக்கம் போன்ற பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. பொதுவாகவே எம் நிலத்தடி நீர் வன்தன்மை கொண்டதாகவும் கடல் நீரின் தொற்றுக்கு உள்ளாகியும் வருகின்றது. மனிதனின் பிழையான பரிபாலனத்தினால் ஏற்பட்டுள்ள, குறிப்பாக மாநகர, நகர பிரதேசங்களில் காணப்படும் மலத்தொற்று, சுன்னாகம் மின்சார



உற்பத்தி நிலையப் பகுதியைச் சுற்றிக் காணப்படும் கழிவு எண்ணெய்த் தொற்று எனப் பல பிரச்சினைகள்.


இந்த கழிவு எண்ணெய்த் தொற்றலால் நிச்சயமாக அப்பகுதி மக்கள் நீண்டகால அடிப்படையில் பாரிய சுகாதார விளைவுகளைச் சந்திக்கப் போவது உறுதி. இவை தொடர்பான உரிய பாதுகாப்புச் செயற்பாடுகள் குடாநாட்டைப் பொறுத்தவரை உயிர்ப்பாக மேற்கொள்ளப்படவில்லை. எமது சபையினாலும் பலதரப்பட்ட நலன் விரும்பிகளின் நடவடிக்கையாலும் மாசாக்கலானது நிறுத்தப்பட்டு இத்தொற்று வீரியமானது குறைவடைந்து செல்கின்ற போதும், அக்கழிவு எண்ணெயில் காணப்படக்கூடிய சேதன நச்சுப் பொருட்கள் முழுமையாக அகற்றப்படுகின்றனவா? என்பது முழுமையாக இன்னும் அறிந்து கொள்ளப்படவில்லை. மற்றும் தொற்றலடைந்து நீண்ட காலமாகையால் உடனடித்தாக்கத்தை ஏற்படுத்தவல்ல "பதங்கமாகும் இரசாயனப்பொருட்கள்" (volatile) அடிப்படையில் நீரை விட்டுச் சென்று இருக்க சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆயினும் இப்பிரதேசம் தொடர்ச்சியான கண்காணிப்பில் வைக்கப்பட்டு அனைத்து கழிவு எண்ணெய் மாசுக்களும் முழுமையாக அகற்றப்படும் வரை குடிநீர் விநியோகமானது மக்களுக்கு வழங்கப்படல வேண்டும். மற்றும் மாசை அகற்றுவதற்கான பொறிமுறைகளும் அடையாளம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

Nitrate எம் குடாநாட்டு நீரில் மற்றைய பகுதிகளிலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கு முக்கிய காரணம் எமது தரைக்கீழ் கட்டமைப்பும், விவசாய நடவடிக்கைகளும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அத்துடன் Nitrate ஆனது கரைதிறன் கொண்டதாகவும் மண்ணுடன் இணைந்திருக்கும்தன்மை அற்றதாகவும் காணப்படுவதால் இலகுவில் நிலத்தடி நீருக்கு சென்றடையும்தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. Nitrate உடன்சேர்ந்து பயன்படுத்தப்படும்ஏனைய மிகக்கொடிய நஞ்சான மற்றைய இரசாயன பதார்த்தங்களுக்கு (Agro Chemicals - Pesticide, weedicide, fungicide etc) என்ன நடக்கின்றது? அவைதானாகவே இல்லாதொழிந்து போகின்றனவா? இல்லையெனில் எம் நீரில் அவற்றின் நிலைதான் என்ன? இவை தொடர்பான ஆய்வுகள் மிகச்செலவு கூடியவை என்பதால் நாம் Nitrate எனும் சிறுவட்டத்திற்குள்ளேயே நின்றுவிடுகின்றோம். இவ்வுயிர் கொல்லும் இரசாயனங்கள் தொடர்பான விடயங்களில் மௌனித்து நிற்கின்றோம். இவை நீண்டகால, குறுகியகால விளைவுகளை ஏற்படுத்த வல்ல மிகக் கொடிய இரசாயனங்களாகும். Nitrate ஆனது ஓர் குறிப்பிட்ட அளவிற்கு மேலாக காணப்படுமாயின் அதனை ஓர் குறிகாட்டியாகக் (Index) கொண்டு அடுத்தகட்ட ஆய்வுகளுக்கு செல்ல வேண்டியது கட்டாயமாகும்.


Nitrate இன் குடிநீரில் அனுமதிக்கக் கூடிய செறிவானது உலக சுகாதார நிறுவனத்தால் (WHO 4TH Edition) 50 mg/l ஆக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. 11 mg/l Nitrate as Nitrogen எனவும் கொள்ளலாம். இதனை சார்பாகக் கொண்டே அனைத்து நாடுகளும் தமக்குரிய குடிநீரின் தரத்தை நிர்ணயித்துக் கொண்டுள்ளன. அதன் பிரகாரமே SLS 614 part II (2013ம் பதிப்பு) 50mg/l ஐ அதன் உச்ச வரம்பாக அறிவித்துள்ளது.

இந்த செறிவு எல்லையானது முழுமையாக methomog loinemum எனும் நீலக் குழந்தைகளை அடிப்படையாக வைத்தே நிர்ணயிக்கப்பட்டவை. Nitrate ஆனது புற்று நோயாக்கியாக தொழிற்படுகின்றதா? இல்லையா? எனும் ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்ட வண்ணமே உள்ளன. ஆயினும் தெளிவான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. ஆயினும் குடாநாட்டைப் பொறுத்தவரை அதிகளவான உணவுக்கால்வாய் தொடர்பான புற்றுநோயாளிகள் காணப்படுவது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

Nitrate நீரில் காணப்படும் போது நீருக்கு அடையாளப்படுத்தக் கூடிய நிறத்தையோ, சுவையையோ, மணத்தையோ நீருக்கு ஏற்படுத்தப் போவதில்லை. அதனால் இதன் தொற்றை சாதாரணமாக கண்டு கொள்ள முடியாது. உரிய ஆய்வின் மூலமே இதன் தொற்றை அடையாளப்படுத்திக்கொள்ளமுடியும். Nitrate இயற்கை வட்டம் மூலமோ மனிதனால் ஏற்படுத்தப்படும் மாசாக்கம் மூலமோ நீரைத் தொற்றடைகின்ற போதும் இலகுவில் ஆவியாக்கப்படாமல் தொற்றலடைந்த நிலைகளிலேயே நீடித்து நிலைக்கின்றன. அதாவது தாவரங்களினால் உறிஞ்சப்படும் வரையிலோ அல்லது



வேறு உயிரினங்களினால் உறிஞ்சப்பட்டோ Denitrification செய்யப்பட்டோ அகற்றப்படும் வரை நீர் நிலையையே சென்றடைகின்றன.



இவ்வாறுதாவரத்துக்கிடப்பட்ட உரத்தின் மீது கலந்த நீரிலேயே இத தகைய அபாயம் உள்ளபோது அதையே உறிஞ்சி விளையும் அவ்வுணவுப்பொருட்களின்நிலைஎன்ன? ஓர் பல்கலைக்கழக ஆய்வில்எமது சாதாரண மரக்கறியான கத்தரி, கரட் போன்றவற்றில் மற்றைய நாடுகளில் உள்ளதை விட 200 மடங்கு Nitrate உள்ளதாக அறியப்பட்டது. ஆயினும் அது தொடர்பான முழுமையான தகவல்கள் எம்மிடம் இல்லாதபோதும் மக்களுக்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இதனை இங்கு தெரிவிக்கின்றேன்.

எதுவாயினும் Nitrate ஆனது மனித நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நச்சுப்பொருளே, குறிப்பாக 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் கட்டாயமாக Nitrate தொற்றுக்குள்ளான நீரை எந்தச் சந்தர்ப்பத்திலும் பருகுவதைத தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில குழந்தைகளின் சமிபாடடுத்தொகுதி Nitrate ஐ உறிஞ்சி அகற்றும் தன்மையைக்கொண்டிருப்பதில்லை. மேலும சமிபாட்டுத் தொகுதியில் தாழ்த்தலுக்கு உட்பட்டு செங்குருதிக்கலங்களுடன் இணைந்து கொள்கினறது. இதனால் செங்குருதக்கலங்களின் ஒட்சிசன் காவும தன்மை குறைவடைகின்றது. இந் நிலையானது "நீலக் குழந்தை" எனும நோய்த் தாக்கத்தை மட்டுமல்லாது வேறு பல வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தி அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அதிக செறிவுள்ள Nitrate ஆனது கருச்சிதைவுகளை ஏற்படுத்துவதாகவும் சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மாற்று நீர் மூலங்களைப் பயன்படுத்தலே இவர்களுக்கு மிக உகந்த மாற்று வழிமுறையாகும். மழை நீர் தரமானவை என அடையாளம் காணப்பட்ட போத்தல் நீர், வசதி படைத்தவர்களாயின் நீர் சுத்திகரிக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்ட நீர் என்பவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக வயது வந்தவர்களின சமிபாட்டுத் தொகுதியானது Nitrate ஐ உறிஞ்சி அகற்ற வல்லவையாகும்.



உண்மையில் இன்று குடாநாட்டின் நிலத்தடிநீர் வளமானது ஏதிலியாகவேயுள்ளது. பலதரப்பட்ட தாக்கங்களுக்கு உட்பட்டு மிகக் குறுகிய காலத்திலேயே குடாநாட்டின் நீர்வளம் கைக்கு எட்டாத கனவாகப் போகப்போகின்றது. சில காலங்களுக்கு முன்னர் சில விஞ்ஞானிகளின் கூற்றுப்படி குடாநாடானது பாலைவனமாக மாற்றங்கொள்ளப் போவதாக பத்திரிகை வாயிலாகப்படித்திருந்தேன். ஆனால் குடாநாட்டின் நீர் வளமே இல்லாமல் போய் அது பாலைவனமாக மாறுவதற்கு முன்பதாகவே மிகக் குறுகிய காலத்தில் நன்னீர் வளமே இல்லாமல் போவதற்கான அறிகுறிகள் மிக அதிகமாகவே காணப்படுகின்றது. இன்றைய நிலையில் குடாநாட்டில் இலங்கை தர நிர்ணய சபையால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள SLS 614 (2013) அளவுகளில் தரமான நீர் வளமே இல்லை. இச்சூழ்நிலையில் நிச்சயமாக வரையறுக்கப்பட்ட ஓர் நீர் முகாமைத்துவம் எம் பகுதிக்கு மிக முக்கியம் மற்றும் அதனை நடை முறைப்படுத்தக்கூடிய உயிர்ப்பான நீர் முகாமைத்துவக் குழுக்களும் அவசியம். நீர்பாவனை சட்டங்களாக்கப்பட வேண்டியதும் முக்கியமாகும். குடாநாட்டின் புத்திஜீவிகளும் கல்விமான்களும் இன்று ஓரளவு விழிப்புடன நீர் தொடர்பான ஆராய்ச்சிகளி லும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது ஓர் வரவேற்கத்தக்க செயலாகக் காணப்படுகின்றது.

இப்பேரவலங்களில் இருந்து மக்களைக் காத்து அடிப்படை உரிமையான தூய நீரை வழங்க அனைத்து நிறுவனங்களினதும் ஒன்றுபட்ட செயற்பாடும் ஓர் மத்தியப்படுத்தப்பட்ட நன்னீர் வழங்கல் திட்டமும் காலத்தின் கட்டாயமாகும். இதன் மூலமே மக்களுக்கான பாதுகாப்பான குடி நீரை வழங்க முடியும். அத்துடன் இதன் மூலமே குடாநாட்டின் நன்னீர் வளங்களை பராமரித்து புத்துணர்ச்சியடையச் செய்ய முடியும்.

சு.சரவணன்
இரசாயனவியலாளர்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
யாழ்ப்பாணம்.

# வைத்தியர் வெற்றிடங்கள் மே மாதம் நிரப்பப்படும்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சுற்றயல் வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் வெற்றிடங்களுக்கு எதிர்வரும் மே மாதம் முதல் வாரமளவில் புதிய நியமனத்தின் மூலம் பெரும்பாலான வெற்றிடங்கள் நிரப்பப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள தொல்புரம் ஆரம்ப வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தினால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் குறித்த வைத்தியசாலையை சுற்றியுள்ள பகுதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருவதாகவும் சுழிபுரம், மூளாய், காட்டுப்புலம் உட்பட பல கிராமங்களில் இருந்து நோயாளர்கள் குறித்த வைத்தியசாலைக்கு செல்கின்றனர்.

ஆனால் அங்கு நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது என பொதுமக்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாகவும் ஏனைய வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமாரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் வைத்தியர் பற்றாக்குறை என்பது பொதுவாக காணப்படுகின்றது. தொல்புரம் ஆரம்ப வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விடுமுறையில் சென்றுள்ள காரணத்தால் குறித்த வைத்திய சாலைக்கு பகுதிநேரமாக ஒரு வைத்தியர் பணியாற்றி வருகிறார். எதிர்வரும் இரண்டு வாரங்களில் குறித்த பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும்.

மேலும் யாழ்.மாவட்டத்துக்கு எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் புதிய நியமனங்கள் மூலம் வைத்தியர்கள் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கிறோம். எனவே எமது மாவட்டத்தில் உள்ள சுற்றயல் வைத்திய சாலைகளில் கடமையாற்றுவதற்கு குறைந்தது 40 வைத்தியர்களேனும் தேவை என கோரியுள்ளோம்.

ஆகவே புதிய வைத்தியர்கள் நியமிக்கப்படுமிடத்து வைத்திய சாலைகளில் நிலவும் வைத்தியப் பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# லொறி வெடித்து ஐவர் பலி

(பீஜிங்)

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் வெடிபொருட்களை ஏற்றிச் சென்றதாக கருதப்படும் சரக்கு லொறி வெடித்து சிதறியதில் நேற்று ஐந்துபேர் பலியாகினர்.

சீனத்தலைநகரான பீஜிங்கை ஹாங்காங் நகருடன் இணைக்கும் நெடுஞ்சாலையில் யுயாங் நகரின் அருகே ஏற்பட்ட இந்த வெடி விபத்தால் அவ்வழியாக சென்ற இரு லொறிகள் மற்றும் ஏராளமான கார்களும் தீப்பற்றி எரிந்தன.

இவ்விபத்தில் காயமடைந்த இருபதுக்கும் அதிகமானோர் அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (இ-5)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 75 | 80 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 60 | 70 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 120 | 40 | 140 | 150 |
| தக்காளி | 30 | 30 | 30 | 30 | 30 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 40 | 40 | 40 | 50 | 50 | 80 | 50 |
| கரட் | 120 | 100 | 80 | 100 | 80-200 | 140 | 80 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 50 | 30 | 30 | 60 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 80 | 60 | 60 | 50 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 60 | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 100 | 100 | 150 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 80 | 45 | 120 | 50 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | — | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 80 | 60 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 60 | 70 | 40 | 100 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 80 | 120 | 100 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 400 | 400 | 400 | 500 | 800 |
| போஞ்சி | 120 | 160 | 100 | 120 | 100 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | — | 50 | 100 | 70 |
| கீரை – 1பிடி | 30 | 20 | 15 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 80 | 100 | 120 | 120 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 40 | 50 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 200 | 100 | 140 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 140 | 80 | 100 | 60 | 100 | 160 | 80 |
| முள்ளங்கி | 40 | 40 | 20 | 40 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 10 | 20 | 5 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன் நடந்தது என்ன? 135

கொழும்பில் நடந்த கலவரத்திலும் துப்பாக்கிச் சூட்டிலும் 19 பேர் கொல்லப்பட்டார்கள் அல்லவா? அதன் காரணமாக அதுலத் முதலியும் பிரதமர் பிரேமதாசவுடன் சேர்ந்து கொண்டார் என்று கூறப்பட்டது.

### சிறிமாவோ பண்டாரநாயக்க

இலங்கையில் முக்கிய எதிர்க்கட்சியான லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்கவும் அவரது மகன் அனுரா பண்டாரநாயக்கவும் வரவேற்புக்கு வரவில்லை.

தமிழ் மந்திரிகளான தேவநாயகமும், தொண்டமானும் வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.

### கண்டி நடனம்

பிரதமர் வரவேற்பு நிகழ்ச்சியில் கண்டு நடன கலைஞர்களின் முரசு நாட்டியம் நடந்தது. அவர்கள் வழக்கமான உடை அணிந்து சங்கு, எக்காளம் போன்ற வாத்தியங்களை ஊதி வரவேற்றார்கள்.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இராணுவ வீரர்களின் அணி வகுப்பை ராஜீவ்காந்தி பார்வையிட்டார்.

### சந்திப்பு

வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும் பிரதமர் ராஜீவ்காந்தியும் ஜெயவர்த்தனவும் சந்தித்து 45 நிமிட நேரம் பேசினார்கள். சமரச ஒப்பந்தத்தை அமல்படுத்துவது பற்றிஅவர்கள் விவாதித்தார்கள்.

சந்திப்புக்குப் பின் ராஜீவ் காந்திக்கு ஜெயவர்த்தனா விருந்தளித்தார். அதில் இருவர் மனைவியரும் கலந்துகொண்டார்கள்.

### ஒப்பந்தம் கையெழுத்து

பிற்பகல் பிரதமர் ராஜீவ்காந்தியும் ஜெயவர்த்தனவும் தனியாக 45 நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பிறகு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடந்தது.

4 ஆண்டு காலமாக இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடந்துவரும் போரை நிறுத்த வகை செய்யும் ஒப்பந்தத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு ராஜீவ்காந்தியும் ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்டனர்.

மத்திய மந்திரிகள் நரசிம்மராவ், ப.சிதம்பரம், நட்வர்சிங், தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதும் ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனவும் கை குலுக்கினார்கள். ஒப்பந்த பத்திரங்களைப் பரிமாறிக்கொண்டார்கள்.

### போர் நிறுத்தம்

ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாவன:-

ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணி நேரத்தில் (2நாட்களில்) இலங்கையில் போர் நிறுத்தம் அமுலுக்கு வரும். ராணுவமும் விடுதலைப்புலி இயக்கங்களும் சுடுவதை நிறுத்த வேண்டும்.

### ஆயுதங்கள்

72 மணி நேரத்திற்குள் இராணுவத்தினர் அவரவர் முகாமுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்





படைக்க வேண்டும்.

இலங்கையில் சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்படும். ஆயுதங்களை ஒப்படைத்த விடுதலைப்புலிகள், அவரவர் சொந்த ஊருக்குத் திரும்பி, மற்ற குடிமக்களோடு சேர்ந்து வாழ அனுமதிக்கப்படுவார்கள்.

### தமிழ் மாநிலம்

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஒரே மாநிலமாக (தமிழ் மாநிலம்) அமைக்கப்படும். இந்த மாநில சட்டசபைக்கு 3 மாதத்தில் தேர்தல் நடத்தப்படும். ஒருவேளை தாமதம் ஆனாலும் 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் நடைபெறும்.

தேர்தல் நடைபெறும்போது அதை மேற்பார்வையிட இந்தியாவில் இருந்து பார்வையாளர்கள் வருவார்கள். இந்த மாநிலத்துக்கு முதலமைச்சர் இருப்பார்கள். அவரைப் பொது மக்கள் தேர்ந்து எடுப்பார்கள். கவர்னரை, ஜனாதிபதி நியமிப்பார்.

வடக்குப் பகுதியுடன் நிரந்தரமாக இணைந்திருக்க விருப்பமா? என்று, கிழக்கு மாகாணத்தில் 1988 ஆம் ஆண்டு கடைசிக்குள் பொது ஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

கலவரம் காரணமாக இலங்கையின் கிழக்கு பகுதியிலிருந்து வெளியேறிய 1,30,000 தமிழ் அகதிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவந்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளலாம்.


### இந்தியா வாக்குறுதி

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் சுதந்திரத்துக்கும் ஆபத்து உண்டாக்கக்கூடிய எந்த நடவடிக்கைகளும் இந்திய மண்ணில் நடக்காதபடி இந்திய அரசாங்கம் பார்த்துக்கொள்ளும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மத்தியில் உள்ள கடல் பகுதியில் விடுதலைப்புலிகள் போர் நடவடிக்கைகளில் ஈடுபடாதபடி இந்திய கப்பல்படையினரும் கடலோரப் பாதுகாப்பு படையினரும் கவனித்துக்கொள்வார்கள்.

### பாராளுமன்றம்

ஒப்பந்தத்துக்கு இலங்கை பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படும். அதற்காக ஓகஸ்ட் 18 ஆம் திகதி இலங்கை பாராளு மன்றம் கூடும். இவ்வாறு அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது.



(தொடரும்)

# நாடாளுமன்றம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்த முடியாது

(கொழும்பு)

**நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் பாரிய ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற செயலாளர் நாயகம் இது தொடர்பல் குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற செயற்பாடுகளால் கடந்த காலங்களில் நட்டமேற்பட்டதாக வெளியான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு அனுமதி தர வேண்டும் என்று கோரி பாரிய ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு, கடிதம் மூலம நாடாளுமன்ற செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இதற்கே நாடாளுமன்ற செயலாளர் அனுமதி மறுப்பு பதிலை வழங்கியுள்ளார்.

நாட்டின் உயரிய சபை என்ற அடிப்படையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளை குறித்த ஆணைக்குழுவுக்கு விசாரணை செய்ய முடியாது என்று செயலாளர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# நீதிமன்றத்திற்குள் பக்கச்சார்பின்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



அரசாங்கம் நீதிமன்றத்தின் சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் போது நீதிமன்றத்திற்குள் சுதந்திரமும் பக்கச்சார்பின்மையும் பாதுகாக்கப்படல் வேண் டும் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வலியுறுத் தியுள்ளார். அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துதல் நீதிமன்றத்திற்கு பொருந்தாது என்பதுடன், அது ஒரு குற்றச் செயல் என குறிப்பிட்ட ஜனாதிபதி நீதிமன்றத்திற்குள் அனைவருக்கும் சுதந்திரம் காணப்பட வேண் டியதுடன் எச்சந்தர்ப்பத்திலும் தலையீடுகள் நிகழக்கூடாதென தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த தேசிய சட்ட மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் வாத்துவவில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மீறப்படுதல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விசாரணைகளின் பின்னர் ஏதேனும் நீதிமன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள நேரிட்டால் அதற்காக ஒருபோதும் வெளிநாட்டு நீதிபதிகளை வரவழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாதென இதன் போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்நாட்டு நீதிமன்றம், நீதிபதிகள் மீது தான் நம்பிக்கை வைத்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி , நீதிமன்றத்தின் சுதந்திரத்தையும் பக்கச்சார்பின்மையையும் பாதுகாத்து நீதிமன்றத்தை வலுவடையச் செய்வதற்கு அரசினாலான அனைத்து நடவடிக்கைகளையும்மேற் கொள்வதாக தெரிவித்தார்.

நீதிபதிகளை பாரதூரமாக விமர்சித்து அவர்களது வீடுகளுக்கு கற்களை வீசி எறிந்த மற்றும் முன்னாள் பிரதம நீதியரசரை 48 மணித்தியால விசாரணையின் பின்னர் வீட்டுக்கு அனுப்பிய வரலாற்றினை நன்கறிந்தவர்கள் என்ற ரீதியில் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை பாதுகாப்பதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு ஏற்ப இந்நாட்டின் நீதிமன்றம் மற்றும் நீதித்துறையில் உள்ள அனைவரதும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அரசு தன்னை அர்ப்பணித்துள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளும்போது அண்மைய தினங்களில் அரசாங்கத்தை சாராத ஒரு பிரிவினர் நீதிபதிகளின் வீடுகளின் எதிரே சுவரொட்டிகளை ஒட்டியதாகவும் அது தொடர்பாக உடனடியாக விசாரித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தான் பொலிஸார் உள்ளிட்ட ஏற்புடைய பிரிவுகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சட்டம் தாமதமாதல் பற்றி தற்போது சமூகத்தின் மத்தியில பல்வேறு உரையாடல்கள் தோன்றியுள்ளதாகவும் சட்டத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்தி சட்டத்தின் உதவியை நாடும் பொது மக்களுக்கு நியாயம் வழங் குவதற்கான முறைமை ஒன்றை எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பிரதம நீதியரசர், சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட நீதிமன்ற மற்றும் நீதித்துறையின் நிபுணர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-5)

# முன்பள்ளி ஆசிரியை ஒருவர் கழுத்து நெரித்து படுகொலை

## காட்டுக்குள் இருந்து சடலம் மீட்பு

(கொழும்பு)

மொனராகலை பிரதேசத்திலுள்ள காடொன்றிலிருந்து முன்பள்ளி ஆசிரியை ஒருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை, மாராவ, கிஷல் ஆர பிரதேசவாசியான டபிள்யூ.எம். சோமவதி (வயது-56)எனும்பெணணே கடந்த வெள்ளிக்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் அந்தப் பகுதியில் முன்பள்ளியொன்றை நீண்டகாலமாக நடத்தி வந்தார் எனவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறித்த முன்பள்ளிக்கு அருகிலுள்ள காட்டில் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை முடிந்து இரவு வரை வீடு திரும்பாததால், அவரது சகோதரி மொனராகலை பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸாரும், கிராமவாசிகளும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் பின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம்மொனராகல வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண் படுகொலை செய்யப்படுவதற்கு முன் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா என்பதை அறிந்துகொள்ள மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி வேஹித தேசப்பிரியவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.(செ-12)

# இன்று ஒரு தகவல்

## மகிழவைத்து மகிழ்வோம்

சுற்றியிருப்போர் சோகமாய் இருக்க அக்கும்பலின் நடுவே ஒருவன் மட்டும் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டு இருந்தால் அவனை எந்த இரகத்தில் சேர்ப்பது?

சிரிக்கும் படியான சூழ்நிலை அங்கு நிலவத்தான் சிரிக்கக் காரணமாய் இருந்த ஒன்றை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டு அனைவரையும் சிரிக்கவைப்பது தானே முறையான செயல்.

உள்ளுர மகிழும் உள்ளத்தில் செயலும் இத்தகைய தாகவே இருக்க வேண்டும்.

இன்னொரு வகையான மனிதர்கள் இருக் கிறார் கள். இவர்கள் மற்றவர்களை உறிஞ்சிக் கொழுப் பார்கள். அவர்களை சக்கையாக்கிப் பார்ப்பதில் இவர்க ளுக்கு ஒரு மகிழ்ச்சி.

நமக்கு ஏற்படக் கூடிய மகிழ்ச்சி இருக்கிறதே. அது மற்றவர்களின் சோகத்தில் உதித்ததாக இருக்கக் கூடாது. இது எப்படிச் சாத்தியம்?என்று வினவும் புத்தி சாலிகளுக்கு என் வாதத்தைச் சற்றுத் தளர்த்திக் கொள்கிறேன். நம் முன்னேற்றம் காரணமாக எவ்வளவோ பேர் பின் தங்க நேரிடலாம். ஆனால் அவர்களைப் பின் தங்க வைக்க வேண்டும் என்பது நம் குறிக்கோளாக இருக்கக் கூடாது. இயல்பாக அவர்க ளுக்கு நட்டம் ஏற்பட்டால் ஏற்படட்டும். அதற்கு நீங்கள் நேரடிப் பொறுப்பாளி ஆக மாட்டீர்கள்.

நண்பர்கள், பெற்றோர்கள் ,உடன் பிறப்புகள், உறவினர்கள்,தொழிலாளிகள் அல்லது முதலாளிகள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் ஆகியோர் தாம் நம் மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் காரணமாக இருக்கிறார்கள்.

இவர்களை மகிழ்ச்சியாக வைத்திரா விட்டால், சுயநல உயர்வோடு கூடிய நம்முடைய மகிழ்ச்சியைக் கூட,ஜீரணிக்க முடியாத படி இவர்கள் செய்து விடு வார்கள்.

தனக்குத் துன்பம் ஏற்படும் போது அதைப் பகிர்ந்து கொள்ள எவரும் முன்வரவில்லையே என்று ஊர் உலகத்தைத் திட்டித் தீர்க்கும் ஒருவன் தனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது எந்த வகையில் நியாயம் எனப் புரிய வில்லை.

மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதைக் காட்டிலும் மற்றவர்களை மகிழ்வித்து அதைக் கண்டு நீங்கள் மகிழும் தன்மை இருக்கின்றதே அது தான் மிகச் சிறந்த மகிழ்ச்சி, நிரந்தரமானது,உண்மையானதும் கூட.

மற்றவர்களை மகிழ்வித்து அதைக் கண்டு நான் மகிழ்வதாவது? எல்லோரையும் எல்லாக் காலத்திலும் மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியுமா? இதெல்லாம் கட்டுப்படியாகிற விடயமா? ஆகிய கேள்விகள் இங்கு சிந்திக்கத்தக்கவை.

சொல்லால் செயலால் பொருளால் ஆகிய மூன்று வழிகள் மூலம் தாம் மற்றவர்களுக்கு நாம் மகிழ்ச் சியை வழங்க முடியும்.

உங்களை நட்டப்படுத்திக் கொள்ளாமல், சொல்லால் செயலால் ஆகிய இரு வகைகளிலாவது மற்றவர்க ளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த முன்வரலாமே.!

**லேனா தமிழ்வாணன்**




# பூமிக்கு வந்த சூரியப் பந்து!



எப்போதுமே வானத்திலேயே இருக்கிறோமே, கொஞ்சம் பூமிக்குத்தான் போய் பார்ப்போமே' என வானத்தில் தெரியும் சூரியனுக்கு ஒரே ஆசை.

உடனே பூமிக்கு இறங்க ஆரம்பித்தது. மலைகளின் முகட்டில் இறங்கிய சூரியனுக்கு ஒரு யோசனை வந்துச்சு.

தன்னுடைய சூட்டை பூமி தாங்குமான்னு யோசித்துக் கொண்டே இருந்தது. அருகில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் இறங்கி சூட்டை குறைக்கப் பார்த்தது சூரியன்.

சூரியனின் வெப்பம் அவ்வளவு சீக்கிரமா குறைஞ்சிடுமா என்ன? இருந்தாலும் கொஞ்ச நேரம் தண்ணியிலேயே சுத்தி சுத்தி வந்ததால, சூடு கொஞ்சம் குறைஞ்சு காணப்பட்டது.

தண்ணியில இருந்து வெளியே வந்த சூரியன், காட்டை சுத்தி சுத்திப் பார்த்தது. நெடு நெடுவென வளர்ந்த உயரமான மரங்கள், குண்டு குண்டான மரங்கள், அவற்றில் கொத்து கொத்தாக பழங்களையும், பூக்களையும் கண்டு சந்தோஷப்பட்டுச்சு.

மரங்கள் ரொம்ப அதிகமாக இருந்ததால அந்த இடம் இருட்டா இருந்துச்சு. சூரியன் உள்ளே நுழைந்ததும் நூறு அகல் விளக்குகளை ஏத்தி வச்சது மாதிரி வெளிச்சமானது அந்தக் காடு.

திடீரென ஏதோ வெளிச்சம் வருகிறதே என தூரத்தில் பார்த்த இரு யானைகள், வெளிச்சம் வந்த இடத்தைப் பார்க்க வேகமாக வந்துச்சுங்க. தூரத்தில் இருந்து பார்த்தப்ப, சூரியன் வட்டமாக தெரிஞ்சது.

"அட! அதோ பாரேன் ஒரு பந்து" என்றது மகி யானை.

"ச்சே..ச்சே... கால்பந்தா இருந்தா ஒளிராதே" என்றது வாண்டு யானை.

"எது எப்படியோ, நமக்கு விளையாட ஒரு கால்பந்து கிடைச்சிருச்சி. வா சீக்கிரமா போய் பந்தை எடுத்து விளையாடலாம்" என்றழைத்தது மகி யானை.

"ஏய், நல்லா பாரு. அது பந்தா! பந்துன்னா இவ்வளவு வெளிச்சமா ஒளிராதே. இது பந்தா இருக்காது" என்றது வாண்டு யானை.

"சரி... வா, கிட்ட போய் பார்ப்போம்" என்றது மகி யானை.

சூரியனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்ன! இந்த யானைகள் என்னை பந்துன்னு நினைச்சிடுச்சிங்களா. பூமிக்கு வந்துட்டதால என்னை அடையாளம் தெரியாமப் போச்சா?" என மனசுக்குள்ள சொல்லிக்கிச்சு.

அருகில் வந்த யானைங்க சூரியப் பந்தை அதிசயமாக பார்த்துச்சுங்க.

"வாண்டு! நீ சொன்னது போல் இது பந்தில்லைன்னு நினைக்கிறேன்" என்றது மகி.

"ஆமாம் மகி! அப்படின்னா இது என்னது? இவ்வளவு வெளிச்சமா இருக்கே. கிட்ட போனா ரொம்ப சுடுதே" என்றது வாண்டு.

"சரி. பேசிக்கிட்டே இருந்தா எப்படி. நாம் விளையாடப் பந்து கிடைச்சிருச்சு. வா விளையாடலாம்" என மீண்டும் அழைத்தது மகி.

(தொடரும்)




- 1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1556 - கண்டர்பரி பேராயர் தோமஸ் கிரான்மர் ஒக்ஸ்போர்ட் நகரில் எரியூட்டிக் கொல்லப்பட்டார்.
- 1788 - லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரில் நிகழ்ந்த பெரும் தீயினால் 25 வீதம் நகர மக்கள் கொல்லப்பட்டனர்.
- 1800 - உரோம் நகரில் இடம்பெற்ற கலகங்களை அடுத்து கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்கள் நகரை விட்டு அகற்றப்பட்டதை அடுத்து, வெனிஸ் நகரில் ஏழாம் பயஸ் பாப்பரசராகப் பதவியேற்றார்.
- 1801 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கிடையில் எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் போர் இடம்பெற்றது.
- 1857 - டோக்கியோவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 100,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1905 - ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது புகழ் பெற்ற சிறப்புச் சார்புக் கோட்பாடு கொள்கையை வெளியிட்டார்.
- 1917 - டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1933 - டச்சு வதை முகாம், நாசிகளின் முதலாவது வதை முகாம், ஜேர்மனியில் அமைக்கப்பட்டது.
- 1935 - பேர்சியா நாட்டை ஈரான் என அழைக்கும்படி ரெசாஷா வெளிநாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் மண்டலாய் நகரை பிரித்தானியப் படைகள் விடுவித்தனர்.
- 1948 - முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.
- 1970 - முதலாவது பூமி நாளுக்கான அழைப்பை சான் பிரான்சிஸ்கோ மேயர் ஜோசப் அலியோட்டோ விடுத்தார்.
- 1980 - ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்து மொஸ்கோவில் 1980 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிப்ப தாக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.
- 1984 - மணலாறு பிரதேசத்தைத் தடைவலயமாக்கி இலங்கை அரசு அங்கிருந்த தமிழர்களை அடித்து விரட்டினர்.
- 1990 - 75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.
- 1994 - ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கிய Schindler's List ஏழு ஆஸ்கார் விருதுகளை வென்றது.
- 1998 - புனித வெள்ளி உடன்பாடு வடக்கு அயர்லாந்தில் எட்டப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1768 - ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சுக் கணிதவியலாளர (இ. 1830)
- 1807 - சைமன் காசிச்செட்டி, 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் தமிழ் புளூட்டாக் நூலை எழுதிய ஈழத்தவர்.
- 1916 - பிஸ்மில்லா கான் உலகப் புகழ்பெற்ற ஷெனாய் இசை மேதை (இ. 2006)
- 1922 - முஜிபுர் ரகுமான், வங்காள தேசப் பிரதமர் (இ. 1975)
- 1923 - என். மகாலிங்கம், தமிழகத் தொழிலதிபர்
- 1932 - வால்டர் கில்பேர்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்.
- 1936 - காமினி பொன்சேகா, சிங்களத் திரைப்பட நடிகர் (இ. 2004)

**இறப்புக்கள்**

- 2008 - க. சச்சிதானந்தன், ஈழத்துத் தமிழறிஞர், (பி. 1921)

**சிறப்பு நாள்**

- **உலக கவிதை தினம்**
- உலக வன தினம்
- உலக செய்யுள் தினம்

### உலக கவிதை தினம்




மனிதனிடம் மனிதம் தழைத்தோங்க வழிவகை செய்வதில் இலகியத்துக்குப் பெரும் பங்கு உண்டு. அதிலே, அழகியல் மிகுந்து காணப்படும் கவிதையே முன்னிலை வகிக்கிறது .

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 21 ஆம் திகதியில் "உலக கவிதை தினம்" அனுசரிக்கப்படுகிறது.

நாம் அன்றாடம் எவ்வளவோ விடயங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்போது நமக்கு நெருக்கமான விடயத்தைக் கவிதையில் கொண்டு வரும்போது அந்த விடயம் எல்லோருக்கும் நெருக்கமான அனுபவமாக மாறுகிறது.

அந்த அனுபவம் படிப்பவர்களின் உள்ளே ஏதாவது ஒன்றைத் திறக்க வேண்டும். எனக்குள் திறந்த விடயம் இன்னொருவருக்கும் திறக்க வேண்டும். இதுதான் கவிதை.

யாராவது ஒரு கவிஞனின் கவிதையை நாம் படித்துக்கொண்டிருக்கும்போது எமக்குள் படிந்திருந்த ஏதோ ஒரு விடயத்தைத் திடீரென்று ஞாபகப்படுத்தும். இதைத்தான் கவிதை என்று நினைக்கிறோம்.

கவிதை சத்தமாகப் பேச வேண்டும் என்றோ அது பலவிதமான வரையறைகளைக் கொண்டுள்ளது என்றோ நாம் நினைக்கவில்லை. எப்படியான அனுபவத்தையும் சாதாரண வார்த்தைகளில் சொல்ல முடியும்.

கவிதைகளைப் படித்தல், படைத்தல், பயிற்றுவித்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளதே "உலக கவிதை தினம்"

ஐக்கிய நாடுகளின் அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ நிறுவனத்தால் 1999 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, உலக நாடுகள் முழுவதும் இந்த உன்னத தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

# தமிழ் இலக்கியங்களில் பனை

குளம் தொட்டு வளம் பெருக்கு வது போல் பனை தொட்டு வளம் பெருக்கி வந்தனர் நம் பழந்தமிழ் மக்கள். அந்த வகையில் தமிழ் மக் களின் வாழ்வியலோடு இரண் டறக் கலந்துவிட்டமைக்கான அகச் சான் றுகளும் புறச்சான்றுகளும் நிறைய உள்ளன. இலக்கியங்க ளில் முதற் பொருள் , கருப்பொ ருள், உரிப் பொருள் என மூன்று உள்ளன. தொல்காப்பியம் குறிப் பிடும் முதல், கரு, உரிப்பொருள் பகுப்பில் முதல் என்பது புவியியற் பின்னணியா கவும் கரு என்பது பொருளியற் பெரும் பகுதியாகவும் பண்பாட் டையும் கொண்டிருப்பதாகவும் கருத இடமுண்டு. முதலும் கருவுமே உரிப்பொருளாகிய வாழ்வைத் தீர் மானிக்கும் காரணங்களாக இருந் ததை சங்க இலக்கியங்களில் காண லாம். இதன்மறுபெயர்கள்பெண்ணை, தாலம், தானி, தானிப்பல், கற்ப கதரு.

பெரும்பான்மையாக தமிழர் வாழ்ந்த வாழும் நிலப்பரப்பின் புவியியல் அமைப்பில் தானா கவே வளர்ந்து நீரூற்றிப் பாதுகாக்கத் தேவையின்றி பயன்தரும் ஒரு தாவ ரமாக பனை காணப்படுகின்றது. இதனாலே தமிழ் மக்களின் வாழ் வியலோடு பனை ஒன்றி இருத்த லில் வியப்பில்லை.

சங்க காலத்திலும் சம காலத் திலும் பனையும் பனம் பொருளும் நேரடியாகவோ உவமையாகவோ பேணப்பட்டு வந்துள்ளன. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், தேவாரங் கள், சிற்றிலக்கியங்கள், நவீன இலக் கியங்கள் பலவற்றிலும் பனை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள் ளன.

பனம் மட்டையை பனம் மடல் என்று அழைப்பர். பனம் மட்டை யால் குதிரை செய்து அதில் உலா வந்து காதலைப் பலப்படுத்துதலை மடல் ஏறுதல் என அகத்தினை இல க்கியம் கூறும். எமது கல்வி மர பிலோ பனையோலை மிக முக்கி யமான இடத்தைப் பெற்றுள்ளது. பனை யோலையால் செய்யப்பட்ட ஏடு, ஓலை என்ற பெயரால் வழ ங்கலாயிற்று. இன்றும் கிராமங்க ளில் ஒருவரின் சாதனைக் குறிப் பினை ஓலை என்று வழங்கும் வழக் கம் இருந்து வருகின்றது. கடதாசி உபயோகத்துக்கு வருமுன்னர் பனையோலை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு தூதோலை, சாவோலை முதலான செயற்பாடுகளும் இக்காலத்திலும் வழக்கிலிருந்து வருகின் றன.

வீரத்துக்கு புகழ்மிக்க தமிழ்ப் பாமாலை சூட்டிய சங்க இலக்கிய புலவர்கள் நிலத்தாவரமான பனை யின் பயன்பாட்டையும் பாவுக்குள் பூத்துக்குலுங்க வைக்கத் தவறவி ல்லை. சங்க இலக்கியங்களில் பேச ப்பட்ட பனம் பொருள் பற்றி புறநா னூறில் ஒரு பாடல்

**''தலையோர் நுங்கின் தீஞ் சாறு மிசைய**
**இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்**
**கடையோர் விடுவாய் பிசிரோடு சுடுகிழங்கு நுகர்''**

இங்கே ''நுங்கின் தீஞ்சாறு மிசைய பைங்கனி மாந்த'' என்ற சொற்றொடர்கள் பனையின் பயன் பாட்டைக் கூறுகின்றன. பைங்கனி என்பது பைங்களி என அழைக்கும் வழக்குமுண்டு. சங்க இலக்கியங் களில் பேசப்பட்ட பனம் பொருள் பற்றி சொற்கள் பல இன்று திரிந்து வழங்குவதையும் காணலால்.

"குடை" என்ற சொல்லே காலப் போக்கில் "குடலை" ஆக மாறியுள் ளது என்பதற்கு நவாலியூர் சோசுந் தரப்புலவர் பாடல் ஒன்று அகச்சா ன்றாக விளங்குகின்றது.

''உந்தன் தசை அரிந்தே ஓலைக் குடலைச் சென்று
விற்றனரோ தின்று பசியாறினரோ''

என்ற பாடல் மூலம் குடல் குடலையாயிற்று புறம் 177 ஆவது பாடலில் பனங்குடை என்ற சொல் உண்கலம் என்ற பொருளில் வருவ தைக் காணலாம்.

"இருள் பனங்குடையின் மிசை யும்''

என்ற தொடருக்கும் பெரிய பனையோலை இயன்ற குடையிலே நுகரும் என உரை கூறப்பட்டுள்ளது. இற்றைக்கு சில காலங்களுக்கு முன்னர் பனையோலையாற் செய் யப்பட்ட உண்கலம் தட்டும் என்னும் பெயரால் அழைக்கப்பட்ட வழக் காறு இருந்தது. இது முற்றாக அரு கிவிட்டது என்று கூறமுடியாது.

புறம் 33 ஆவது செய்யுளில்

"மான்றசை சொரிந்து வட்டி"

என்ற தொடர் இடம்பெறுகின்றது. வட்டி என்ற சொல்லுக்குப் பொருள் உரையாசிரியர் பெட்டி என்றே உரைத் துள்ளார். குறிப்புரையிற் செய்யப் பட்ட பெரிய "பெட்டி" என்றே குறிப் பிடுவார்.

மலைபடு கடாம் 152 ஆவது அடியில்

"ஊனார் வட்டியர்"

என்ற தொடருக்கு நச்சினாக்கி னியர் தனக்கிறைந்த கடகத்தையு டையது என உரைத்துள்ளார். வட்டி என்ற சொல் பெட்டி எனத் திரிந்து பின்னர் கடகப் பெட்டியாக இன்றும் வழங்கி வருவதைக் காணலாம்.

இன்றும் ஓலையால் இழைக்கப் பட்டவற்றினுள் சிறியவற்றை பெட்டி என்றும் பெரியவற்றை கடகம், கட கப் பெட்டி என்றும் அழைக்கும் வழ க்கத்தைத் தமிழ் மக்களிடையே காணலாம். இவ்வாறு சங்க இலக் கியங்களிலே நுங்கின் மேற்பாக த்தை பனை முகிழ் என அழைப்பர்.

இன்று இச்சொல் பனுவிழ் என்று வழங்குவதை அவதானிக் கலாம். இவ்வாறு பல சொற்கள் இன்றைய வழக்கிலேயே காண லாம். பனம் புடை (பனை மாலை - 91) (பனைத் தோடு சிலம்பு 252-14) பெண்ணை ப்பிழ்(கள்) (பட்டினப் பாலை 89)

''காடும் கையும் உடையன போல்'' (கலிங்கம்)

கூட்டம் கூட்டமாக இருக்கும் இடத்தை பனங்காடு, பனந்தோப்பு, பனங்கூடல் என அழைக்கும் வழக் கம் இன்றும் இருப்பதைக் காண லாம். ஈழத்து இலக்கியங்களில் சோமசுந்தரப் புலவர் பாடிய இலங்கை வாழும் தால விலாசமும் பொன் னம்பல முதலியார் பாடிய பனை நானூறு என்னும் கவிதை நூல் மட்டுமின்றி இன்றும் பல ஈழத்துப் புலவர்களும் பனையின் பயன் பாட்டை உணர்ந்தே தம் கவிதை களில் பனையைப்பாடு பொரு ளாகக் கொண்டனர்.

தமிழ் மக்களின் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட பனை சங்க இலக்கி யங்களிலும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற இலக்கியங்க ளிலும் நாட்டார் இலக்கியங்களிலுள் இன்று வரை நிறைந்துள்ளது.

புலவர் கதிர் சின்னத்தம்பி
வல்வெட்டி

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 668

கம்சி




மது



றோகன்




ரம்சன்

தேவை இருந்தால்....
உன்னை தெய்வம் என்பர்
உன்னால் தேவை முடிந்தபின்
உன்னையே தேவாங்கு என்பவர்
**என்ன உலகமடா**
**யாரையும் நம்பாதே**

தர்சினி



தர்மசிலன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2016~13.04.2016

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**எதிரிக்கும் நல்ல ஆலோசனைகளை வழங்கும் நல்ல மனம் பெற்ற மிதுன இராசி நேயர்களே! திட்டமிடாது செய்யும் காரியம் வெற்றி கிட்டும்!**




## திட்டமிடாது செய்யும் காரியம் வெற்றி கிடைக்கும்!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் புதன் வலிமை இழந்து சஞ்சரிக்கின்றார். இருப்பினும் சகாய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். அதே நேரத்தில் சப்தமாதிபதியாகவும் 10 இற்கு அதிபதியாகவும் விளங்கும் குருபகவான் வக்ரம் பெற்றிருக்கின்றார். எனவே, வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் உருவாகி மறையும். உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாகச் சொன்ன நண்பர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம்.

9 இல் கேது 12 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்ரனோடு இணைந்திருப்பதால் சிலருக்கு பூர்வீக சொத்துக்களை விற்கக் கூடிய சூழ்நிலை உருவாகலாம். பொருளாதாரத்தில் ஏற்றமும், இறக்கமும் வந்துகொண்டே இருக்கும். புதியவர்களைக் கூட்டு சேர்த்துக்கொண்டு தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மாற்ற சிந்தனைகளும் வேலை மாற்றச் சிந்தனைகளும் மேலோங்கும்.

இம்மாதத்தில் செவ்வாயும், சனியும் இணைந்து சஞ்சரிப்பது யோகம்தான். ஆறாமிடத்திற்கும், பதினோராமிடத்திற்கும் அதிபதியானவர் செவ்வாய். அதே நேரத்தில் 8 ஆம் இடத்திற்கும் ஒன்பதாமிடத்திற்கும் அதிபதியானவர் சனி பகவான். 6, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான இரண்டு கிரகங்கள் ஒன்றுசேரும் பொழுது திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். அப்படி சேரும் கிரகங்கள் 6 ஆம் இடத்திலோ, 8 ஆம் இடத்திலோ இருந்தால் மேலும் நற்பலன்களைக் கொடுக்கும். இதை ராஜ யோக அமைப்பாகக் கருதுவர். அதே நிலை இம்மாதத்தில் உங்களுக்கு அமைவதால் திட்டமிடாது நீங்கள் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகலாம். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றலாம். தனவரவு உங்களுக்கு தக்க விதத்தில் செலவிற்கு கைகொடுக்கலாம்.

இனத்தார் பகை மாறவும், இம்மாதம் மட்டுமல்லாமல் எல்லா மாதங்களிலும் ஏராளமான இனிய சமபவங்கள் நடைபெறவும் பங்குனி உத்திர நாளில் விரதமிருந்து பால முருகனை வழிபடுவது நல்லது. செவ்வாய்க்குரிய தெய்வம் முருகப் பெருமான் என்பதால்நல்வாழ்வை முருகப்பெருமான்உங்களுக்கு வழங்குவார்.

**மேஷ புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 30 ஆம் திகதி மேட ராசியில் புதன்சஞ்சரிக்கப் போகின்றார். இது யோக மான காலம் தான். நீச்ச புதன் மாறி லாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது ஆச்சரியப்படத்தக்க தகவல்கள் அதிகமாகவே நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவரகளுக்கு உயர் பதவியும், எதிர்பார்த்த ஊதிய உயர்வும் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வரும் தகவல் அனுகூலமானதாக இருக்கும். வியாபார முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றியைத் தரும். சகோதரர்களுடன் இணக்கம் ஏற்படும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 2 ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறப் போகின்றார். 5 இற்கு அதிபதியான சுக்ரன உச்சம் பெறும்பொழுது பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். அவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தால் எதிர்பார்த்தபடியே நல்ல வேலை கிடைக்கும். நாடு மாற்றங்களும் கூட ஏற்படலாம். நண்பர்கள் மூலம் செய்த முயற்சியில் இப்பொழுது நல்ல பலன் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டுவந்து அணிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மேலும் திசாபுத்திக்கேற்ற சிறப்பு வழிபாடு களையும் மேற்கொண்டால் செவ்வாய், சனி சேர்க்கை காலம் கூட செல்வச் செழிப்பு மிக்க காலமாக மாறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

மாங்கல நிகழ்ச்சி கள் இல்லத்தில் நடைபெறும் மாதமாகும். வாங்கல்-கொடுக் கல்கள் ஒழுங்காகும். வருமானம் திருப்தி கரமாக இருக்கும்.

மண விழா, மணிவிழா, பெண்களின் சுபச்சடங்குகள் எதிர்பார்த்தபடி நடைபெறும். கணவன், மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தாய்வழி ஆதரவோடு தனவரவு திருப்திகரமாக அமையும்.

பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்பட லாம். ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

செவ்வாய், சனி சேர்க்கைக்கு பரிகாரமாக முருகப்பெருமான் வழிபாட்டையும், சனி பகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். நட்சத்திர அடிப்படையில் சிறப்பு பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.



**சாதுரியமாகப் பேசி சாதிக்கும் கடக இராசி நேயர்களே! திடீர் இடமாற்றம் தித்திக்க வைக்கும்!**




## திடீர் இடமாற்றம் தித்திக்க வைக்கும்!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது உங்கள் ராசிநாதன் சந்திரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்க மாதம் பிறக்கின்றது. அஷ்டமத்தில் சுக்ரன் கேதுவோடு இருக்கின்றார். தனாதிபதியும், சகாய ஸ்தானாதிபதியும் 9 இல்உலா வருகின்றார்கள். எனவே, பணவரவு திருப்திகரமாக இருக்கும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வளர்ச்சி கூடுதலாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக லாபம் கிடைக்க லாம். தொல்லை கொடுத்து வந்த எதிரிகள் தாங்களாகவே வலகிக் கொள்வர். அருளாளர்களின் சந்திப்பும், ஆன்மிகப் பணிகளில் இருந்த தேக்கமும் மாறும். புதிய கோவில் கட்டிக் குடமுழுக்கு செய்வது அல்லது பூர்வீக கோவில்களை புதுப்பிப்பது போன்ற ஆன்மிகப் பணிகளுக்கு வித்திடும் நேரமிது.

பெற்றோர்களின் ஆதரவும், பிரியமும் கூடும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக எடுத்த முயற்சிகள் கைகூடலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களின் குரலுக்கு மேலதிகாரிகள் செவி சாய்ப்பர். உடன் பணிபுரிபவர்கள் உங்களுக்கு கரம் கொடுத்து உதவுவர். ஆனால் இத்தனைக்கும் மத்தியில் சனி, செவ்வாய் சேர்க்கை பஞ்சம ஸ்தானத்தில் ஏற்படுகின்றது. இதன் விளைவாக ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் வரலாம். கூடுதல் கவனம் செலுத்தி பதிந்த பத்திரப் பதிவில் கூட குறைகள் ஏற்படலாம். உங்கள் மேற்பார்வையில் குழந்தைகளை வைத்துக் கொண்டால் ஏந்தப் பிரச்சினைகளும் ஏற்படாது. குழந்தைகளின் கல்யாணக் கனவுகளும், கடல் தாண்டும் முயற்சியும் கைகூட வைக்கும் நேரமிது. அங்காரகனும், சனியும் அமைந்த இடம் உங்கள் சுய ஜாதகத்தில் அமைந்தது எது என்பதை அறிந்து அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்துச் சென்று வழிபட்டு வந்தால் வரப்போகும் துயரங்கள் வாயிலோடு நிற்கும்.

**மேஷ புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 30 ஆம் திகதி மேஷத்திற்கு புதன் செல்லப் போகின்றார். இதன் விளைவாக தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பழைய தொழிலை கொடுத்து விட்டுப் புதிய தொழிலைத் தொடங்கலாமா? என்ற எண்ணம் உருவாகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆக்கபூர்வ மான சில வேலைகளைச் செய்து மகிழ்வீர்கள். சகோதர வர்க்கத்தினரின் கோபம் தணியும்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 2ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். இக்காலத்தில் சில நல்ல மாற்றங்கள் வந்து சேரும். வெளிநாட்டு பயணத்தால் அனுகூலங்கள் கிடைக்கும். நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்கள் இப்பொழுது வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வர். வீடு மாற்றங்களால் குடும்பத்தில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள், புனிதப் பயணங்கள், பூமி வாங்கும் யோகம் புகழ்மிக்கவர்களின் சந்திப்பு, பொருளாதார நிலை உயர்வு போன்றவை நடைபெறும் நேரமிது.

தற்சமயம் செவ்வாய், சனி சேர்க்கையை பொறுத்தவரை உங்கள ராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது சில மாற்றங்கள் உருவாகும் என்றே சொல்லலாம். யோகாதிபதி செவ்வாயோடு சப்தமாதிபதி சனி சேர்ந்து சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். குறிப்பாக அவர்களின் வேலை வாய்ப்பிற்காகச் செய்த முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்க ஆர்வம் காட்டுவீர்கள். நிலபுலன்கள்சேருவதற்கான வாய்ப்பு உண்டு. இம்மாதம் செவ்வாய் தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். பங்குனி உத்திரத் திருநாளில் சிவ மைந்தனை வழிபட்டால் பலன்கள் அதிகம் கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணப்பற்றாக் குறை அகலும். ப்க்தி அதிகரிக்கும். குழப்பங்கள் அகல குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். ஆடம்பரச் செலவுகளைக குறைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பீர்கள். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க வேண்டுமென்று குடும்ப உறுப்பினர்கள வலியுறுத்துவர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிணக்குகளை நீக்கி இணக்கமாக நடந்து கொள்வீர்கள்.

குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. செவ்வாய், சனி சேர்க்கைக்கு உரிய பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. உத்திர நாளில் முருகனை வழிபட்டால் உன்னத வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

# வாய்ப்புக் குறையும்போது அதிகரிக்கும் நாட்டம்!

பற்றாக்குறை கோட்பாடு (The Scarcity Principle) பற்றி முன்பு பார்த்தோம். அதிகமாக இருக்கும் எதன் மதிப்பும் நமக்குத் தெரிவதில்லை. கிடைப்பதற்கு அரிதாக இருப்பது மதிப்பு மிக்கதாகத் தெரிகிறது. பற்றாக் குறையான பொருள் என்றால் அதை வாங்க வேண்டும் என்று மனம் அலை கிறது. குறைவாய் கிடைக்கும் பொருளுக்குத் தான் அதிக கிராக்கி இருக்கிறது. இத்தனை ஏன், ஆடையில் பற்றாக்குறை இருந்தால் தானே பார்ப்பதற்கு பரவசமாய் இருக்கிறது!

சில காலம் முன்பு இந்தியாவில் மேகி நூடுல்ஸில் உலோகம் கலந்திருக்கிறது, மோனோ சோடியம் குளூடோமேட் இருக்கிறது என்று பழி சுமத்தப்பட்ட நேரம். அழுத்திப் பிழிந்தால் மேகியில் பெட்ரோல் டீசல் கிடைக்கிறது என்று சொல்லாதது ஒன்றுதான் பாக்கி. பல மாநிலங்கள் மேகியை தடை செய்தன. 'நெஸ்லே' கடைகளிலிருந்து மேகியை திருப்பி எடுக்கவிருந்த நேரம். இனி மேகி கிடைக்காது என்ற பற்றாக்குறை சூழ்நிலை. அந்த நிலையிலும், உடலுக்கு தீங்கு என்ற பேச்சுக்கு மத்தியிலும் மக்களுக்கு இருந்த கவலை எல்லாம் அய்யோ இனி மேகி கிடைக்காதே என்பதே. பாசம் பீறிட கடை மீது படையெடுத்து மிச்சம் மீதி யிருந்த மேகியை மொத்தமாய் கொண்டு சென்றார்கள்.

பற்றாக்குறை கோட்பாட்டின் லீலை இதோடு முடியவில்லை. பிரச்சினை முடிந்து மேகி சீர் செய்யப்பட்டு மீண்டும் விற்பனை துவங்கும் என்று அறிவிக்கப்பட்டு பிராண்ட் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள நெஸ்லே கடைகளில் விற்காமல் மேகியை 'ஸ்நாப்டீல்' சைட்டில் விற்றது. விற்க துவங்கிய ஐந்தாவது நிமிடம் அறுபதாயிரம் பேக்குகள் விற்று தீர்ந்தன. குறைவாய் கிடைத்த இரண்டு நிமிட பிராண்டை வாங்க மக்களுக்கு ஐந்து நிமிடங்களே தேவைப்பட்டது. இதுதான் பற்றாக்குறை கோட்பாட்டின் மகிமை.

இது போல் பல சாட்சிகள் தெளிவாக உணர்த்துகின்றன. பற்றாக்குறை கோட்பாடு முறையானது, பரவலானது, தினப்படி வாழ்க்கையை பரந்து விரிந்து பல வழிகளில் பாதிக்கும் சக்தி கொண்டது. நம் எண்ணங்களை, செயல்களை இயக்கும் சக்தி கொண்டது. சரி. பற்றாக்குறை மீது நமக்கு இத்தனை பற்று? ஏன் இந்த கோட்பாட்டின் மீது நமக்கு கேட்பாரற்ற ஈடுபாடு?




இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் என்கிறார்கள் சமூக உளவியலாளர்கள்.

எளிதாகக் கிடைக்கும் எதையும் விட மெனெக்கெட்டு பெறும் விடயம் சிறந்தது என்று நம்புகிறோம். எந்த ஒரு விடயத்தின் தன்மையை, தரத்தை அது எளிதாக கிடைப்பதை அரிதாக கிடைப்பதைக் கொண்டே தீர்மானிக்கிறோம். மின்சாரம் ஒழுங்காய் கிடைக்கும் போது நமக்கு அதன் அருமை தெரிவதில்லை. கரண்ட் போகும் போதுதான் உயிர் போனது போல் உணர்கிறோம்.

இரண்டாவது, ஒரு விடயம் பற்றாக்குறையால் குறையும் போது அதை பெறும் வாய்ப்பு நமக்கு குறைகிறது. வாய்ப்பு குறைவதால் சுதந்திரம் பறிபோனது போல் உணர்கிறோம். இதைப் புரிந்துகொள்ள 'டியூக் பல்கலைக்கழக' சமூக உளவியல் பேராசிரியர் 'ஜாக் பிரேம்' வழங்கிய 'சைக்காலஜிகல் ரியாக்டன்ஸ் கோட்பாடு' பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. தனிப்பட்ட ஆதிக்கம் குறையும்போது நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதை விளக்குவதே இந்த கோட்பாடு.

ஒரு விடயத்தை சுதந்திரமாய் தேர்வு செய்யும் வாய்ப்புக் குறையும்போது நாம் இழக்கும் சுதந்திரத்தை மீண்டும் பெற விரும்புகிறோம். முன்பை விட அந்த விடயம் மீது அதிக நாட்டம் கொள்கிறோம். சுதந்திரத்திற்கு வரும் குறுக் கீட்டை மீறி அந்த விடயத்தை பெற முன்பை விட அதிக ஆர்வம் காட்டுகிறோம்.

இக்குணத்தை 3 வயதாக இருக்கும்போது முதலில் பெறு கிறோம் என்கிறார்கள் குழந்தைகளுக்கான உளவியல் நிபுணர்கள். அமெரிக்காவில் வர்ஜினியா மாகாணத்தில் நடந்த ஆய்வு இதை விளக்கும். மூன்று வயது குழந்தைகள் அவர்கள் அம்மாக்களுடன் ஆய்வுக்கூடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு 2 அழகான பொம்மைகள் ஒன்றன் பின் ஒன்று வைக்கப் பட்டது. 2 பொம்மைகளுக்கு நடுவில் ஒரு பிளாஸ்டிக் தடுப்பு நிறுத்தப்பட்டது. தடுப்பு போலிருந்தாலும் முன்னால் நின்று பார்த்தால் பின்னால் இருக்கும் பொம்மை தெரிவது போல அமைக்கப்பட்டது.

ஒரு சின்ன வித்தியாசத்துடன், ஆய்வில் கலந்துகொண்ட குழந்தைகளில் பாதிபேர் கூடத்திற்கு வரும்போது ஒரு அடி உயர தடுப்பும் மற்ற குழந்தைகளுக்கு 2 அடி தடுப்பும் வைக் கப் [illegible] வரும் குழந்தைகள் எந்த பொம்மையை முதலில் எடுக் கிறார்கள் என்று பார்ப்பதற்காக இப்படி செய்யப் பட்டது.

ஆய்வில் கலந்து கொண்ட குழந்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக கூடத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். ஒரு அடி தடுப்பு இருந்த போது வந்த குழந்தைகள் பொம்மைகளை பார்த்த மாத்திரம் முன்னால் இருந்த பொம்மையை முதலில் எடுத்து விளையாடத் தொடங்கினார்கள். ஆனால் 2 அடி தடுப்பு வைக்கப் பட்டிருந்த போது வந்த குழந்தைகள் பொம்மைகளைப் பார்த்த மாத்திரம் எம்பி பின்னால் இருந்த பொம்மையைத்தான் முதலில் எடுத்தார்கள். கண் முன்னால், கையருகே ஒரு பொம்மை இருந்த போதும்.

ஏன் இப்படி? ஒரு அடி மட்டுமே தடுப்பு இருக்கும் போது எந்த பொம்மையையும் ஈசியாக எடுக்கலாம் என்கிற நிலை. அப்பொழுது முன்னால் இருக்கும் பொம்மைதான் முதலில் எடுக்கப் படுகிறது. தடுப்பு வைத்து அந்த சுதந்திரம் சற்றே பறிக்கப்படும் போது மனித மனம் 'ஏன் தடுப்பு, அதை எதற்கு வைத்திருக் கிறீர்கள், பின்னால் இருக்கும் பொம்மை எனக்கில்லையா, ம்ஹூம் அதைத் தான் முதலில் எடுப்பேன்' என்று மைண்ட் வாய்ஸ் கூற பின்னால் உள்ள பொம்மை முதலில் எடுக்கப்படுகிறது.

சுதந்திரம் பறிக்கப்படும் போது, குறைக்கப்படும் போது நாம நடந்து கொள் ளும் முறை புரிகிறதா? 3 வயதில் பிள்ளையார் சுழிபோட்டுத் தொடங்கும் இக்குணம் டீன் ஏஜ் பருவத்தில் பிள்ளையார் சைஸ்/க்கு மனதில் வேரூன்றி விடுகிறது. அந்த வயதில் பெற்றோர்களோ பெரியவர்களோ ஏதாவது முட்டுக் கட்டை போட்டால் உருட்டு கட்டையால் அவர்களை அடிக்க வேண்டும் போல் தோன்றுகிறது.

டீன் ஏஜ் பருவத்தில் அதிகரிக்கும் இக்குணத்தை 'ரோமியோ அண்டு ஜூலியட் எஃபெக்ட்' என்கிறார்கள். ஷேக்ஸ்பியர் படைத்த கதாபாத்திரங்கள். தூர் வாரும் ரேஞ்சுக்கு ஆழமாய் காதலித்து பெற்றோர்கள் எதிர்ப்பால் தற்கொலை செய்துகொண்ட காதலர்கள். சிறு வயதில் தங்களை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு காதல் வளர்ந்தது எப்படி?

ரியாக்டன்ஸ் கோட்பாடு தான். தங்கள் காதலை எதிர்த்து, சேரக்கூடாது என்று தடுக்கும் பெற்றோர்களை மீற சிறந்த வழி சேர்ந்து இறப்பது என்று முடிவு செய்ய வைத்தது இக்கோட்பாடு. ஒருவேளை பெற்றோர்கள் காதலை எதிர்க்காதிருந்தால் அவர்கள் இறந்திருப்பார்களா? தொடர்ந்து காதிலித்திருப்பார்களா? கற்பனை கதாபாத்திரங்கள் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள் என்று கல்லறையில் உறங்கும் ஷேக்பியரையே எழுப்பிக் கேட்டால்தான் உண்டு!

இதைச் சொல்வதால் பெற்றோர்கள் தங்கள் டீன் ஏஜ் குழந்தை யாரையாவது காதலிக்கிறேன் என்று வந்து நின்றால் அட்சதைப் போட்டு ஆசீர்வதித்து அனுப்பவும் என்று சொல்லவில்லை. ரியாக்டன்ஸ் கோட்பாட்டை எண்ணிப் பார்க்கச் சொல்கிறேன். இரண்டு அடி தடுப்பு வைத்தால் பின்னா லிருக்கும் பொம்மை மீதுதான் நாட்டம் பெருகும் என்று நினைவு படுத்துகிறேன்! பற்றாக்குறை கோட்பாட்டின் பவர் புரிந்திருக்குமே.

# தொழிலில் தடைகளைத் தாண்டி வருவாய்?

நாம்மேற்கொள்ள வேண்டிய எந்தவொரு முடிவானாலும்குறைந்த பட்சம் 4 விதமான தேர்வுகள் இருப்பதாக சொல்கிறார் ஆசிரியர்.

அரசியல் உட்பட பல்வேறு துறைகளில் பெண்களுக்கான சம உரிமை மற்றும் குறிப்பிட்ட அளவு ஒதுக்கீடு என்றெல்லாம் பேசப்பட்டுவரும் சூழ்நிலையில், தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெறத் தேவையான சாத்தியக் கூறுகள் என்ன என்பதைப்பற்றி பெண்கள் அறிந்து கொள்வதும் அவசியமான ஒன்றே.

சர்வதேச பெண்கள் தினம் அண்மையில் கொண்டாடப் பட்டதால், பெண்களுக்காக பெண் நூலாசிரியரால் எழுதப் பட்ட புத்தகத்தைப் பற்றி அறிந்து கொள்வது பொருத்தமா னதாக இருக்கும் அல்லவா! வாழ்க்கையில் வெற்றிபெற விரும்பும் பெண்களுக்கான அனைத்து விதமான வழிமுறைகளையும் கொண்டுள்ளது "ஹெலென் லெர்னர்" அவர்களின் "தி கான் பிடன்ஸ் மித்" என்ற இந்த புத்தகம்.

**வெற்றியை தடுக்கும் பயம்!?**

வெற்றியை நோக்கி நடைபோடும் நமது செயல்பாடுகளைத் தடுக்கும் மிக முக்கியமான காரணி நமது பயமே என்கிறார் ஆசிரியர். பொதுவாக பயமானது உண்மை நிலையினைத் தகர்த்து பொய்யான நம்பிக்கைகளுக்கு வழி வகுக்கிறது. இதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது அந்த பயத்தின் ஊடாகவே பெண்களால் முன்னேறிச் செல்லமுடி கின்றது. பெரும்பாலும் ஆண்களுடன் பணிபுரியும் அல்லது தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் பெண்கள், வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்தி தங்களது தனித்திறன் வாய்ந்த கருத்துகளை தைரியமாக வெளிக்கொணர வேண்டும். பயத்தை உதறித்தள்ளி சிறப்பாக பணியாற்றுங்கள் என்பதே ஆசிரியரின் வாதமாக இருக்கின்றது.

அமைதியாக இருந்துகொண்டு அவ்வப்போது தங்களது கருத்துகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தினால் போதும் என்றில்லாமல், தொடர்ந்து தங்களது எண்ணங்களை தெரிவிப்பதை பெண்கள் வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். கருத்துகளை பகிர்தலில் மட்டுமல்லாமல், அடுத்தவர்களின் உதவியை நாடும் போதும், திட்டங்களை செயல்படுத்தும் போதும், சிக்கல்களை ஆராயும்போதும் பெண்கள் தங்களது தயக்கத்தையும் பயத்தினையும் தள்ளி வைக்க வேண்டியது அவசியம். இதன்மூலமே அனைத்து நிலைகளிலும் பெண்களால் எதிர் கொள்ளப்படும் ஆண், பெண் பாலின பாரபட்சங்களையும் களைய முடியும் என்கிறார் ஆசிரியர்.

**இலக்கின் செயல்பாடு!?**

நமது எந்தவொரு செயல்பாடும் துல்லியமான ஒரு இலக்கினை நோக்கியே இருக்க வேண்டும். சரியான, துணிவான ஒரு இலக்கை அடையாளம் காண வேண்டியது பெண்களின் வெற்றிக்கான முழுமுதற் காரணி. உணர்ச்சிகரமான அதே சமயம் தேவையான ஈடுபாடுடன் உள்ளதாக அது இருக்க வேண் டும். அது பதவி உயர்வின் மீதான இலக்கோ அல்லது தொழில் விருத்திக்கான இலக்கோ எதுவாயினும் இலக்கை உயர்வானதாக அமைத்துக்கொள்ள வேண்டும். இலக்கு பெரியதாக இருக்கும் போது மட்டுமே அதற்கான எண்ணமும் செயல்பாடும் பெரிதாக அமையும்.

அடுத்து நிர்ணயம் செய்த பெரிய இலக்கினை ஒன்றுக் கொன்று தொடர்புடைய சிறு சிறு பகுதிகளாக பிரித்துக்கொள்ள வேண்டும். அவை எளிதான நேர விரயமில்லாத வகையில் செய்து முடிக்குமாறு இருக்க வேண்டும். அடுத்ததாக இலக்கை நோக்கிய உங்களது செயல்பாடுகளில் உங்களுக்கு உதவியும் ஆதரவும் தரக்கூடிய நபர்களை கருத்தில்கொண்டு செயல்பட வேண்டும். உங்கள் செயல்களின் மீதான நேர்மையான கருத்தை தெரிவிப்பவர், சரியான வழிகாட்டுதலை வழங்குபவர், உங்கள் செயல்பாடுகளில் ஏற்படும் சவால்களுக்கு துணை புரிபவர் போன்றோரை தேவைப்படும்போது தொடர்ச்சியாக அணுக வேண்டும்.

இலக்கை நோக்கிய உங்கள் பயணத்தில், ஒரு நேரத்தில் ஒரே செயலின் மீது மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள் ளுங்கள். செம்மை யான செயல்பாடுகளின் மூலம் உங் களது இலக்கினை அடைந்துவிட்டீர்கள், அடுத்து என்ன செய்ய வேண்டும்?. முதலில், உங்களுடைய செயலுக்கும் துணிவிற்கும் ஒரு சபாஷ் போட்டுக் கொள ளுங்கள். சபா ஷோடு அடுத்த சவாலுக் குத் தயாராகுங்கள். ஆம், மீண்டும் மீண்டும் மேல்நோக்கி பயணிப்பதே நம்பிக்கை வலுப்பெறுவதற்கான வழி.

**முன்னிலைப்படுத்த முயல்வோம்!?**

பெண்கள் தங்களை எந்தவொரு செயலுக்கும் முன்னிலைப்படுத்த தயாராகும்போது மட்டுமே அவர்களால் சிறந்த தலைமைப் பண்பினை பெற முடிகின்றது. உங்களின் சொற்கள், செயல்கள் மற்றும் தோற்றம் போன்றவற்றின் மூலம் நீங்கள் உங்களை எவ்வாறு சித்தரிக்கின் றீர்கள் என்பதைப் பொறுத்தே உங்களால் உங்களை சரியான முறையில் முன்னிலைப் படுத்த முடியும். இந்த முன்னி லைப்படுத்தும் பண்பானது புகழ் பெற்ற பல தலைவர்களிடையே இருப்பதை காண முடியும்.

வலிமையான தலைமைப் பண்பினை பெறுவதற்கான சில விதிகளை சொல்லியிருகின்றார் ஆசிரியர். அவை: நீங்கள் உங்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும். சரியான செயல் களையே எப்போதும் செய்ய வேண்டும். சொற்களை விட செயல்பாடுகளே அதிக வலிமை வாய்ந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். முதன்மையான விடயங்களுக்கு முதலில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். எதுவாயினும் முதலில் செயலில் இறங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் வேண்டும். குழுவாய் செயலாற்றும் நிலையில், நான் என்ற சொல்லை தள்ளி வைத்துவிட வேண்டும். உங்கள் செயலுக்கு ஆதரவளிப்போர் மற்றும் வழிகாட்டுவோர் ஆகியோரின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிட கூடாது. புதிய விட யங்களை கற்றுக் கொள்ளும் பண்பை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். மரபுகளை களைந்தெறிய வேண்டும்.

**முடிவெடுக்கும் தருணம்!?**

எவ்வளவோ வெளிப்புற காரணிகள் நமது செயல்பாட்டிற்கு துணை புரிந்தாலும், நம்முடைய உள்ளுணர்வு ஒரு கருத்தை நம்மிடம் சொல்லிக் கொண்டிருப்பதையும் கவனிக்க தவறக் கூடாது. ஒரு சிக்கலில் முடிவெடுக்க வேண்டிய தருணத்தில் இருக்கும் நமக்கு, உள்ளுணர்வின் மீதான நம்பிக்கையே நமது அடுத்தகட்ட செயல்பாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றது. நாம் மேற்கொள்ள வேண்டிய எந்தவொரு முடிவானாலும் குறைந்தபட்சம் 4 விதமான தேர்வுகள் இருப்பதாக சொல்கிறார் ஆசிரியர். தொடர்ந்து அடுத்த நிலைக்கு முன்னேறிச்செல்வது, கவனமாக அடுத்த அடியை எடுத்துவைப்பது, செயல்படு வதற்காக காத்திருப்பது அல்லது சரியானது அல்ல என தீர்மானிப்பது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,019.95 | 6,057.79 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,180.92 | 3,167.46 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 4,781.003

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** தப்ரபேன்(5.50),தலவாக்கல(36.90)பூளு டைமன்ட்ஸ்(0.40)சிஜஎப்எல்(0.50)புளூ டைமன்ட்ஸ்(1.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** கூஜே(38.20),ஒபிஸ் ஈகுப்மன்ட் (135.00), ரீ சிமோல் ஹோல்டர்(19.50),செரன்டிப் ஹோட்டல்(17.50),ஈ சலஞ்சிங்(8.00),

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.05 | 146.98 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.36 | 213.68 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.99 | 167.36 |
| சுவிஸ் பிராங் | 146.98 | 153.12 |
| கனேடிய டொலர் | 109.56 | 113.99 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.64 | 113.66 |
| சிங்கப்பூர் டொலர் | 105.32 | 109.34 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

126

## தெலுங்கில் 'அபூர்வ சிந்தாமணி' பாதி படம் தயாரான பின் கதாநாகன் நீக்கம்!

1957 இல் ஒரு இந்திப்படத்தை தயாரித்தார்.

கதையை எழுதி, டைரக்ட் செய்தவர் காமெடி நடிகர் ஐ.எஸ்.ஜோகர். அஜீத் - நளினி ஜெய்வந்த் நடித்த இப்படம் வெற்றி பெறவில்லை.

**100 கழுதைகளுடன் பாடல் காட்சி**

இதன் பிறகு டி.ஆர்.எஸ். தயாரித்த படம் ஆரவல்லி.

இதில் கதாநாயகியாக நடித்தவர் ஜி.வரலட்சுமி. அவருடைய தங்கையாக மைனாவதி நடித்தார்.

எகிப்து நாட்டின் எழிலரசி கிளியோபாட்ரா கழுதைப் பாலில் குளித்ததாக கூறுவார்கள். அதுபோல் ஆரவல்லியும் கழுதைப்பாலில் குளிப்பதாகக் கதை.

அதை இயற்கையாக படமாக்க முடிவு செய்த சுந்தரம் சுற்றுப் புறங்களில் வசிக்கும் தொழிலாளர்களிடம் பேசி நூறு கழுதைகளை வாடகைக் குப் பிடித்தார். பழக்கம் இல்லாத கழுதைகக்கிட்டே கொஞ்சம் பார்த்து கறக்கணும் பாலே! என்ற பாடலுடன் நூறு கழுதைகளிடம் நூறு பேர் பால் கறக்கும் காட்சி படமாக்கப்பட்டது.

படம் மாநகரங்களில் சுமாராக ஓடினாலும் சிறிய ஊர்களில் வசூலைக் குவித்தது.

இதன்பின் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த பெற்ற மகனை விற்ற அன்னை என்ற படம் சுமார் ரகம்.

**வண்ணக்கிளி**

பிறகு தயாரித்த வண்ணக்கிளி பிரமாதமாக ஓடியது. ஆர்.எஸ்.மனோகர்-பி.எஸ்.சரோஜா ஜோடியாக நடித்தனர். இப் படத்தில் திருச்சி லோகநாதன்- சுசிலா பாடிய அடிக்கிற கை தான் அணைக்கும் என்ற பாடல் சூப்பர் ஹிட்.



முரசொலி மாறன் பிறகு தலை கொடுத்தான் தம்பி என்ற படத்தை சுந்தரம் தயாரித்தார். கே. ஆர். ராமசாமியும் எஸ்.எஸ்.ராஜேந்திரனும் இணைந்து நடித்தனர்.

இந்தப்படத்துக்கு முரசொலி மாறன் வசனம் எழுதினார்.

**தெலுங்கில் அபூர்வ சிந்தாமணி**

1947 இல் வெளிவந்த ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி படத்தை 13 ஆண்டுகளுக்குப் பின் 1960 இல் தெலுங்கில் எடுத்தார் டி.ஆர்.சுந்தரம்.

படத்தின் பெயர் சஹஸ்ர சிரச்சேத அபூர்வ சிந்தாமணி. தமிழில் பி.எஸ்.கோவிந்தன் நடித்த கதாநாயகன் வேடத்துக்கு ஜக்கையா ஒப்பந்தமானார்.

மற்றும் ராஜனளா, பிரபாகர் ரெட்டி, ரேலங்கி, ஜமுனா, கிரிஜா என்று ஏராளமான நட்சத்திரங்கள் நடித்தனர்.

# ராஜபக்ஷ யுகம் திரும்புகிறதா?

## நீர்கொழும்பு பிரதேச- உள்ளூராட்சி சபைகளின் ஒன்றுகூடலில் உருவாகும் கற்பனைகள்!

(நேற்றைய தினம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

'மனம் சார்ந்த அனைத்து நிகழ்வுகளுக்கும் மனமே முன்னோடியும் நிகழ்வுகளுக்கான பிரதான காரணியுமாக இருக்கிறது. ஒருவன் எத்தகையவனாக இருப்பான் என்பதை அவனது மனமே தீர்மானிக்கிறது. ஒருவனது பேச்சும் செயற்பாடும் தீமையானதாகவே இருந்தால் வண்டியை இழுத்துச் செல்லும் எருதின் கால் தடயங்களைத் தொடர்ந்து செல்லும் சக்கரங்களைப் போலவே தீமையான அவனது அந்த சுபாவத்திற்குப் பொருத்தமான வேதனைகளும் அவனைப் பின்தொடர்ந்து கொண்டே தானிருக்கும்' என்பதே பௌத்தத்தின் 'தம்மபதம்' கூறும் முதல் வாசகமாகும்.

**ஜேர்மனிக்கான விஜயம்**

மகிந்த ராஜபக்ச வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் போதெல்லாம் அவரது பரிவாரங்கள் பெருந்தொகையாக இருந்தது போல் அல்லாது மிகவும் சொற்பளவிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினது பரிவாரங்கள் இருந்தமை வியப்பிற்குரிய ஒன்றாகவே அனைவராலும் பார்க்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாத இறுதி வாரங்களில் அவர் மேற்கொண்ட ஜேர்மன் விஜயத்தின் போது சிறிசேனா அழைத்துச் சென்ற 15 பேர் கொண்ட சிறிய குழு போல் அல்லாது ராஜபக்ஷவின் சீன விஜயத்தின்போது கூடவே சென்ற 273 பேர்களடங்கிய பரிவாரம் மிகப்பெரிய அளவினதாகவே இருந்ததுடன் அவர்களிலும் குறிப்பிடத்தக்க அளவிலானோர் அவரது மைந்தர்களது நண்பர்களாகவேயிருந்தனர்.

அண்மையில் 'SLFP' கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்று கட்சியின் பொதுச் செயலாளரால் அனுப்பப்பட்டிருந்த விளக்கம் கோரும் கடிதங்களை கீழித்து எரித்திருந்தனர். அரசியல்வாதிகள் சட்டத்திற்கோ அல்லது அந்தந்த கட்சிகளின் ஒழுங்கு விதிகளுக்கு மேலானவர்கள் என்பதா இவர்களனைவரதும் கருத்து?

**மனவேதனையின் சித்திரவதையிலும் பார்க்க மின்சாரக் கதிரை சிறந்தது!**

அரசாங்கம் உளரீதியாக ஏற்படுத்திவரும் சித்திரவதைகள் மூலம் அனுபவிக்கும் வேதனை- துன்பங்களிலும் பார்க்க மின்சாரக் கதிரை பரவாயில்லை என்ற தனது பிந்திய புதுக்கதையொன்றினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெகு அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார்.

'இது மின்சாரக் கதிரைபோல் முடிவினை ஏற்படுத்திவிடாமல் ஆயுட்காலத்திற்கும் தொடரும் சித்திரவதையேதான்' இங்கு உண்மையை ராஜபக்ஷ மறந்திருந்தாலும் உள்ளபடி அவர் கூறியிருப்பது பௌத்தம் கூறுகின்ற மற்றுமொரு உலகளாவிய உண்மையையேதான் என கூறலாம். அதாவது, 'ஒருவர் தனது வாழ்நாட்காலத்தில் செய்யும் நன்மையும் தீமையும் அவரது அதே வாழ்நாளிலேயே தொடர்ந்தும் வரும்' என்பதுதான் அது.

தனது மகன் ஜோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபோது மகிந்த சிந்திய கண்ணீரை விளங்கிக்கொள்வது கடினமான ஒன்றாக இருக்காது. ஆனாலும் அவரது மகன் ஜோஷிதவின் வயதை ஒத்த றோஷன் சாணக்கவின் குடும்பம் சிந்திய கண்ணீரை அவர் மறந்துபோனாரா? அவனை அவர்கள் உயிருடன் வாழத்தான் விட்டார்களா?

தனது வசதிக்கேற்ப ராஜபக்ஷ இவற்றையெல்லாம் மறந்தாலுங்கூட பொதுமக்களும்தான் அவற்றை மறந்துபோய்விடுவார்களா? திருகோணமலையில் 2006 ஜனவரியில் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட அந்த ஐந்து பட்டதாரி மாணவர்களது பெற்றோர்கள் ஆறாக சிந்திய கண்ணீர் மறந்து போய்விடுமா? ஒருபோதுமில்லை!

கம்பகா புனித பீற்றர் கல்லூரி மாணவன் ரவிஷான் பெரேரா யக்கல- சந்திர ஜோதி வித்தியாலயத்தின் 17 வயது மாணவன் அகில தினேஷ் போன்ற சருகுகளாக்கப்பட்ட இளம் மொட்டுக்களின் உயிருக்கும் அவர்களது பெற்றோர்- உறவினர்களதும் கண்ணீருக்குப் பதில் கூறப்போவது யார்?

பாதுகாப்பான குடிநீர் வழங்கக்கோரி 2013 ஓகஸ்ட் 1 ஆம் திகதியன்று வெலிவேரியாவில் நடத்தப்பட்ட மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியின்போது துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான, கம்பொல- உடகென்தெனவைச் சேர்ந்த 20 வயது நிலாந்த புஷ்பகுமார மற்றும் காயமடைந்த நூற்றுக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மீதும் இழைக்கப்பட்ட அக்கொடுமைகளுக்கு பதில் கூறவேண்டியவர்கள் யார்? இவ்விதமாக நடத்தப்பட்ட அட்டூழியங்கள் பற்றி வகை- தொகையாகவும் முழுமையாகவும் இங்கு எடுத்துக் காட்டுவதற்கே இடம் போதாதென்பதை ராஜபக்ஷக்கள் மட்டுமல்லாது அவர்களைச் சார்ந்த கும்பல்களும் நினைவிற் கொள்ள வேண்டும்.

**கட்சி பிளவுபடுத்தப்படப் போவது பற்றிய மகிந்தவின் முன்னைய புதுக்கதைகளில் எழும் புதிய கேள்விகள்**

புதிய கட்சியொன்றின் தாமரைப்பூ சின்னத்தின் கீழ் அவர் போட்டியிடப் போகிறாரா என கடந்தவார இறுதி நாட்களில் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலாக, "யார் இதனைச் சொன்னார்? இதுபற்றி எனக்கு என்ன தெரியும்?" என திரும்பவும் கேள்வி கேட்டார் மகிந்த.

புதிய கட்சியொன்றையும் புதிய தலைவரொருவரையுமே மக்கள் இப்போது கேட்கிறார்கள் என அளுத்கம- மொறகொல்ல கடற்கரைப் பகுதிக்கு திங்கட்கிழமை (பெப்ரவரி -15) மேற்கொண்ட விஜயமொன்றின் போது மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். எப்படியும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரசன்னமாயிருந்த அந்தக் கூட்டம் வடமேல் மாகாண சபை 'UPFA' உறுப்பினர் டீ.பி ஹேறத் என்பவரது வீட்டில் ஆரம்பமாகும் போதே புதியதொரு கட்சி உருவாக்கப்படுவதை வழமை போலவே மகிந்த ராஜபக்ஷ மறுதலித்தார். இந்த புதிய கட்சிக்கு தலைவர் பசில் ராஜபக்ஷ என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதாகவேயிருந்தது.

புதிய கட்சியின் உருவாக்கத்திற்கான அடித்தளம் இடப்பட்டாயிற்றா? என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு இங்குதான் அவர் கட்சி பிளவுபடுத்தப்படப்போவது பற்றிய தனது பிந்திய புதுக் கதையை எதுவித தாமதமுமின்றி மறுத்திருந்தார். 'இவ்விதமான ஒன்றினை யார் கூறியது? எனக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது' என்ற பதிலே ஆட்சியில் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருக்கும் ஆசை கொண்டவரும் நயவஞ்சக சூது கொண்டவருமான அந்த குழுநாகல் பாராளுமன்ற உறுப்பினர் வாயிலிருந்து உடன் வெளிவந்த வார்த்தைகளாக இருந்தது.

தான் ஏற்கனவே நாட்டில் நடைமுறைப்படுத்தியிருந்த ஊழல், குடும்ப ஆட்சிமுறை, உறவு- நட்பு கொண்டவிதமான ஒரு குழுவட்டம் மற்றும் பாஸிச, ஜாதிபேத ஆட்சியுடன் கூடிய அதிதீவிர எதேச்சதிகார நீரோட்டத்தில் சொந்த வசதிகளுக்கான ஆனந்த நீச்சலை மேற்கொண்டிருந்த முன்னைய தலைவரா, அல்லது ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை, சட்டம் ஒழுங்குடன் கூடிய நல்லாட்சி மூலம் நாட்டையும் மக்களையும் மனித நேயமிக்க உன்னதமான வாழ்க்கையை நோக்கி முன்னேற்றிச்செல்வதற்கென ஆரோக்கியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கும் உண்மை, நேர்மை, கண்ணியமிக்க ஒரு தலைவரா நாட்டிற்கு தேவை என்பதை மக்களோ தீர்மானிக்க வேண்டும்.

தொடர்ந்தும் காலம் தாழ்த்தாமல் மேற்கொள்ளப்பட வேண்டிய அதி அத்தியாவசியமான தீர்மானமே இது என்பது உணரப் படுமா?...

(முற்றும்)

-தமிழில்- யோகர்-

உனக்கும் பேப்பே உன் அப்பனுக்கும் பேப்பே
-நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கை ஆட்சி பற்றி சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்

போர்க்குற்ற விசாரணை நடைபெற்றாலும் படையினருக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் மகிந்த அமரசிங்க கூறியுள்ளார்.

இறுதி போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை மட்டுமே நடைபெறும். படையினருக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது என்பது அமைச்சர் மகிந்த அமரசிங்கவின் அறிவிப்பு.

இது ஒருபுறமிருக்க போர்க்குற்ற விசாரணை தொடர்பில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என்று இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஆக, போர்க்குற்ற விசாரணை நடைபெற்றாலும் படையினருக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது என்பதும் சர்வதேச நீதிபதிகள் போர்க்குற்ற விசாரணையில் பங்கேற்க முடியாதென்பதும் இலங்கை அரசின் போக்கை தெட்டத்தெளிவாக காட்டி நிற்கிறது.

அதாவது போர்க்குற்ற விசாரணையில் குற்றவாளிகளாக படையினர் அடையாளப்படுத்தப்பட்டாலும் அவர்களுக்கு தண்டனை இல்லை என்பதானது போர்க்குற்ற விசாரணையால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்ற பொருளைத் தரும்.

அதேநேரம் விசாரணை நடவடிக்கையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்க முடியாதென்பதானது எல்லாம் நாங்களே விசாரிப்போம்; நாங்களே தீர்ப்பு எழுதுவோம்; எழுதுகின்ற தீர்ப்பை சர்வதேச சமூகமும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

இதுவே, இலங்கை அரசின் நிலைப்பாடு. நல்லாட்சி என்ற பெயரில் அமைந்த ஆட்சியின் நிலைப்பாடும் இதுவெனில், தமிழ் மக்களுக்கு இலங்கை அரசு எதைக் கொடுக்கும்? அவ்வாறு கொடுப்பது எவ்வளவு காலத்துக்கு நிலைக்கும்? என்பதை சர்வதேச சமூகம் தான் தீர்மானிக்க வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற போரில் தமிழின அழிப்பு நடந்தது என்ற உண்மை, மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் தோல்விக்காக அமெரிக்காவால் விட்டுக்கொடுக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவே பிரச்சினைக்குரியவராக அமெரிக்க அரசு பார்த்தது. அந்தப் பார்வை மகிந்தவினதும் சீனாவினதும் உறவு காரணமாக ஏற்பட்டதாகும்.

மாறாக தமிழர்கள் கொல்லப்பட்டது பற்றியோ, தமிழின அழிப்பு நடந்தது பற்றியோ சர்வதேச சமூகத்துக்கு அக்கறை இருக்கவில்லை என்பதே உண்மை.

இத்தகையதோர் நிலைமைதான் தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தன்னை ஒரு பேரினவாத சார்புடையவராகக் காட்டத் தலைப்பட்டுள்ளார்.

இலங்கை விடயத்தில் அக்கறை கொண்ட அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பை முதல்நிலைப்படுத்தி சர்வதேச விசாரணையினை வலியுறுத்தியிருந்தால், இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது சாத்தியமாகி இருக்கும்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ தோற்று விட்டார். இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவர்கள் நாம் கூறுவதை ஒரு போதும் மீறமாட்டார்கள் என்று அமெரிக்காவும், இந்தியாவும் கருதிக்கொள்ள இலங்கையின் நல்லாட்சியும் தனது சுயரூபத்தை காட்டத் தலைப்பட்டுள்ளது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் அழிவுகளைச் சந்தித்த தமிழினத்தை இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் சேர்ந்து ஏமாற்றி விட்டன என்பது உண்மையாயிற்று.

# இலங்கை - இந்திய சிறுநீரக மோசடி; விசாரணைகளில் சர்வதேச பொலிஸ் உதவி

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு, சர்வதேச பொலிஸாரின் உதவியை பெற்றுக் கொள்ள இந்திய பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இந்த வியாபாரம் சர்வதேச அளவில் இடம்பெற்றதால், சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்று இந்த விசாரணைகளை முன்னெடுக்க, இந்தியாவின் ஆனந்த் மாவட்ட பொலிஸார் முடிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தியாவின் பந்தோலி, மும்பாய் மற்றும் டில்லி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இந்த வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களைக் கைதுசெய்வதே இதன் நோக்கமாகும்.

இதன்படி இந்த விடயம் தொடர்பில் இந்தியாவின் மத்திய அரசுக்கு தெரியப்படுத்தி, சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக, ஆனந்த் மாவட்ட பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியாவின் பந்தோலி பகுதியில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட சிலரிடம் பணத்துக்கு சிறுநீரகங்கள் விலைக்கு வாங்கப்பட்டதாக அண்மையில் தகவல்கள வெளியாகின.

இதனடிப்படையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மூவர் அண்மையில் இந்தியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு; புதிய பொறிமுறையை அமைக்க உத்தேசம்

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க புதிய பொறிமுறையொன்றை தயாரிக்க குழுவொன்றை நியமித்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

மூன்று பேரை உள்ளடக்கிய குறித்த குழு எதிர்வரும் 6 வாரங்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு தற்போதுகாணப்படும்முறைமை முறையற்றது என்பதால் புதிய முறையொன்றை முன்னெடுக்க நடவடிக்கையெடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்கு அமைவாக பொலிஸ் அதிகாரிகளின் தொழிற்சங்கங்கள் பலவற்றுடன் பொலிஸ் ஆணைக்குழு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

முறையற்ற பொறிமுறையின் கீழ் பதவி உயர்வு வழங்கப்படுவதால் பல பிரச்சினைகள தோன்றியுள்ளதாக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதனடிப்படையில் பொலிஸ திணைக்களம் ,பொலிஸ் அதிகாரிகளின் சங்கம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு ஆகியவற்றின் கருத்துக்களை கேட்டறிந்ததன் பின்னர் பதவி உயர்வு தொடர்பில் பொறிமுறையொன்றை தயாரிக்கவுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## மாணவ தலைவர்கள்-ஜனாதிபதி, பிரதமரை சந்திக்க வாய்ப்பு

(கொழும்பு)

பாடசாலை மட்டத்திலான மாணவத் தலைவர்களுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதமரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் அகிலவிராஜ்காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இன்று அலரி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதோடு, இதன்பொருட்டு நாட்டிலுள்ள பிரதான பாடசாலைகளில் இருந்து மாணவத தலைவர்கள் பலர் அழைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின்விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ் வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில** வட்டக்கச்சி, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம் கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், விநாயகபுரம், விவேகானந்தநகர், பாரதிபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** இரணையிலுப்பைக்குளம், சாஸ்திரி கூழாங் குளம், ஈச்சங்குளம், கிடாச்சூரி, காக்கையன்குளம், பூம்புகார், ஹெதேரண் பாம், ஆசிரியர் தொழில்நுட்பக்கல்லூரி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# சுத்தமான குடிநீர் விநியோகத்தில் 35 வீதம் வரையில் வீண்விரயம்

## புதிய புள்ளி விபர தகவல்கள் மதிப்பீடு

(கொழும்பு)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகம் செய்யப்படும் சுத்தமான குடி நீரில் சுமார் 35 வீதம் வரையில் விரயமாக்கப படுவதாக புதிய புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாதம் ஒன்றுக்கு இவ்வாறு பாரியளவில் நீர் விரயமாக்கப் படுவதாக சாதாரண மதிப்பீடு ஒன்றில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன்படி பல்வேறு காரணங்களுக்காக விநியோகம் செய்யப்படும் சுத்தமான குடிநீரில் மாதமொன்றுக்கு ஆயிரத்து 225 கோடி லீற்றர் நீர் விரயமாக்கப்படுகின்றது.

ஒரு அலகு அல்லது ஆயிரம் லீற்றர் நீரை சுத்திகரிக்க 50 ரூபாய் செலவிடப்படுகின்றது. எவ்வாறெனினும் நீரைச் சுத்திகரிக்க செலவிடும்பணத்தை விடவும் குறைந்த கட்டணமே வாடிக்கையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்படுகின்றது என நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

முதல் ஐந்து அலகுகளுக்கு (5ஆயிரம் லீற்றர்) ஒரு அலகிற்கு 12 ரூபாய் என்ற அடிப்படையிலேயே அறவீடு செய்யப்படுகின்றது என சபை தெரிவித்துள்ளது.

மேலும் ஆறுகள், குளங்களின் 28ஆயிரம் மில்லியன் கியுபிக் மீற்றர் நீர் எவ்வித பயனுமின்றி கடலில் சங்கமிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அருள் வெள்ளம் (Fountain of Divine Grace)



நமது வாழ்க்கையின் நோக்கம் அமைதியும் நிறைவும் பெற்று வாழ்வதோடு ஆன்ம வளர்ச்சி பெற வேண்டும் என்பதேயாகும். ஆன்ம வளர்ச்சியை முதற் குறிக்கோளாகக் கொண்டால் பிறவெல்லாம் அற்பமாகவே தோன்றும். மனதை நிறை நிலையில் வைத்துக் கொள்வோம். கடமையின் மதிப்புணர்ந்து செயலாற்றி வாழ்வோம்.

உண்மையிலேயே ஆன்ம வளர்ச்சியை வேண்டுபவர் சிக்கல்களையும், பிணக்குகளையும் தாண்டி, அறிவைச் சுதந்திரமாக இயங்க விட வேண்டும். விரிந்த பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளையும், மனித வாழ்வையும் இணைத்து ஒத்துச் சிந்தியுங்கள். தன் முனைப்பு என்ற திரை கரைந்து விடும். தன் முனைப்பும், இயற்கை நியதியறியாமையும் ஒன்றை ஒன்று தழுவி நிலைத்திருக்கின்றன.

இதனால் மனிதன் தன்னிடம் ஒரு கற்பனை மதிப்பை (False Prestige) உருவாக்கிக் கொள்ளுகிறான். இந்த மருள் கொண்ட மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பிறரை ஒப்பு நோக்கும் போது கருத்தில் வேறுபாடுகளும், பிணக்குகளும் எழுகின்றன. தனது மனதைச் சீரமைத்துக் கொண்டு எவரை எக்கருத்தைத் தன்னோடு ஒப்பு நோக்கினாலும், ஒரு சமநிலை உணர்வு உண்டாகும். இந்த உணர்வில் தான் பேரின்பம் தொக்கி நிற்கின்றது. இப்பேருணர்வே அருள் வெள்ளமாகும்.

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான

# கபடி, கரப்பந்தாட்டப் போட்டி



ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 28 ஆவது விளையாட்டு விழாவின் கரப்பந்தாட்டம் மற்றும் கபடி போட்டிகள் அண்மையில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி செ.சுஜிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் ஜெயந்ஸ்டார் இளைஞர் கழகத்தினர் முதலாமிடத்





தையும் பாரதி இளைஞர் கழகத்தினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை பெண்களுக்கான கபடி போட்டியில் கலைமகள் இளைஞர் கழகத்தினர் முதலாமிடத்தையும் பரந்தாமன் இளைஞர் கழகத்தினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான கபடி போட்டியில் பரந்தாமன் இளைஞர் கழகத்





தினர் முதலாமிடத்தையும் ஜெயந்ஸ்டார் இளைஞர் கழகத்தினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (க-281)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# குமாரய்யா ஞாபகார்த்த காற்பந்தாட்ட போட்டி

## சென்.அன்ரனிஸ் சம்பியன்

ஈ.கே.குமாரய்யா ஞாபகார்த்த கிண்ணத்தை தனதாக்கியது பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

யாழ். காற்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். காற்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய ஈ.கே.குமாரய்யா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் கடந்த வியாழக்கிழமை மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியும் கோல் போடாததால் சமநிலைத் தவிர்ப்பில் சென்.அன்ரனிஸ் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. சிறந்த வீரர்களாக சென். அன்ரனிஸின் திலீபனும் சென்.மேரிஸின் ஜூட்டும் தெரிவானார்கள்.

ஊரெழு றோயல் அணியை சமநிலைத் தவிர்ப்பில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம்.

சிறந்த வீரர்களாக ஊரெழு றோயல் அணியின் கஜகோபனும் குப்பிளான் ஞானகலா அணியின் செந்தூரனும் தெரிவானார்கள். (க)

# சென்.மேரிஸ் அணியை வீழ்த்தி பாசையூர் சென்.அன்ரனிஸ் சம்பியன்



அரியாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஈ.கே.குமாரய்யா ஞாபகார்த்த உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் சென். மேரிஸ், பாசையூர் , சென்.அன்ரனிஸ் அணிகள் மோதின.

இரண்டு அணியும் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டியது. ஆட்ட நேரமுடிவில் இரண்டு அணியும் கோல் போடவில்லை போட்டியில் வெற்றிக்காக சமநிலை தவிர் உதைப்பு மூலம் பாசையூர் சென்.அன்ரனிஸ் 4:2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)

# வலைப்பந்தாட்ட அணித்தெரிவு

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் ஏப்ரல் மாதம் நடத்தப்படவிருக்கும் இளையோருக்கான தேசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட இளைஞர் அணி தெரிவு செய்யப்படவுள்ளது.

இத் தெரிவு நிகழ்வில் பங்குபெற விரும்பும் 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட வலைப்பந்தாட்ட வீராங்கனைகளை 22.03.2016 செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க)

# மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

யாழ். கே.கே.பி.இளைஞர் கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டிகள் அனைத்தும் குருநகர் St.Rock விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 077 324 1467 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (க)

# விக்ரோறியன்ஸ் வி.கழக மரதன் ஓட்டப்போட்டி

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தினையும் பரிசில் வழங்குதலையும் முன்னிட்டு நாளை 22ஆம் திகதி காலை மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

காலை 5 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரி முன்றலில் நடைபெறும் மேற்படி போட்டியில் ஆண்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும்.

அனுமதி கட்டணமாக 50 ரூபா அறவிடப்படும்.

அரச வைத்தியசாலை ஒன்றில் மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொண்ட பின்னரே மரதன் ஓட்டப் போட்டியில் பங்கு கொள்ளமுடியும். வெற்றி பெறும் வெற்றியாளருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு 077 513 4348 (க)

## மகிந்தவும் சகா...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா தொகுதி அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு கோஷ்டி தற்போது அங்குமிங்கும் பைத்தியம் பிடித்தது போல ஓடித் திரிகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஒருவர் அங்கு இருக்கின்றார். அவருடன் அங்கு இருப்பவர்கள் அனைவரும் திருடர்கள். கொலையாளிகளும் உள்ளனர்.

எமது நல்லாட்சி அரசாங்கம் தற்போது வழங்கியுள்ள ஊடக சுதந்திரம் காரணமாகவே அவர்களின் கூட்டங்கள் குறித்து போதுமான அளவு செய்திகளை அச்சமின்றி வெளியிடுகின்றனர்.

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்துக்கு சுமார் 12 ஆயிரம் பேர் வரவழைக்கப்பட்டிருந்தனர். எனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு எதிரில் தான் பொலிஸார் கூட்டத்திற்கு வந்த வாகனங்களை நிறுத்த அனுமதி வழங்கியிருந்தனர்.

அங்கு 250 முதல் 300 பேருந்துகள் உட்பட வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. மிகவும் நீளமான பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நான் வாழ்க்கையில் அப்படி நீளமான பேருந்துகளை பார்த்ததில்லை.

பேருந்தில் ஏறுவதற்கு வந்த பலரும் கையில் சாராய போத்தல்களை வைத்திருந்தனர். அவர்கள் தள்ளாடி தள்ளாடி நடந்து வந்தனர். காலை, மதியம், இரவு உணவுகளை வழங்கி இவர்கள் ஆட்களை அழைத்து வந்துள்ளனர்.

மகிந்தவுக்கு ஆதரவாளர்களை சேர்ப்பதற்கு இவர்களுக்கு தெரிந்த வழி இதுமட்டும் தான் போலும்,

எமக்கும் அப்படி செய்து, இவர்களை விட மூன்று மடங்கு மக்களை அழைத்து வர முடியும். எனினும் நாங்கள் அதற்கு தயாரில்லை. மகிந்தவால் கூட்டங்கள் நடத்த முடியும், ஆனால் அதில் சுதந்திர கட்சியின் முக்கிஸ்தர்கள், கட்சி உறுப்பினர்கள் செல்வார்களாயின அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

அடுத்து சில நாட்களில் பாருங்கள் அவர்களுக்கு என்ன நடக்க போகிறது என்று. நன்றாக சாப்பிடும் ஒருவருக்கு ஒரு வாரம் சாப்பாடு கொடுக்காவிட்டால் என்ன நடக்கும்?. பைத்தியம் பிடித்தவர் போல் நடந்து கொள்வார். கிடைக்கும் எதனையும் சாப்பிடுவார். பொய் சொல்லி திருடி சாப்பிடுவார். இவர்கள் இப்படித்தான் நடந்து கொள்கின்றனர் என்றார் சந்திரிகா. (செ-12)

## பல்கலை. வெளி...

பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் எனவும், அதன் பின்னர் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

பதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முன்னைய பாடத்திட்ட பரீட்சைகளில் தோற்ற முடியாத நிலை ஏற்படும். எனவே விரைவாகபட்டப்படிப்பினை பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

மேலும் பல்கலைக்கழக மூதவையும் பேரவையும் இணைந்து வெளிவாரிபட்டப்படிப்பின் பட்டமளிப்பு விழாவை பொதுப்பட்டமளிப்பு விழாவையொட்டி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

நிறைவான முடிவை எட்டியபின் அதை நிறைவேற்றவுள்ளோம். உள்வாரி மாணவர்களுக்கும் வெளிவாரிமாணவர்களுக்கும் எந்தவிதமான வித்தியாசம் இல்லை. எனவே பட்டங்களைபெறுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

## மகிந்தவுக்கு ஆதரவாக ஜப்பானில் கூட்டம்



(கொழும்பு)

ஜப்பானில் வசித்து வரும் சிங்களவர்கள் ஒழுங்கு செய்த ஜப்பான் நாட்டில் மகிந்த ஒன்றிணைவு என்ற தொனிப் பொருளில் நேற்று கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் ரோஹித்த அபேகுணவர்தன, விமல் வீரவன்ஸ ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் இந்தக் கூட்டத்தில் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொள்ளவிருந்த போதிலும் வேறு ஒரு பணி காரணமாக அவர் ஜப்பான் செல்லவில்லை என ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (செ-12)

## விசமிகளால் மதில் இடிப்பு!



(கோப்பாய்)

மானிப்பாய் வீதி உரும்பிராய் சந்திக்கு அண்மையாக உள்ள காணி ஒன்றில் நேற்று முன்தினம் புதிதாக கட்டப்பட்ட மதில் விசமிகளால் இடித்து வீழ்த்தப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் தெரியவருவதாவது,

காணி உரிமையாளரால் புதிதாக கடை மற்றும் காணிக்கு சுற்று மதில் என்பன அண்மையில் கட்டப்பட்டு இருந்தது.

எனினும் மதில் பகுதி பகுதியாகவே கட்டி முடிக்கும் பணிகள் இடம்பெற்ற நிலையில், நேற்று முன்தினம் 60 அடி நீளம் கொண்ட காணியின் ஒருபக்க மதிலை கட்டிமுடித்துள்ளனர்.

எனினும் புதிதாக கட்டிய மதில் என்பதால் இதன் ஈரம் காயாது இருந்துள்ள நிலையில் அன்றைய தினம் இரவே விசமிகளினால் மதில் இடித்து வீழ்த்தப்பட்டுள்ளது.

விசமிகளால் செய்யப்பட்ட இவ் நாச வேலை காரணமாக மதிலைக் கட்டிய காணி உரிமையாளர் வீண் நஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளார். (செ-87)

## யாழ். பல்கலையில் நேற்று வெளிவாரி பட்டமளிப்பு விழா



(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக 2016 ஆம் ஆண்டு வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நிகழ்வு நேற்றைய தினம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இரு அமர்வுகளாக இடம் பெற்றன.

முதலாவதுஅமர்வில் 143 மாணவர்களுக்கும், இரண்டாவது அமர்வில் 144 மாணவர்களுக்கும் பல்கலைக்கழக துணை வேந்தரர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தினால் பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த பட்டமளிப்புவிழா நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் பீடாதிபதிகள், பட்டதாரிகள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (செ-9)

## மின்மாற்றிகள் வெடிப்பை ஆராய ஜேர்மன் நிபுணர்கள் குழு இன்று இலங்கை விஜயம்

பியகம மற்றும் கொட்டுகொட உபமின் நிலையங்களில் மின்மாற்றிகள் வெடித்தமை தொடர்பில் ஆய்வு செய்ய ஜேர்மனியில் இருந்து நிபுணர்கள் குழுவொன்று இன்று திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளது.

பியகம உபமின் நிலையத்தின் மின்மாற்றியில் கடந்த வாரமும், கொட்டுகொட உப மின் நிலையத்தின் மின்மாற்றியில் கடந்த வெள்ளிக்கிழமையும் வெடிப்பு ஏற்பட்டு, நாட்டில் பரவலாக மின்சாரத் தடை ஏற்பட்டிருந்தது

இந்நிலையில், ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட இந்த மின்மாற்றிகளில் ஏற்பட்ட வெடிப்புகள் தொடர்பாக கொழும்புக்குச் வரவுள்ள இந்த ஜேர்மனி நிபுணர்கள் ஆய்வு செய்யவுள்ளதாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் சுரேன் பட்டகொட தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த நிபுணர் குழுவினர் இங்கு வந்து பார்வையிட்டு, இது தொழில்நுட்பக் கோளாறினால் ஏற்பட்ட வெடிப்பா அல்லது நாசவேலையா என்று ஆராயவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பியகம மற்றும் கொட்டுகொட உப மின் நிலையங்களின் மின்மாற்றியில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவங்களுக்கு இடையில் ஒற்றுமைகள் காணப்படுவதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்திருந்தது.

இவ்விரு உப மின் நிலையங்களுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த நிலையில், இந்த இரண்டு மின்மாற்றிகளிலும் எவ்வாறு ஒரே விதமான வெடிப்பு ஏற்பட்டது என்ற சந்தேகம் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தனியார் மின் உற்பத்தி நிலையங்களை கொள்வனவு செய்ய அரசு திட்டம்!

அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தனியாருக்கு சொந்தமான மூன்று மின்சக்தி உற்பத்தி நிலையங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கை அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

100 மெகாவோட்ஸ் உற்பத்தியைக்கொண்ட புத்தளம் ஹெலடானவி உற்பத்தி மையம், 100 மெகாவோட்ஸ் உற்பத்தியைக்கொண்ட எம்பிலிப்பிட்டிய உற்பத்தி நிலையம், 60 மெகாவோட்ஸ் உற்பத்தியைக் கொண்ட மாத்தறை நிலையம் ஆகியவற்றை கொள்வனவு செய்யும் திட்டமே அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அவசர தேவைகளின் நிமித்தம் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்க ஊடகம் ஒன்று இதனைத்தெரிவித்துள்ளது.

எனினும் மின்சார சட்டப்படி ஏல முறையில்லாமல் தனியார் மின்சார நிலையங்களை கொள்வனவு செய்வது தடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மதிவெடிகள் யாழில் மீட்பு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் காணியொன்றில் இருந்து இரண்டு மிதிவெடிகள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன. கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியில் இருந்த தனியார் காணியொன்றில் இருந்தே மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன

குறித்த பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் இரண்டு நாட்கள் பின்னர் காணியை துப்புரவு செய்யும் போது மிதிவெடியொன்று வெடித்து ஒருவர் காயமடைந்திருந்தார்.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் குறித்த பகுதியில் விசேட அதிரடி படையினர் மற்றும் குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினர் இணைந்து வெடிபொருட்களை மீட்கும் பொருட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளது. (செ-12)

## இலங்கை சுற்றுலா பயணி இந்தியாவில் பலி!

இலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் இந்தியாவின் அவுரங்காபாத்தில் உள்ள குல்டாபாத்தில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து 127 பேருடன் அஜந்தா குகைக்கு சுற்றுலாச் சென்ற 64 வயதான பெண் ஒருவரே இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளார்.

அவர் பயணித்த பேருந்து எரிதிரவம் நிரப்புவதற்காக நிறுத்தப்பட்ட போது, அவர் அதில் இருந்து இறங்கியுள்ளார்.

இதன்போது குறித்த உந்துருளி ஒன்று அவரை மோதியதை அடுத்து, படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தன் பின்னர் உயிரிழந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## இராணுவ வீரர்...

போக்கான நகர்வுகளுக்கு முன்னைய ஆட்சியாளர்கள் இனனமும் இடையூறு செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு இரண்டு தேர்தல்களில் மக்களால் தோற்கடிக்கப்பட்டபின்னரும், ராஜபக்ஷ ஆட்சிக் காலத்து தலைவர்களால் தோல்வியை ஒப்புக கொள்ள முடியவில்லை.

அவர்கள் இந்த நாட்டை தமது தனிப்பட்ட சொத்தாக நினைக்கின்றனர். எப்படியாவது அதிகாரத்துக்கு வர முனைகின்றனர்.

இரண்டு தேர்தல்கள் நடக்கவுள்ள, 2020ஆம் ஆண்டு முக்கியமான ஒன்றாக இருக்கும்.

அடுத்த நாடாளுமன்றத்தை யார் அமைப்பது, அடுத்த ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வது என்று ஜாதிக ஹெல உறுமயவும் ஏனைய பரந்துபட்ட சிந்தனையுள்ள சக்திகளும் தீர்மானிக்கும் என்றார்.

மேலும் இறுதிப்போர் குறித்த குற்றச்சாட்டுக்களை உள்ளக ரீதியிலேயே விசாரணை செய்ய முடியும் என தெரிவித்த சம்பிக்க, போர் வெற்றிக்காக உழைத்த இராணுவத்தினரை சர்வதேச விசாரணை என்ற பொறியில் சிக்க விடமாட்டோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## படை அதிகாரிகள் பலரை...

தின் முடிவில் 50 கவசப் போர் ஊர்திகள் அழிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பாக தகவல் வெளியிட்ட அவர்மேலும் கூறுகையில்,

2009 மே 17ஆம் நாள் அதிகாலை இறுதிச்சமர் நடந்த போது விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பொட்டு அம்மானும் இருந்தார்.

அவர்கள் நந்திக்கடலின் வடக்குப் பகுதி நோக்கிச் சென்றனர். ஆனால், பிரபாகரன் தனது புலனாய்வுப் பிரிவுத் தலைவரை விட்டுச சென்றார். பெரும்பாலும் அவர் சுடப்பட்டிருக்கலாம்.

அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப் புலிகள் கடைசித் தாக்குதலை நடத்திய போது, நான் பீஜிங்கில் இருந்து விமானத்தில் கொழும்பு வந்து கொண்டிருந்தேன.

2009 மே 17ஆம் நாள் காலை 9 மணியளவில் தான் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினேன். மோதல்கள் மே 19ஆம் நாள் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

இறுதிக்கட்டப் போரில் பொட்டு அம்மான் இறந்து விட்டார் என்றே உறுதிப்படுத்துகிறேன்.

போரில் ஏற்பட்ட வெற்றிகளுக்கு மட்டுமன்றி பின்னடைவுகளுக்கும் நான் பொறுப்பேற்கத் தயாராக இருக்கிறேன்.

2006 ஒக்ரோபர் மாதம், முகமாலையில் உள்ள புலிகளின் நிலைகளை அழிப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கையில், 150 இற்கும் மேற்பட்ட அதிகாரிகளையும படையினரையும் இழந்த பின்னடைவுக்கு நான் பொறுப்பேற்கிறேன்.

முகமாலைச் சமரில் இராணுவம் பல கவச போர் ஊர்திகளை இழந்தது.

80 கவசப் போர் ஊர்திகளுடன் தொடங்கப்பட்ட போர், மூன்று ஆண்டுகளின் பின்னர், 2009 மே மாதம் முடிவுக்கு வந்த போது, 30 கவச ஊர்திகள் மட்டுமே எஞ்சியிருந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## நண்பர்களுடன்...

கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் 20 வயதான ஸ்டான்லி எனும் இளைஞன என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை குறித்த பகுதி ஆழம் குறைந்த பகுதி எனவும் பி.ப. 3.00 மணிக்கு காணாமல் போன இளைஞன் பி.ப. 5.00 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,281)

## பெறுபேறு...

பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தனியார் விண்ணப்பதாரிகளுக்கான மாதிரி விணணப்பங்களை எதிர்வரும் காலத்தில் ஊடகங்கள் ஊடாக வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரண தர பெறுபேறுகள் நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்டதுடன் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளை பார்வையிட முடியமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ.எம்.ஜே.புஷ்பகுமார குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## பல்கலை. வெளிவாரி பட்டப்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாடுகளுக்கிணங்க பல்கலைக்ழக பாட விதானங்களை முற்றாக மாற்றியுள்ளோம்.

அதனால் தான் 2 வருடங்களாக புதிய மாணவர்களை அனுமதிக்கவில்லை. தற்போது புதிதாக மாணவர்களை இணைத்துக்கொள்ள விளம்பரங்கள் செய்துவருகிறோம்.

பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்டப் படிப்பிற்கான பதிவுகளைமேற்கொண்டவர்கள் சிலர் தொழில், குடும்ப பொறுப்புக்களால் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தும் பரீட்சைக்கு சமூகமளிப்பதிலை. இதனால் நீண்ட காலமாக பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்யாமல் இருக்கின்றார்கள்.

எனவே பாடவிதானத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டவுள்ள காரணத்தால கடந்தகாலங்களில் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான பதிவுகளை மேற்கொண்டிருப்பவர்கள் எதிர்வரும் நான்கு வருடங்களிற்குள் பட்டப்படிப்புக்களைப்

23ஆம் பக்கம் பார்க்க....

## ‘கோத்தபாயவே...

மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்தி, கொள்ளையிட்ட பஷில் ராஜபக்ஷ பற்றியும், வெள்ளை வான் மூலம் பல மக்களை கடத்தி கொன்றுகுவித்த கொலையாளியான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பற்றியுமே நான் விமர்சித்துவந்தேன்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மதிப்பிற்குரிய ஒருவர். அவரை இந்த நிலைக்கு தள்ளியது பஷிலும் கோத்தாவும் தான். மறைந்த மாதுலுவாவே சோபித தேரரின பேச்சைக் கேட்டு அதற்கேற்ப நடந் திருந்தால் மகிந்த இன்றும் ஜனாதிபதிதான்.

அண்மையில் ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிரணியினர் கூட்டம் வெற்றிகரமாகவே அமைந்தது.

அதற்கும் எனக்கும் தொடர்பில்லை என்றாலும், இதுதான் உண்மை. அத்தோடு, மேர்வின் சில்வா என்பவர் மரணித்தபோது தான் அரசியலை விட்டு விலகுவார்.

அதுவரை நான் அரசியலை வட்டு விலகப் போவதில்லை. இதேவேளை, பிரதமர் ரணில் திருடனோ, கொள்ளையடிப்பவரோ அல்லது கப்பம் பெறுபவரோ இல்லை.

அவரால் நாட்டை கட்டியெழுப்ப முடியுமென நாம் நம்புகிறோம். ஆகவே நாட்டை கொண்டுசெல்ல அவருக்கு இடமளிக்க வேண்டும் என்றார். (செ-12)

## கூட்டு எதிரணியின் கூட்டத்...

மான துமிந்த திஸாநாயக்க, இக் கூட்டத்தில்கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழு கூடி ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனுமதியின்றி இக்கூட்டத்தில் கலந்து கொண்டமையானது கட்சியின் யாப்புக்கு முரணான செயற்பாடு. கட்சியின் உயர்வான இடமாக கருதப்படும் மத்திய செயற்குழுவின் தீர்மானங்களை சவாலுக்குட்படுத்தும் வகையில் செயற்படுவது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கீர்த்திக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயலாகும்.

ஆகையினால் இந்த விடயம் குறித்த உண்மையான தகவல்களைத் திரட்டி அதனை ஆராய்ந்து கட்சியின் யாப்பிற்கு அமைய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கடமையாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு எடுக்கும் தீர்மானங்களுக்கு முரணாக தனிப்பட்ட தேவைகளுக்காக கட்சியை பிளவுப் படுத்த எவருக்கும் இடமளிக்க முடியாது.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராலோ அல்லது செயலாளராலோ தனிப்பட்ட தீர்மானம் எடுக்க முடியாது. கட்சி என்ற அடிப்படையில் மத்திய செயற்குழுவுக்கே அந்த அதிகாரம் உண்டு.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுபபினர்கள் என்ற வகையில் கட்சியை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அதனை அனைவரும் நன்கு அறிவர்.

எனவே ஹைட்பார்க் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் குறித்து ஆராய்ந்து மத்திய செயற்குழுமுடிவெடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக அக் கட்சி இரண்டாகப் பிளவுபடும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக அக்கடசியின் சிரேஷ்ட உறுப்பனர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக கூட்டு எதிர்க் கட்சிகள் நாடுபூராகவும் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளன. (செ-12)

சிறுநீரகம் தேவை
22 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு உடனடியாக B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. இரக்க குணம் உடையவர்கள் தர விரும்பினால் உடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு
0750406320 / 0217914498
0722269876
(3954)

கணக்கீடு
AP. பகீரதன்
B.B.A (FM SPL.)
A/L 2018 - புதிய பிரிவு
Tue, Thur :- 4 - 5 P.M
ஆரம்பம் நாளை
22.03.2016 செவ்வாய்
மாலை 4 மணி
IBS சுண்டுக்குளி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்)
T.P : 0774598499
(3958)

O/L துரித மீட்டல் வகுப்புக்கள்
24/03/2016 வியாழக்கிழமை
காலை 7.30 மணிக்கு ஆரம்பம்
(C-4078)
சதா பொன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைப்பேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
March 26 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி முதல் 26, 27, 28, 29 ஆகிய நான்கு தினங்களிள்
Smart Phone கள் உற்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.
2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியழித்த முதல்தர ஆசிரியர்
Ganesh Sir
பெறுமதியான Certificate வழங்கப்படும்
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலாருக்கும் வயதெல்லை இல்லை ஆரம்ப அறிவு ஆங்கிலம் தேவையற்றது
ஆசன முன் பதிவுக் கட்டணம் 1000/-
பாடநெறி கட்டணம் 11,500/-
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.
iCS Study Overseas 77, Clock Tower Road, Jaffna
பதிவுகளுக்கு 077-6131358
(C-4075)

எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், சுன்னாகம்
2015 O/L
24 பேர் 9A
(3959)

கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்
(ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்ப்பாணம்)
2ம் ஆண்டின் இனிய நிறைவில் ...
விஷேட விலைக்குறைப்பில் இம்மாதம் முழுவதும்.. பல்வேறு உணவுகளும்...

| | | |
|---|---|---|
| சிக்கன் பிறைட் றைஸ் | ~~300~~ | 190 |
| சிக்கன் இடியப்ப கொத்து | ~~240~~ | 190 |
| சிக்கன் பிட்டு கொத்து | ~~240~~ | 190 |
| மரக்கறி கொத்து | ~~110~~ | 90 |


இன்னும் பல ...
(பார்சல்களுக்கு மட்டும்)
21.03.2016 இல் வாடிக்கையாளர்களுக்கு குளிர்பானம் + சுவீட் இலவசம்
தொடர்பு : 0778890888
(3960)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

29)  இங்கு நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் பரப்பளவில் என்ன பங்காகும்.


1) 1/5 2) 2/6 3) 1/4

30) 30-32 வரையான வினாக்களில் கோலத்தை அவதானித்து வெற்றிடத்துக்கு வரவேண்டியவற்றை தெரிவு செய்க.





1) IX 2) XII 3) XIV

31)




1) 40 2) 38 3) 46

32) பின்வரும் எழுத்துக்கள் மீது மையைப் பூசி அச்சிடுமாறு புள்ளிக்கோடு வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது கிடைக்கும் எழுத்து யாது?




1) AHI IHA 2) AHI AHI 3) IHA IHA

33) பாடசாலை ஒன்றில் எப்போதும் காணப்படுபவை

1. மாணவர்கள் 2. கட்டடங்கள் 3. ஆசிரியர்கள்

34 ஆம் 35 ஆம் வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடை தருக.

| மாணவிகள் | தமிழ் | கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|---|---|
| A | 65 | 54 | 40 |
| B | 69 | 50 | 48 |
| C | 85 | 70 | 63 |
| D | 90 | 82 | 75 |

34) தமிழ் பாடத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளியினை இறங்குவரிசைப்படுத்தினால்

1) 69,85,90,65 2) 90,85,69,65 3) 85,90,60,69

35) 50 இற்கு குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் யார்?

1) AC 2) AB 3) AD

36) கடிகாரம் ஒன்றின் மணித்தியால முள்ளும் நிமிடமுள்ளும் ஒன்றின் மீது ஒன்று மிகக் கிட்டியதாக அமைந்த நேரம்?

1) 4.30 மணி 2) 4.20 மணி 3) 04.05 மணி

37) தாயார் ஒருவர் தன்னிடமுள்ள 1/2 பங்கை புத்தகங்கள் வாங்கிச் செலவழித்தார். அதன் பின்னர் எஞ்சிய பணத்தில் 1/2 பங்கை கோயிலுக்கு பூசைத் தட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கினார். மீதிப் பணத்தில் 150.00 ஆடைகள் தைக்க கூலி கொடுத்தார். தற்பொழுது அவரிடம் 75.00 ரூபா பணம் உள்ளது. தயாரிடம் ஆரம்பத்திலிருந்த பணம் எவ்வளவு.

1) ரூபா 900.00 2) ரூபா 450.00 3) ரூபா 675.00

38) 2014 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டின் வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

1) 52 2) 51 3) 53

**தரவுகளை அவதானித்து பொருத்தமான விடையைக் காண்க.**


| | |
|---|---|
| 500ml(பால்) + 250 ml (தேங்காய் எண்ணெய்)=70 | 500ml(பால்) + 500 ml (தேங்காய் எண்ணெய்)=110 |

39) 4 லீற்றர் பாலின் விலை யாது?

1) 240.00 ரூபா 2) 320.00 ரூபா 3) 80.00 ரூபா

40) இப் பெட்டியில் அடுக்கத்தக்க ஒரு பக்க நீளம் 2cm ஐக் கொண்ட சதுரமுகிகளின் மிகக் கூடிய எண்ணிக்கை யாது?

1) 26 2) 18 3) 24




◆◆◆

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளைய வலம்புரியில் (22.03.2016) பிரசுரமாக்கப்படும்.**



# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.03

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-I தமிழ்க் கல்விக் கழகம் நேரம்:-45 நிமிடங்கள்


பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

- ➢ எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களை நன்கு விளங்கி அதற்கேற்ப விடையளித்தல் வேண்டும்.
- ➢ உமது பெயர் அல்லது சுட்டெண்ணை உரிய இடத்தில் தெளிவாக எழுதுக.
- ➢ செய்கை வேலைகளுக்காக வேறு ஒரு தாளைப் பயன்படுத்துக.

01 ஆம் 02 ஆம் வினாக்களில் தரப்பட்ட உருவுடன் தொடர்புடைய சொற்கூட்டத்தை தெரிவு செய்க.

01) 



1. அழகு,துணி,பெறுமதி
2. துணி,இலவசம்,பாதுகாப்பு
3. வெயில்,மழை,பாதுகாப்பு

02) 



1. கடல்,கலங்கரை விளக்கம்,வேகம்
2. பயணம்,காற்று,கடல்
3. கடல்,மீன்,கரை

03ஆம் 04ஆம் வினாக்களில் தம்மிடையே குறைந்த தொடர்புள்ள உருக்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

03).

1. 
2. 
3. 

04)

1. 
2. 
3. 

05) கண் ⟶ பார்த்தல் எனின் தோல்

1. கேட்டல் 2. உணர்தல் 3. சுவாசித்தல்

பின்வரும் கருத்தை உணர்த்தும் பழமொழியைத் தெரிவு செய்க.

06) குற்றம் புரிந்து தண்டனை பெற்ற ஒருவர் மீண்டும் அத்தவறை செய்யமாட்டார்

1. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
2. அடாது செய்பவர் படாதுபடுவர்
3. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.

07) காலநேரம் யாருக்காகவும் காத்திருக்க மாட்டாது

1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
2. ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா?
3. கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்

**பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்ட 08,09,10 ஆம் வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க**

தாமரை மலரின் நறுமணம்
மீனின் வாசனை துர்நாற்றம்
இரண்டும் வளர்வது ஒரேநீரில்
நல்லதும் கெட்டதும் நம்நாவில்

08) பாடலின் படி நல்லதும் கெட்டதும் என இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது
1.நீரும் மீனும் 2.நறுமணமும் துர்நாற்றமும் 3.தாமரையும் மீனும்


09) தாமரை என்பதன் ஒத்தசொல்
1.புஸ்பம் 2.கமலம் 3.சரஸ்வதி

10) பாடலின் படி நல்ல விடயங்களும் கெட்ட விடயங்களும் நடைபெறக்கூடியது
1.வாசனையினாலாகும் 2.நீரினாலாகும் 3.நாவினாலாகும்


11) 11ஆம் 12ஆம் வினாக்களில் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடைய சொற்கூட்டத்தினை தெரிவு செய்க.
A.தபாற்காரன் B.வேலைக்காரன் C. மாணவி D.நடிகர் E.குறத்தி F.நடிகை
1.ACD,BEF 2.FCD, BCD 3.ABD, CEF

12) A.வாள் B.தூக்குகுண்டு C. சுத்தியல் D.சாந்தகப்பை E.உளி F.மட்டப்பலகை
1.FCD,BCD 2.EFD, ACD 3.ACE,BDF


13) கமல், விமல், அமல், நிமல், ஷமல் ஆகிய ஐவரும் தமக்குள் புத்தாண்டு வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர். மொத்தமாக பரிமாறப்பட்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை.
(1) 20 (2) 25 (3) 5


(14)


எனும் குறியீட்டில் குறிக்கப்படும் எண்?
(1) 361 (2) 613 (3) 163

(15)


(1) 36 (2) 54 (3) 27

(16)

இவ்வுரு ஒருபக்க நீளம் 4 cm அகலம் 2cm கொண்ட இரண்டு செவ்வக வடிவங்களால் ஆனது. அதன்படி இவ்வுருவின் சுற்றளவு யாது?
(1) 18 cm (2) 22 cm (3)20 cm

(17) தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்றை வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



**18 ஆம் 19 ஆம் வினாக்களில் தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.**

(18)
1) நீதிபதி / வழக்கறிஞர் / குற்றவாளி
2) அதிபர் / ஆசிரியர் / பாடசாலை
(3) பயணி / பேருந்து / வைத்தியர்

(19)
1) தம்புரா / வயலின் / கிற்றார்
2) தபேலா / மிருதங்கம் / தவில்
3) தாளம் / வயலின் / உடுக்கு





(20) நிலையில்லா தன்மையைக்கூற ஏற்ற உவமானம்
1) கல்லில் எழுதிய எழுத்துப்போல 2)நீரில் எழுதிய எழுத்துப் போல 3) காற்றில் பறக்கும் பஞ்சு போல

(21) அதிவேகமாகப் பயணஞ் செய்யும் வாகனங்களிடம் பொலிஸ் அதிகாரிகளால் தண்டப்பணம் அறவிடப்படும். அவ்வாறு செய்வதற்கான காரணம்
1) சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கு
2) அரசாங்கத்துக்கு வருமானம் ஈட்டிக் கொடுத்தல்
3) திடீர் விபத்துக்களைத் தவிர்த்தல்

(22) பெரும்பாலான வீடுகளில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. இதற்குரிய பிரதான காரணமாக இருக்கக்கூடியது.
1) வீட்டில் பிள்ளைகளுடன் விளையாடுவதற்கு
2) வீண் விரயமாகும் உணவைக் கொரிப்பதற்கு
3) வீட்டின் பாதுகாப்புக்காக வளர்த்தல்

(23) கமலாவின் தந்தை ரவியாவார். ரவியின் மனைவி மாலா ஆவாள். மாலாவிற்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர் எனின்
1)கமலாவிற்கு இரண்டு சகோதரர்கள் இருக்கின்றார்கள்
2)ரவிக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள்
3) ரவிக்கு ஒரு பிள்ளையும் மாலாவிற்கு இரண்டு பிள்ளைகளும் இருக்கின்றார்கள்


(24) இவ்வுருவை விரித்துப் பார்க்கும்போது தென்படும் விதம்



(25)


பெரிய சதுரமுகி, சிறிய சதுரமுகி என்பவற்றின் நிறைகளின் கூட்டுத்தொகையும் வித்தியாசமும் அருகிலுள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி


என்பவற்றின் பெறுமதி
1) 1250g 2) 1000g 3) 1350g

★ அமீனா பாடசாலையிலிருந்து தனது வீட்டிற்கு சென்ற பாதையைப் பின்வரும் உரு காட்டுகிறது. அதன்படி கீழேயுள்ள வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




26) அமீனா அதிகமான தடவைகள் எந்த திசையை நோக்கிப் பயணஞ் செய்திருந்திருக்கிறாள்.
1.மேற்குத்திசை 2. வடக்குத்திசை 3. கிழக்குத்திசை

27) மிகக்குறைவான தடவைகள் அமீனா பயணித்த திசை யாது?
1. வடக்குத்திசை 2.கிழக்குத்திசை 3. கூறமுடியாது

28) நான்கு திசைகளுள் அமீனா பயணிக்காத திசை யாது?
1.தெற்குத்திசை 2.மேற்குத்திசை 3.கிழக்குத்திசை